Koviloor Digital Library

வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்

ஆய்வுப்பதிப்பு

தொகுதி - 3

கோவை

Acc No: 43959
A:2,11

பதிப்பு
அ. சதீஷ்

Koviloor Digital Library

Koviloor Digital Library

81/1

வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்

ஆய்வுப்பதிப்பு

தொகுதி – 3

கோவை

பதிப்பு
அ. சதீஷ்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 43959

வெளியீடு
தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்
21, 'லட்சுமி', சத்யசாய் நகர்,
மதுரை - 625 003

Koviloor Digital Library

தாமரை பிரதர்ஸ்
மீடியா பிரைவேட் லிமிடெட்

தலைப்பு
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் - ஆய்வுப் பதிப்பு

வகை
கோவை

பதிப்பாசிரியர்
அ. சதீஷ்

பதிப்பு
முதல் பதிப்பு: ஆவணி, சோபகிருது, கலி - 5125 / ஆகஸ்ட், 2023

அளவு & பக்கங்கள்
B5 (17.6 cm x 25 cm) - 162

ISBN
978-93-92601-77-4

புத்தக எண்
TB0301

நூல் வடிவமைப்பு
கதிர் & மு.சுந்தரலிங்கம்

அட்டை வடிவமைப்பு
ரெ. கார்த்திகேயன்

ஓவியம்
விஷ்ணு

விலை
ரூ. 180

வெளியீடு
தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்
21, 'லட்சுமி', சத்யசாய் நகர்,
மதுரை - 625 003.

தொடர்புக்கு
Toll Free 1800 425 7700 (7:00 am - 7:00 pm)
75500 09565 (whatsapp only)

Copyright Thamarai Brothers Media P.Ltd.,

இந்த புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளர், எழுத்தாளர் அனுமதியின்றி நகல் எடுக்கவோ, மறுபதிப்பு செய்யவோ, டிஜிட்டல் ஊடகங்கள் வாயிலாக வெளியிடவோ, டிஜிட்டல் வடிவில் பகிரவோ கூடாது. இந்த புத்தகத்திற்கான காப்புரிமை தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்-க்கு கொடுக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

81/1

பதிப்பு உருவாக்கக் குழு

ஆலோசகர்கள்

தவத்திரு குமரகுருபர சுவாமிகள்
தலைவர், சிரவை கௌமார மடாலயம், கோவை.

பேராசிரியர் சு. வேங்கடராமன்
மேனாள் தமிழ்த் துறைத்தலைவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி
இணையாசிரியர், தினமலர்.

திரு. சௌந்திர. சொக்கலிங்கம்
உதவியாசிரியர், தினமலர்.

முனைவர் கி. ஜெயகுமார்
சுவடியியல் அறிஞர்.

பதிப்பாசிரியர்

அ. சதீஷ்

ஆய்வாளர்கள்

ஈ. உமா
மு. சுந்தரலிங்கம்
வே. தமிழரசு
வி. அகிலா

கணினி அச்சு

ச. வாசுகி

நூல் மற்றும் அட்டை வடிவமைப்பு

மு. சுந்தரலிங்கம் & ரெ. கார்த்திகேயன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

81/1

பொருளடக்கம்

பதிப்பாளர் உரை 7

பதிப்புரை 13

நூலாசிரியர் வரலாறு 27

1. திருச்செந்தூர் அகப்பொருட் கோவை 33
2. திருப்புகலூர் பஞ்சரத்தினக் கோவை 105
3. குமாரபுரி குகன் மும்மணிக் கோவை 119
4. புதுவை சித்திவிநாயகர் மும்மணிக் கோவை 129
5. திருவரங்க மும்மணிக் கோவை 141

பாடல் முதற்குறிப்பு அகராதி 150

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்பாளர் உரை

தமிழ் சமய, இலக்கிய, அரசியல் வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு மிக மிக முக்கியமான காலகட்டம். ஆங்கிலேயர் எழுச்சி, தீவிரமான மதமாற்றம், சமயவாதிகளின் கருத்துப் போர், அடுத்தடுத்து ஏற்பட்ட பஞ்சங்கள், கடும் வறுமை, அறத்தின் வீழ்ச்சி, தமிழை விட வடமொழியே உயர்ந்தது என்ற ஒரு தரப்பினரின் செல்வாக்கான தொடர் பிரசாரம், பழைய வாழ்க்கை முறை முற்றிலும் மறைந்து புதிய வாழ்க்கை முறை தோன்றியமை எனப் பல பிரச்னைகள் சமூகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன.

அச்சுக் கருவி கண்டுபிடிக்கப்பட்டு அது பயன்பாட்டுக்கு வந்தபின், கிழக்கிந்திய கம்பெனி மூலம், கிறிஸ்தவ மிஷனரிகள் நூல்கள் வெளியிட்டு வந்தனர். 1832ம் ஆண்டுதான் சுதேசிகளும் அச்சகங்கள் அமைத்து நூல்களை அச்சிடலாம் என அனுமதி அளிக்கப்பட்டது. அதன்பின் ஏற்பட்ட மாற்றங்கள், தமிழ்ச் சமூகத்தையே புரட்டிப் போட்டன. நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், வெளியீடுகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு தோன்றியது.

இக்காலகட்டத்தில், ஆறுமுக நாவலர் (1822 - 1879), மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815 - 1876), வள்ளல் இராமலிங்க அடிகள் (1823 - 1874), சூளை சோமசுந்தர நாயகர் (1846 - 1901), வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898) ஆகிய ஐந்து ஆளுமைகள் தோன்றி, சமூகத்தின் போக்கையே மாற்றினர்.

ஆறுமுக நாவலர், கிறிஸ்தவ மிஷனரிகளோடு இருந்து கல்வி பயின்றதாலும் அவர்களுடன் பணியாற்றியதாலும் சமகாலப் பிரச்னையான மதமாற்றத்தை எப்படித் தடுப்பது என்பதை அவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டார். அதோடு பள்ளிகள் நிறுவி பொதுக்கல்வியையும் சைவ சமயக் கல்வியையும் பரப்பும் தொண்டிலும் ஈடுபட்டார். இவரது தொண்டு சமூகம் மற்றும் சைவ சமய நோக்கில் அமைந்தது.

'பத்து கம்பர்' எனப் போற்றப்பட்ட மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, புலவர்கள் பலரை உருவாக்கினார். அவர்களில் சிறந்தோராக,

Koviloor Digital Library

தியாகராசச் செட்டியார், தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் உள்ளிட்டோர் வெளிப்பட்டனர். சமகாலத் தமிழ்க் கல்வி உலகையும் இவர்கள் இயக்கினர். இவர்கள் மூலம் தமிழ் இலக்கிய உலகம் புத்தெழுச்சி பெற்றது. பிள்ளையின் தொண்டு தமிழ் இலக்கிய உலகத்தில் அமைந்தது.

வள்ளல் இராமலிங்க அடிகள், ஜீவகாருண்யம், சோதி வழிபாடு ஆகியவற்றைப் பரப்பினார். தமது 6ம் திருமுறைப் பாடல்கள் மூலம், புனித நூல்கள், சமயக் கட்டமைப்புகள், உருவ வழிபாடு ஆகியவற்றின் மீது விமர்சன பூர்வமான கருத்துகளை முன்வைத்தார். அவை பெரும் விவாதத்தை உருவாக்கின. அவற்றின் தாக்கம் இன்றளவும் தொடர்கிறது. இவரது தொண்டு, சமூகம் மற்றும் ஆன்மிக நோக்கில் அமைந்தது.

சூளை சோமசுந்தர நாயகர், சமய உலகில் ஒப்பற்ற சிங்கமாகத் திகழ்ந்தார். தமிழகம் முழுவதும் பல சைவ சபைகளை உருவாக்கியதும், நால்வர் குருபூஜைகளைக் கொண்டாடியதும் அவற்றின் மூலம் சைவ சமய உலகம் புத்தெழுச்சியை அடைந்ததும் இவரது பெருந்தொண்டுகள். இவரது மாணவரான மறைமலையடிகள் பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கம் உருவாக்கியதற்கு இவரது கருத்துகளே அடிப்படையாக அமைந்தன. இவரது தொண்டு சைவ சமய உலகில் அமைந்தது.

இவர்களின் சமகாலத்தவரான வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், இவர்களை விட வேறுபட்டு சிந்தித்து சமூகத் தொண்டாற்றினார். இவர் ஆங்கிலக் கல்வி பெறவில்லை. இவருக்கு ஆங்கில நாகரிகப்படி அமைந்த கல்வி நிறுவனங்களோடு தொடர்பில்லை. அரசு அதிகாரிகளோடு பழக்கமில்லை. ஆயினும் தனது முற்போக்கு கருத்துகளை மேற்கண்ட நான்கு பேரை விட ஆணித்தரமாக முன்வைத்தார்.

வறுமையாலும் பஞ்சத்தாலும் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல் அறத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததைக் கண்ட சுவாமிகள், ஜீவகாருண்யத்தையும் வாழ்வியல் அறத்தையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

சுவாமிகள் தமிழ் இலக்கிய உலகில் வேறு எவரும் அதுவரை செய்திராத புதிய நூல்களைப் படைத்தார்.

1. ஆங்கிலேயரின் கொடூர ஆட்சியை எதிர்த்து 100 பாடல்கள் கொண்ட 'ஆங்கிலியர் அந்தாதி' என்ற நூலைப் பாடினார். அதில்,

Koviloor Digital Library

ஆங்கிலேயர், எவ்வளவு கொடுமையானவர்கள், அவர்களால் மக்கள் படும் துயரங்கள் என்ன என்பதை விவரித்திருப்பார். அவர்களை அழிப்பதை மட்டுமே வரமாகத் தர வேண்டும் என இறைவனிடம் கேட்டார். அதேபோல் ஒரு கீர்த்தனையையும் பாடினார்

2. வாய்மொழிக் கதைகளின் அடிப்படையில், புலவர்களின் வரலாறு களைத் தொகுத்து, 'புலவர் புராணம்' பாடினார்

3. அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு ஆகிய மூன்று இலக்கண நூல்களை இயற்றினார்

4. பல்வேறு புதுமைக் கவிகளை - குறிப்பாக - எண்கூற்றிருக்கை, ஒன்பது கூற்றிருக்கை, தசாங்கக் கூற்றிருக்கை - பாடினார்

5. தமிழின் உயர்வை நிரூபிப்பதற்காகவே, 'தமிழ் அலங்காரம்' பாடினார்

6. கௌமார நெறிக்கு உரிய நூல்களை எழுதினார்

7. தன் வரலாறாக, 'குருபரதத்துவம்' என்ற நூல் பாடினார்

8. சமகாலத்திற்கேற்ப, அரசியல் கருத்துகளைப் பதிவு செய்யும் 'அரசாட்சி' என்ற நூலை எழுதினார்

9. திருக்குறள் அடிப்படையில் வாழ்வியல் அமைய வேண்டும் என்ற எண்ணத்தில், 'மனுநெறித் திருநூல்' இயற்றினார்

10. ஆயிரம் பாடல்களாகக் கொண்ட நூல்கள் இயற்றினார்

11. தேவார மூவருக்குப் பின் அதிகளவில் தலங்களைத் தரிசித்து பாடல்கள் பாடினார்

அதேபோல் வேறு எவரும் பேசியிராத கருத்துகளையும் சமகால நிகழ்வுகளின் மீதான விமர்சனங்களையும் தம் நூல்களில் பதிவு செய்தார்.

1. உயிர்ப்பலி இடப்படும் வேத வேள்விகளை மிகமிகக் கடுமையாக எதிர்த்தார்

2. எத்தகைய மகான்களாக இருந்தாலும் விமர்சன நோக்கோடு அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் கேள்விகள் எழுப்பினார் (புலவர் புராணம்)

3. வண்ணம் எனப்படும் சந்தப் பாடல்களில் வடமொழி கலந்தால் அதன் இனிமை குன்றும் எனவும் வடமொழி கலந்திடாத தமிழ் எனவும் முதன்முதலில் தனித்தமிழ் பற்றிப் பேசினார்

Koviloor Digital Library

4. வைணவர்களின் தென்கலை, வடகலை இடையிலான மோதல்களைப் பதிவு செய்து அவை வேண்டாம் என வெளிப்படையாகக் கூறினார்
5. தமிழ்ப் புலவர்கள் வெறும் அறிவாளிகளாக மட்டும் நின்றுவிடாமல் உபாசனை மூலம் தெய்வ சக்திகளையும் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்
6. புதிய இலக்கண நூல்களில் பழமையைப் போற்றியதோடு காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய கருத்துகளையும் பதிவு செய்தார்

இவரது பாடல்கள் மொத்தம் 49 ஆயிரத்திற்கும் மேற்பட்டவை. கடந்த நூற்றாண்டில், அவற்றில் சில நூல்களே அச்சாகியுள்ளன. மீதமுள்ளவற்றை திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பாக கொண்டு வரும் திட்டம், கடந்த 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அதன் முதற்கட்டமாக சென்னை தரமணியில் இயங்கிவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் கோவை சிரவணபுரம் கௌமார மடாலயமும் இணைந்து, சுவாமிகள் எழுதிய பிள்ளைத்தமிழ் இலக்கியங்களை முதல் தொகுதியாகவும், கலம்பகங்களை இரண்டாவது தொகுதியாகவும் வெளியிட்டன.

அதையடுத்து இத்திட்டத்தில், 'தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் வாயிலாக, சுவாமிகளின் கோவை நூல்கள் திரட்டப்பட்டு 3வது தொகுதியாக வெளியாகிறது. இதைத் தமிழன்னைக்கு செய்யும் பெருந்தொண்டாகவும் இந்நிறுவனம் கருதுகிறது.

இந்நிறுவனம் மூலம், வண்ணச்சரபம் சுவாமிகளின் நூல்களை வெளிக் கொண்டு வர நிதியுதவி அளித்த புண்ணியச் செல்வர்கள்:

1. இரா. ஸ்ரீநிவாஸன், தினமலர்
2. ஸ்ரீவித்யா கி. அர்ஜுன், சென்னை
3. அ. ஸுந்தரம் ஐயர், சென்னை
4. ஸு. ஸ்வாமிநாதன், சென்னை
5. ஆ. லட்சுமிபதி, தினமலர்
6. ஹேமா ராமசுப்பு, சென்னை
7. ல. ஆதிமூலம், தினமலர்

Koviloor Digital Library

8. செந்தூர்வேலன், ஜி.எம்.எஸ் கன்ஸ்ட்ரக்ஷன்

9. டாக்டர். பொன்ராஜ் ஷண்முகநாதன், சென்னை

10. ஓம் எனர்ஜி மேனேஜ்மெண்ட் ஸிஸ்டம்ஸ்

11. டாக்டர். தி. பெருங்கோ, சென்னை

12. இரா. கிருஷ்ணமூர்த்தி, தினமலர்

தமிழுக்கும் சமயத்திற்கும் இவர்கள் செய்துள்ள இந்த ஒப்பற்ற தொண்டு, உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ்ச் சமூகத்தால் போற்றப்பட வேண்டிய ஒன்று. தமிழ் உள்ளளவும் இவர்களின் பெயர்களும் இந்தத் தொண்டும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் அறிஞர்களும், ஆய்வாளர்களும், இலக்கண வல்லார்களும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் இந்நூல்களைப் பயன்படுத்தி பலகட்ட ஆய்வுகளை வெளிக்கொணர வேண்டும். அதன்மூலம் 19ம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் தொடர்பான ஆய்வுகளில் மேலும் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்ச முடியும் என நம்புகிறோம். நன்றி!

தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்புரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலமையாளர்களில் ஒருவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம் முதலிய பல துறைகளில் அழுத்தமான பங்களிப்பினை நிகழ்த்தியுள்ளார். இவர்தம் படைப்புகளில் சில, இவர் வாழ்ந்த காலத்திலேயே அச்சு வாகனம் ஏறின. காகிதங்கள் மிகுதியான புழக்கத்திற்கு வந்திருந்த பொழுதும் இறுதிவரை ஓலைச்சுவடிகளிலேயே தம் படைப்புகளைப் பதிவு செய்துள்ளார். தம்முடைய காலத்தில் நிலவிய இலக்கிய வகைமைகள் அனைத்திலும் பாடல்களைப் புனைந்துள்ளதுடன் பழங்காலத்தில் நிலவிய அரிதான சில இலக்கிய வகைகளிலும் பாடல்களைப் புனைந்துள்ளார். யாப்பும், இசையும், பொருளும் இவரது பாடல்களில் இழைகின்றன. நுட்பமான, அரிதான யாப்பு வடிவங்களை மீட்டெடுத்து கவிபுனைந்துள்ளதுடன் தமக்கு முந்தைய அறிவு மரபுகள் அனைத்தையும் ஆவணப்படுத்தவேண்டும் என்ற வரலாற்று ஓர்மையுடனும் செயல்பட்டுள்ளார்.

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் அறுவகை இலக்கணம், புலவர் புராணம் முதலான சில நூல்களே மீண்டும் மீண்டும் அச்சாகியுள்ளன. பல நூல்கள் ஒருமுறை மட்டுமே அச்சாகியுள்ளன. இவ்வாறு அச்சான நூல்களில் சில தற்பொழுது எங்குமே கிடைக்காத நிலையிலுமுள்ளன. இன்னும் பல்லாயிரக்கணக்கான பாடல்கள் பதிப்பிக்கப்படாமல் ஓலைச்சுவடிகளிலேயே உள்ளன. இதுவரை அச்சாகாத படைப்புகளைப் பதிப்பிக்க வேண்டும் என்பதுடன் அச்சான படைப்புகளையும் சுவடியுடன் ஒப்பு நோக்கித் திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பு கொண்டு வரவேண்டியது அவசியமான பணியாகிறது. அச்சான படைப்புகள் பலவும் பல்வேறு சிக்கல் நிறைந்தனவாக உள்ளன. மூலத்திற்கு நெருக்கமான பதிப்புகளாக அவைகள் அமையவில்லை.

இந்நிலையில் தற்பொழுது கிடைக்கும் தண்டபாணி சுவாமிகள் படைப்புகள் அனைத்தும் (சில சுவடிகள் நீங்கலாக) அவர்தம் கைப்பட எழுதிய ஓலைச்சுவடிகளில் உள்ளன. இச்சுவடிகள் கோவை கௌமார மடாலயத்திலும் திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலும் முறையாகப்

Koviloor Digital Library

பாதுகாக்கப்படுகின்றன. ஆசிரியர் எழுதிய மூலச்சுவடியே கிடைத்துள்ளது. இச்சுவடி எழுதி முடிக்கப்பட்ட பின்னர் மீண்டும் இவரால் சில திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே இவரது படைப்புகளுக்குப் பாடவேறுபாடுகள் கிடையாது. என்றாலும் சுவடியை வாசித்தவர்களிடையே சிற்சில மாறுபாடுகள் உருவாகியுள்ளன. சந்தி பிரித்துப் பல படைப்புகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சீரான முறையியல் பின்பற்றப்படவில்லை.

ஒரு படைப்புக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட முறையியல்களில் பதிப்புகள் வரவேண்டியது அவசியமாகும். எந்தவொரு பதிப்பும் தற்காலிகத் தன்மை கொண்டவை என்பதோடு பதிப்பாசிரியரின் புலமைப் பின்புலச் சார்பும் கொண்டவை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

தமிழ்ப் பயில்வு மரபில் நிகழ்ந்த சில விவாதங்கள் மரபான பயில்வுமுறையில் சில மாற்றங்களை உருவாக்கின. குறிப்பாகச் சந்தி பிரிக்காமலும் சீர் முதலிய யாப்பமைதி குன்றாமலும் அமைந்த பதிப்புகள் வெளியாகின. இப்பதிப்புகள் இசை ஒழுங்கு கொண்டவை என்பதோடு நினைவில் நிறுத்துவதற்கு எளிதானவை. மற்றொருபுறம் பொருள் புரிதலுக்கு எளிதாகச் சந்தி பிரித்த பதிப்புகள் வெளியாகின. இரண்டும் இரு வேறு வாசகத் தளத்திற்கானவை என்பதாக அடையாளப்படுத்தப்பட்டன. நவீனக் கல்வி பொருளுக்கு மட்டுமே முதன்மை அளித்தது. எனவே சந்தி பிரித்த பதிப்புகளே வாசகருக்கு எளிமையானவை என்னும் கருத்து முதன்மைப்பட்டது. இதனால் பழம்பனுவல்களை அவற்றின் மூல வடிவில் புரிந்துகொள்ளும் பயிற்சி தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு அருகிவிட்டது.

காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த அனைத்து நாடுகளும் தங்களுக்கான கல்வி மரபுகளை விவாதித்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் இன்று உருவாகியுள்ளது. நமது பாரம்பரிய மரபில் உள்ள அனைத்து அறிவுமரபுகளையும் மீட்டு எடுக்க வேண்டியது அவசியமான பணியாகிறது.

இச்சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் மரபான பழம்பண்பாட்டுச் சூழலின் அறிவு மரபுகளைத் தாங்கி நிற்கும் படைப்புகள் ஆகும். அச்சு ஊடகம் விரைவாகப் பரவத் தொடங்கிய காலத்தில், காகிதம் புழக்கத்தில் வந்துவிட்ட காலத்தில், தம் படைப்புகள் தம் காலத்திலேயே அச்சு வாகனம் ஏறிய பொழுதும் ஓலை

Koviloor Digital Library

என்னும் ஆற்றல் வாய்ந்த ஊடகத்தையே இறுதிவரை பயன்படுத்திய பண்பாட்டுத் தொடர்பாளராகத் தண்டபாணி சுவாமிகள் விளங்குகின்றார்.

இவரது படைப்புகள் பல்வேறு அடுக்கு நிலைகளில் அமைந்துள்ளன. மிகக் கடினமான சந்தத்தில் அமைந்துள்ளது போன்றே மிக எளிமையான நடையிலும் அமைந்துள்ளன. இவரது படைப்புகளை வெவ்வேறு பதிப்பு முறைகளில் வெளியிட முடியும். குறிப்பாகச் சந்தி பிரித்துப் பதிப்பித்தல், உரை எழுதிப் பதிப்பித்தல், வரலாற்றுக் குறிப்புகள் கொடுத்துப் பிற நூல்களோடு ஒப்பு நோக்கிப் பதிப்பித்தல், ஒரு நூலுக்குள்ளேயே சந்தி பிரிக்காமலும் சந்தி பிரித்தும் பதிப்பித்தல் என்று பல்வேறு பதிப்புகளைக் கொண்டுவர வேண்டியுள்ளது.

இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகச் சுவடியை மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திருத்தப் பதிப்பு வெளிவர வேண்டியது முதன்மையான பணியாகும். இந்த அடிப்படையான பதிப்பைக் கொண்டு வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு முறையியல்களில் பலப்பல பதிப்புகளைக் கொண்டுவர முடியும். அந்த அடிப்படையில் தண்டபாணி சுவாமிகள் கைப்பட எழுதிய சுவடிகளில் இருந்து இவரது படைப்புகளை முறையாகப் பதிப்பித்து வெளியிடும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

இதுவரை அச்சான தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளைத் தொகுத்தும் ஓலைச்சுவடிகளில் இருந்தவற்றை கௌமார ஆதீனப் புலவர் கிருஷ்ணய்யர் அவர்கள் பிரதி செய்து வைத்திருந்த கையெழுத்துப் பிரதியைக் கொண்டும் தட்டச்சு செய்யப்பட்டது. அவைகள் பெரும்பாலும் சந்தி பிரிக்கப்பட்டு இருந்ததன் காரணமாகவும் யாப்பு இயைபு இல்லாமல் இருந்ததாலும் அவற்றை மூலச்சுவடியைக் கொண்டு ஒப்பு நோக்கி இப்பதிப்பு அமைக்கப்பட்டது. இதன் காரணமாக அதிக காலமும் கடும் உழைப்பும் இதற்குத் தேவைப்பட்டது. அச்சாகாத, கையெழுத்துப் பிரதி இல்லாத படைப்புகள் மூலச் சுவடியிலிருந்து நேரடியாகவே எழுதப்பட்டதுடன் மீண்டும் மீண்டும் மூலச்சுவடியுடன் ஒப்பு நோக்கப்பட்டன. இவற்றின் காரணமாகச் சுவடி வாசிப்பில் இயல்பாக நேரும் பிழைகள் பெருமளவு குறைந்தன. யாப்பு நோக்கி அமைக்கும் போது பிழைகள் சரிசெய்யப்பட்டன. இதன் காரணமாகத்தான் ஆதாரப் பதிப்பு அல்லது மூலப்பதிப்பு என்பது சீர் முதலிய யாப்பமைதியோடு கூடிய பதிப்பாக அமைவதே சிறந்த பதிப்பாகிறது. இதிலிருந்து அடுத்த கட்ட பதிப்புகளுக்குச் செல்லலாம். எனவே பின்னர் வெளிவரவுள்ள பல்வேறு

Koviloor Digital Library

வகையான பதிப்புகளுக்கான மூலப் பதிப்பாக இதனைக் கொண்டுவர வேண்டும் என்று திட்டமிடப்பட்டு இப்பதிப்பு கொண்டுவரப்படுகிறது.

தண்டபாணி சுவாமிகள் இலக்கணம், இலக்கியம், சமயம், தத்துவம், உரை எனப் பல தளங்களில் படைப்புகளை உருவாக்கியுள்ளதால் இவரது பாடல்களின் தொகையை அறுதியிட்டுக் கூற இயலாத சூழல் உருவாகியுள்ளது. இவரது பாடல்களின் தொகையைக் கூறிய அனைத்து அட்டவணைகளும் முன்முயற்சிகளும் போதாமை நிறைந்தவையாகவே உள்ளன. சுவடிகளில் சில தவறியமை, சுவடிகள் இடம்பெயர்ந்தமை, சுருள் வடிவச் சுவடிகளில் (ஓரிரு ஓலைகள்) சில இன்னும் வாசிக்கப்படாமை ஆகிய காரணங்களால் இப்பணி முழுமை அடையவில்லை. இப்பதிப்பு வரிசை நிறைவடையும் பொழுதே இவரது பாடல்களின் தொகையைத் துல்லியமாகக் கூறமுடியும்.

தண்டபாணி சுவாமிகள் தமிழகம் முழுவதும் பயணம் செய்துள்ளார். பல்வேறு ஊர்களில் உள்ள கடவுளர்கள் மீது பாடல் புனைந்துள்ளார். சில ஊர்களில் மிகுதியான பாடல்களும் சில ஊர்களில் குறைவான பாடல்களும் பாடியுள்ளார். ஊரோடு தொடர்பு இல்லாத பொதுநூல்கள் பலவும் பாடியுள்ளார். எனவே ஊர்ப்பெயர் அடிப்படையிலான பதிப்பு என்பது சரியான முறையியலில் அமையவில்லை. மேலும் கால வரிசையிலான பதிப்பும் இவரது படைப்புகளுக்கு சாத்தியமில்லை. சில முதன்மையான நூல்களை மட்டும் இவை முன், பின் என அறியமுடிகிறதே அன்றி அனைத்து நூல்களுக்கும் கால வரிசை அமைக்க முடிவதில்லை. இதன் காரணமாக இலக்கிய வகைமை அடிப்படையில் - பிள்ளைத்தமிழ், கலம்பகம், தூது, அந்தாதி, கோவை, மாலை, அலங்காரம், சதகம், பதிகம், இலக்கணம், புராணம், நீதிநூல் என இவரது படைப்புகளை அளிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

அந்த அடிப்படையில் சுவாமிகள் இயற்றிய ஐந்து பிள்ளைத்தமிழ் நூல்கள் ஒரு தொகுதியாகவும் ஆறு கலம்பக நூல்கள் மற்றொரு தொகுதியாகவும் 2019ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழி பதிப்பிக்கப்பட்டன. இந்த மூன்றாவது தொகுதியில் ஐந்து கோவை நூல்கள் பதிப்பிக்கப்படுகின்றன.

கோவை இலக்கியம்

கோவை என்ற சொல்லுக்குப் பலபொருள் உண்டு. தமிழ் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றுக்கும் அப்பெயர் கொடுக்கப்பட்டது. 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று இறைவன் மாணிக்கவாசரைக் கேட்ட

Koviloor Digital Library

தொடர் புகழ்பெற்றது. தமிழில் கிடைக்கும் முதல் கோவை நூல் மாணிக்கவாசகர் எழுதிய திருக்கோவையார் என்னும் கருத்து நிலவுகிறது.

அகப்பொருளைப் பாடுவதற்கு ஏற்ற வடிவமாக முதலில் இவ்விலக்கியம் உருவாக்கப்பட்டது. நானூறு கலித்துறைப் பாக்களில் களவு, கற்பு என்னும் இருவகை அமைப்புகளைக் கொண்டு முதல், கரு, உரிப்பொருள் கொண்டு பாடப்படுவது. அகப்பொருள் துறைகளை வரிசைப்படுத்திப் பாடும் அமைப்பு நிலையை இதில் காணமுடியும்.

இதன் பிறகு கோவை வளர்ச்சியடைந்து ஒரு துறையை மட்டும் தனி இலக்கியமாகப் பாடும் நிலையையும் அடைந்தது. அகப்பொருள் மட்டுமன்றிப் புறப்பொருள் குறித்த கோவைகளும் உருவாகின. மும்மணிக்கோவை, பஞ்சரத்தினக் கோவை என்னும் வகைகள் அதில் முதன்மையானவை. தண்டபாணி சுவாமிகள் தாம் எழுதிய அகப்பொருள் கோவையை, முந்தைய மரபில் இருந்து மாறுபட்டு பாடும்படி முருகக் கடவுளே கனவில் கூறியதாகக் குறிப்பிடுகிறார்.

வண்ணச்சரபரின் கோவை நூல்கள்

சுவாமிகள் இயற்றிய ஐந்து கோவை நூல்கள் தற்பொழுது கிடைக்கின்றன. தற்பொழுது கிடைக்காத திருவையாறு மும்மணிக் கோவை என்னும் நூலைப் பற்றிய குறிப்பினை அவரது குருபர தத்துவம் நூலின் வழி அறியமுடிகிறது.

பொழில்மலி திருவை யாற்றினுக் கழைத்தார்
போம்வழி யினிற்புதுப் பாக்கள்
கழிமதம் பொழியும் கண்டரக் கோட்டைக்
கணபதி ஆதியர்க்(கு) உரைத்து
விழியினில் அனலுள் ளார்வளர் அவ்வூர்
மேவி அன்னவற்கொரு பதிகம்
விண்டுபின் அவ்வூர் மேவிய முருக
வேட்கொரு மும்மணிக் கோவை
கண்டுநேர் மொழியாற் றொடுத்தனன்.

- குருபர தத்துவம், பாடல் 31-32

திருவையாறு மும்மணிக் கோவை என்னும் இந்நூல் ஓலைச் சுவடியாகவோ, அச்சு நூலாகவோ தற்பொழுது கிடைக்கவில்லை. இந்நூல்

Koviloor Digital Library

குறித்த வேறு தகவல்களும் கிடைக்கவில்லை. சுவாமிகளால் ஆற்றில் வீசப்பட்ட சுவடிகளில் இதுவும் ஒன்றாக அமைந்திருக்கலாம்.

தற்பொழுது கிடைக்கும் கோவை நூல்கள் ஐந்து. அவை,

1. திருச்செந்தூர் அகப்பொருட் கோவை
2. திருப்புகலூர் பஞ்சரத்தினக் கோவை
3. குமாரபுரி குகன் மும்மணிக் கோவை
4. புதுவை சித்திவிநாயகர் மும்மணிக் கோவை
5. திருவரங்கம் மும்மணிக் கோவை

திருச்செந்தூர் அகப்பொருட் கோவை

கோவை கௌமார மடாலயச் சுவடிக்கட்டு எண் 16 இல் 46ஆம் ஏடு தொடங்கி 77ஆம் ஏடு முடிய இந்த அகப்பொருட் கோவை எழுதப்பட்டுள்ளது. நான்கு காப்புப் பாடல்களும் ஒரு நூற்பயன் பாடலும் உட்பட இந்நூலில் 441 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்செந்தூர் கோயிலை மையமிட்டு பதினாறு இலக்கியங்களைச் சுவாமிகள் பாடியுள்ளார். முருகனுக்கு பன்னிரண்டு. அவை,

1. வெண்பாவந்தாதி
2. சிலேடை வெண்பா
3. திரிவந்தாதி
4. யமகவந்தாதி
5. பதிற்றுப்பத்தந்தாதி
6. செந்திநாயக சதகம்
7. உலா
8. நவரசமஞ்சரி
9. அகப்பொருட் கோவை
10. தசாங்க வகுப்பு
11. கௌமார விஜயம்
12. சந்தமாளிகைத் திருப்புகழ்

தெய்வானைக்கு ஒன்று

1. குஞ்சரிமாலை

Koviloor Digital Library

வள்ளிக்கு ஒன்று

1. பிள்ளைத்தமிழ்

வீரவாகுவிற்கு இரண்டு

1. வாளலங்காரம்
2. வண்ணப்பதிகம்

எனப் பாடியுள்ளார்.

அகப்பொருட் துறைகளை உள்ளடக்கிய இக்கோவையை முன்னோர்கள் பாடிய முறையால் மட்டுமின்றி சில புதிய முறைகளையும் உள்வாங்கிப் பாடியுள்ளதாகத் தாம் பாடிய தன் வரலாற்று நூலான குருபர தத்துவத்தில் கூறுகிறார்.

. . . அகப்பொருட் கோவையொன்றைத் துவக்கு மந்நாள்
செவ்வண்ண வேல்வந்து முன்னொருவர் சொன்னபடி
செப்பே லுனதுளத்தி
லெவ்வண்ணம் வருமோவவ் வண்ணமோ தென்றானிசைத்தேன்
- குருபர தத்துவம்

ஒவ்வொரு கோவை நூலும் தன்னளவில் சில புதிய துறைகளையும் புதிய முறைகளையும் உள்வாங்கியே இயற்றப்பட்டுள்ளன என்பது தமிழிலக்கிய மரபு உணர்த்தும் செய்தியாகும். நானூற்று முப்பத்தாறு துறைகள் இந்நூலில் பாடப்பட்டுள்ளன. பிற நூல்களில் இடம்பெறாத சில புதிய துறைகள் இதில் இடம்பெற்றுள்ளன. பிற அகப்பொருட் கோவைகளோடு இணைத்து விரிவாக ஆய்வு செய்து சுவாமிகளின் தனித்தன்மையை வெளிக்கொணர வேண்டியது அவசியமான பணியாகும்.

திருச்செந்தூர் அகப்பொருட் கோவை என்னும் இந்நூல் 1925ஆம் ஆண்டு திருவாமாத்தூர் கௌமார சபையாரால் பதிப்பிக்கப்பட்டது. திருச்செந்திற்கோவை, கௌமாரவிஜயம், கௌமாரத் தொகை ஆகிய மூன்று நூல்கள் அடங்கிய தொகுப்பில் இந்நூல் திருச்செந்திற்கோவை என்னும் பெயரில் பதிப்பிக்கப்பட்டது. தண்டபாணி சுவாமிகளின் மாணவரும் மகனுமாகிய செந்திநாயகம் பிள்ளை அவர்கள் இந்நூலைச் செப்பமாகப் பதிப்பித்தார். இந்நூலினை வெளியிட பொருளுதவி அளித்தவர் தஞ்சாவூர் ஷாப்பு ப.வெ.வெங்கட்ராமராஜா அவர்கள் குமாரரும் சிதம்பரம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் ஆகிய

Koviloor Digital Library

வ.வெ.பழனிசாமிராஜா அவர்கள். பிழையற்ற இப்பதிப்பையும் சுவடியுடன் ஒப்பு நோக்கிய பொழுது ஓரிரு இடங்கள் திருத்தமடைந்தன.

திருப்புகலூர் பஞ்சரத்தினக் கோவை

கோவை கௌமார மடாலய சுவடிக்கட்டு எண் 24இல் 8ஆம் ஏடு தொடங்கி 12ஆம் ஏடு முடிய இக்கோவை எழுதப்பட்டுள்ளது. வெண்பா, கட்டளைக் கலித்துறை, கொச்சகக் கலிப்பா, கலித்தாழிசை, அகவல் ஆகிய ஐந்து பாவகைகளில் ஒரு பாவிற்குப் பத்துப் பாடல்கள் வீதம் ஐம்பது பாடல்களால் அமைக்கப்பட்டுள்ளது இந்நூல். இதற்கு முன் இந்நூல் பதிப்பானதாக அறியமுடியவில்லை. எனவே ஓலைச்சுவடியிலிருந்து பெயர்த்தெழுதப்பட்டு மீண்டும் மீண்டும் சுவடியுடன் ஒப்பு நோக்கப்பட்டு திருத்தமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

குமாரபுரி குகன் மும்மணிக் கோவை

இந்நூல் கோவை கௌமார மடாலயம் சுவடிக்கட்டு எண் 22 இல் 21 ஆம் ஏடு தொடங்கி 26 ஆம் ஏடுவரை எழுதப்பட்டுள்ளது. திருப்பனந்தாள் அருகிலுள்ள சேங்கனூர் என்று தற்பொழுது அழைக்கப்படும் இவ்வூரின் பழைய பெயர்கள் சேய்ஞலூர், குமாரபுரி என்பதாகும். இவ்வூரிலுள்ள கடவுளர்கள் மீது 277 பாடல்களைச் சுவாமிகள் பாடியுள்ளார். இதில் ஒன்று குமாரபுரி குகன் மும்மணிக் கோவை என்பதாகும். அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய பாவகைகளில் மும்மணிக் கோவை இயற்றப்பட்டுள்ளது. ஒரு பாவிற்குப் பத்துப்பாடல்கள் என்ற அடிப்படையில் முப்பது பாடல்களும் காப்பு, நூற்பயன் என இரண்டு பாடல்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் 1964 இல் திருவாமாத்தூர் கௌமார சபையின் வழியாகப் பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்பு தற்பொழுது கிடைக்கப் பெறவில்லை. 1957 இல் மு. பசுபதி அவர்கள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் பருவ இதழில் (தொகுதி 10, பகுதி 2) இந்நூலைப் பதிப்பித்துள்ளார். 1999இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடியியல் பட்டயப்பேற்றிற்காக நா. செல்வகுமார் என்பவர் பதிப்பாய்வு ஏட்டை உருவாக்கியுள்ளார். இந்த இரண்டு பதிப்புகளும் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் இருந்த பிரதிச் சுவடியையும் கையெழுத்துப் பிரதியையும் ஆதாரமாகக் கொண்டு பதிப்பிக்கப்பட்டவை. மூலச்சுவடியை முழுமையாக ஒப்பு நோக்கித் திருத்தமாக இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

புதுவை சித்திவிநாயகர் மும்மணிக் கோவை

புதுச்சேரி ஆவண வீதியில் கோயில் கொண்டுள்ள சித்திவிநாயகர் மீது பாடப்பட்டுள்ள இம்மும்மணிக் கோவை நூல் கோவை கௌமார மடத்திலுள்ள சுவடி எண் 27 இல் 12 ஆம் ஏடு தொடங்கி 16 ஆம் ஏடு முடிய எழுதப்பட்டுள்ளது. மும்மணிக் கோவையின் அமைப்பை ஒட்டி அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை யாப்பில் 30 பாடல்களும் காப்பு, நூற்பயன் என இரண்டு பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் 1971 ஆம் ஆண்டு தண்டபாணி சுவாமிகளின் பெயரனார் சங்கரலிங்கம் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. புதுவை – அகத்தியர் இல்லத்தின் அகத்தியர் ஆராதனை விழாவின் நினைவுமலராக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. சந்தி பிரிப்பதில் சீரான முறையியல் இப்பதிப்பில் பின்பற்றப்படவில்லை. எனவே மூலச்சுவடியுடன் ஒப்பு நோக்கி இப்பதிப்பு திருத்தமாக அமைக்கப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் ஒரு அகப்பொருட் கோவையும் ஒரு பஞ்சரத்தினக் கோவையும் மூன்று மும்மணிக் கோவையும் இடம் பெற்றுள்ளன. இதில் இடம் பெற்றுள்ள செய்யுள்களின் எண்ணிக்கை - 587.

திருவரங்கம் மும்மணிக் கோவை

திருவரங்கம் கோயில் குறித்துத் தண்டபாணி சுவாமிகள் ஆயிரம் பாடல்கள் இயற்றி அதற்குத் திருவரங்கத் திருவாயிரம் என்னும் பெயரினைச் சூட்டினார். இத்திருவாயிரத்தில் இடம்பெற்றுள்ள ஒரு கோவை நூலே இந்த மும்மணிக்கோவையாகும். கௌமார மடாலயச் சுவடிக்கட்டு எண் 11 இல் 37ஆம் ஏடு தொடங்கி 39ஆம் ஏடு முடிய இக்கோவை எழுதப்பட்டுள்ளது. திருவரங்கத் திருவாயிரம் நூலின் ஒரு பகுதியாக இக்கோவை அமைந்துள்ளதால் காப்புப்பாடலும் நூற்பயனும் தனியாக இடம்பெறவில்லை.

தண்டபாணி சுவாமிகளின் குமாரர் செந்தினாயகம் பிள்ளையவர்கள் 1919ஆம் ஆண்டு திருவரங்கத் திருவாயிரம் மற்றும் திருமகளந்தாதி ஆகிய இரண்டு நூல்களையும் ஒரே தொகுப்பாகப் பதிப்பித்தார். செம்மையாக அமைந்த இப்பதிப்பில் மும்மணிக்கோவையும் இடம்பெற்றுள்ளது. இராதாபுரம் இல.மீ. நாராயண ரெட்டியவர்களின் பொருளுதவியைக் கொண்டு சென்னை பி. ஆர். ராமையர் அச்சுக்கூடத்தில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

Koviloor Digital Library

நன்றி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்திற்குச் சுவடிகள் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தபொழுது பேராசிரியர் சு.வேங்கடராமன் அவர்கள் கோவை கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகளிடம் என்னை அறிமுகப்படுத்தினார். மடாலயத்தில் உள்ள தண்டபாணி சுவாமிகளின் ஓலைச்சுவடிகளைப் பார்வையிட அனுமதித்ததுடன் மின் எண்மம் செய்யப்பட்டிருந்த சில சுவடிகளின் மென்படியையும் அளித்துதவினார்.

தண்டபாணி சுவாமிகளின் பதிப்பாகாத நூல்களை வெளிக்கொண்டு வரலாம் என்ற எண்ணத்துடன் இதுவரை பதிப்பான நூல்கள் குறித்த விவரங்களை முனைவர்பட்ட ஆய்வாளர் சு. கலைவாணி அவர்களைக் கொண்டு சேகரிக்கத் தொடங்கினோம். செம்பாதிக்கும் மேல் அவரது படைப்புகள் பதிப்பாகாமல் இருந்தன.

இந்நிலையில் கோவை கௌமார மடாலயத்தின் தலைவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வருகை புரிந்தார்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அவரோடு நிகழ்த்திய உரையாடலில் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் அனைத்துக்கும் ஆய்வுப்பதிப்பு கொண்டு வருவதன் தேவை குறித்தும் முறையியல் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது. கௌமார மடாலயத்தின் உதவியால் சுவடியில் இருந்த படைப்புகள் பெயர்த்தெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டன. இதன் விளைவாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின்வழி பிள்ளைத்தமிழ் நூல்கள் ஒரு தொகுதியாகவும் கலம்பகம் நூல்கள் ஒரு தொகுதியாகவும் வெளியிடப்பட்டன. எனவே இத்திட்டப்பணி தொடங்க முதற் காரணமாக அமைந்தவர் கௌமார மடாலயத்தின் தலைவர் **தவத்திரு குமரகுருபர சுவாமிகளாவார்.**

தற்பொழுது இத்திட்டப்பணி 'தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் வழி புத்துயிர் பெறுகிறது. இதற்குக் காரணமாக அமைந்தவர் இந்நிறுவனத்தின் நிருவாக இயக்குநரும் 'தினமலர்' நாளிதழின் இணையாசிரியருமான **திரு. இரா.கிருஷ்ணமூர்த்தி** அவர்கள். ஆய்வுப் பதிப்பின் தேவையை உணர்ந்து இப்பணியை விரைவாக முடிக்க அனைத்து உதவிகளையும் நல்கினார். தொடர்ந்து நூல்களை வெளிக்கொணர அவரது ஊக்கமும் ஆலோசனையும் மிகுதி. **திரு.இரா.கிருஷ்ணமூர்த்தி** அவர்களிடம் இத்திட்டப்பணி குறித்து

Koviloor Digital Library

அறிமுகம் செய்து வைத்து இப்பணியைத் தொடர்ந்து நிகழ்த்த ஆலோசனைகளை வழங்கி வருபவர் 'தினமலர்' நாளிதழ் உதவியாசிரியர் **திரு. சௌந்திர. சொக்கலிங்கம்** அவர்கள்.

பேராசிரியர் **சு. வேங்கடராமன்** அவர்களின் வழிப்படுத்தலும் முதன்மையான இடத்தைப் பெறுவது. இப்பதிப்பு தொடர்பாக கோவை மடாலயத்தில் நடைபெற்ற அனைத்து ஆய்வுக் கூட்டங்களிலும் பங்கேற்று தக்க ஆலோசனைகளை வழங்கியவர் பேராசிரியர் **ஐ. கே. சுப்பிரமணியன்** அவர்கள். தமிழகத்திலுள்ள பல்வேறு நூலகங்களுக்கும் சென்று தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் பதிப்பான நூல்களைத் திரட்டியதுடன் இத்திட்டப்பணியின் முதன்மையாய்வாளராகச் செயல்பட்டு வருபவர் செல்வி **சு. கலைவாணி** அவர்கள். சுவடிகளை ஒப்புநோக்கும் பணியிலும் பாடல்களின் அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துவதிலும் இப்பணியில் ஈடுபட்டவர் முனைவர் **கி.ஜெயகுமார்**. சுவடியைப் பெயர்த்து எழுதுதல், பிழைதிருத்தம் மேற்கொள்ளுதல் எனப் பலநிலைகளில் உதவியவர்கள் திட்ட ஆய்வாளர்கள் கா. முரளி, ஈ. உமா, அ. வீரமணி, மு. சுந்தரலிங்கம், வே.தமிழரசு, வி. அகிலா மற்றும் ஆய்வு நண்பர்களான முனைவர் அ.சண்முகம், ச. கனகராஜ் ஆகியோர்; தட்டச்சு செய்துதவியவர்கள் ச.வாசுகி, மணிச்செல்வி ஆகியோர்; நூலினை வடிவமைப்பு செய்தவர் நண்பர் கதிர்.

இந்த ஒருங்கிணைந்த உழைப்பு தொடர்ந்து வருவதால் தண்டபாணி சுவாமிகளின் அனைத்து படைப்புகளுக்கும் ஆய்வுப் பதிப்பு அடுத்தடுத்து வெளிவருவது உறுதி. இப்பணியில் இவர்களோடு நானும் இணைந்து கொள்வதன்றி எவ்வாறு நவிலுவது நன்றி!

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் — *அ. சதீஷ்*

சென்னை - 600 113. — இணைப்பேராசிரியர்

Koviloor Digital Library

Koviloor Digital Library



வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகள்

தோற்றம்: கார்த்திகை 16, விகாரி, கலி 4941 திருவருட்பேறு: ஆனி 23, விளம்பி, கலி 5000

குருபூசை: ஆனித் திருவோணம்

(28.11.1839 – 05.07.1898)

Koviloor Digital Library

Koviloor Digital Library

நூலாசிரியர் வரலாறு

செந்தமிழ் வளர்த்த புலவர்கள் பலர் தோன்றிய திருநெல்வேலி நகரத்தில் சைவ வேளாளர் மரபில் 22.11.1839 அன்று பிறந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இவரது இயற்பெயர் சங்கரலிங்கம். தந்தை பெயர் செந்தில்நாயகம் பிள்ளை. தாயார் பேச்சி முத்தம்மை. சிறு வயதிலேயே கவிதை புனையும் ஆற்றல் வாய்ந்தவர். தமது எட்டாவது வயதில் சுரண்டை என்னும் ஊரில் குடிகொண்டுள்ள பூமிகாத்தாள் என்னும் அம்மன் மீது வெண்பா யாப்பில் பாடல் பாடினார். இயல்பாகவே கவிதை பொழியும் இவருடைய ஆற்றல் கண்டு இவரது ஆசிரியர் சீதாராம நாயுடு இவருக்கு 'ஓயா மாரி' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டினார். வண்ணப்பாடல்களை மிகுதியாக எழுதிய தனித்துவத்தால் வண்ணச்சரபர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். மேலும் திருப்புகழ் சுவாமிகள், முருகதாச சுவாமிகள், அபர அருணகிரி என்ற பெயர்களிலும் சுவாமிகள் அழைக்கப்பட்டார்.

மரபான கல்வி முறையில் இலக்கணம், இலக்கியம், சமயம், மருத்துவம் போன்ற பல்துறை நூல்களை முறையாக ஆசிரியர்களிடம் கற்றுத்தேர்ந்தார். நூல்களைக் கற்கும் இளம்வயதில் பாடல்களை இயற்றி அவற்றை பனை ஓலைகளில் எழுதிவந்தார். கல்விச்சாலை ஒன்றை அமைத்து மாணவர்களைப் பயிற்றுவித்தார். சோழவந்தான் கந்தசாமி பிள்ளை, சித்திரபுத்திர பிள்ளை, அழகிய சொக்கநாத பிள்ளை, அரன்வாயல் வேங்கடசுப்பு பிள்ளை, ஊற்றுமலை வித்வான் கந்தசாமி புலவர், நாடக மேதை தவத்திரு. சங்கரதாச சுவாமிகள், ஆரியூர் வரதராச பிள்ளை போன்றோர் சுவாமிகளிடம் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றனர்.

தேவார மூவர் மற்றும் அருணகிரிநாதருக்குப் பிறகு அதிகமான தலங்களுக்குச் (222 தலங்கள்) சென்று வழிபாடு செய்து பதிகங்கள் பாடினார். மேலும் ஒரு தலத்திற்குச் சென்றால் அத்தலத்தில் குடிகொண்டுள்ள அனைத்து தெய்வங்களையும் பாடும் வழக்கம் கொண்டவராக இருந்தார்.

முருகப்பெருமான், விநாயகர், சிவன், அம்பிகை, திருமால், சூரியன், மற்றும் கிராமதெய்வங்கள் மீது சமயாதீத நிலையில் எண்ணற்ற பாடல்களை எழுதினார். இவர் ஒரு லட்சம் பாடல்களுக்கு மேல் எழுதியிருப்பினும் அவற்றுள் பாதிக்கும் மேற்பட்ட பாடல்கள் இயற்கை சீற்றத்தாலும் சுவாமிகளால் அழிக்கப்பட்டும் மறைந்து போயின. இன்று கிடைக்கக்கூடிய பாடல்கள் சுமார் 49,000 பாடல்கள் ஆகும்.

Koviloor Digital Library

இவருடைய படைப்புக்கள் பெரும்பாலும் சிற்றிலக்கிய வகைமைச் சார்ந்தவைகளாக உள்ளன. அந்தாதி, கலம்பகம், உலா, சதகம், பதிகம், பிள்ளைத்தமிழ் என பல வகைமைகளைச் சார்ந்தும் பல்வேறு யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தியும் நூல்களைத் தந்தார்.

அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு ஆகிய மூன்று இலக்கண நூல்களை இயற்றினார். மேலும் அறிவிற் சிறந்த பல்வேறு புலவர்களின் வரலாற்றினைத் தொகுத்து 3005 பாடல்களில் 'புலவர் புராணம்' என்ற நூலையும் தனது வரலாற்றினை 'குருபர தத்துவம்' என்னும் நூலாகவும் எழுதினார்.

ஊர்கள் தோறும் சென்று நூல்களை எழுதி வந்த சுவாமிகள் சிறிதுகாலம் பழனித்தலத்தில் தங்கி அங்கு ஒரு மடாலயம் அமைத்தார். 'பழனித் திருவாயிரம்' என்னும் நூலை அத்தருணத்தில் எழுதினார். இவ்வாறு ஆயிரம் என்னும் வகைமைச் சார்ந்து தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம் போன்ற நூற்களையும் எழுதினார்.

அருணகிரிநாதரின் மறுபிறவியாகத் தன்னைக் கருதிக்கொண்டு மிகுதியான சந்தப்பாடல்களை (வேல்விருத்தம், மயில்விருத்தம், ஆறெழுத்தலங்காரம், திருப்புகழ் பதிகங்கள் போன்றவை) இயற்றினார். மேலும் அருணகிரிநாதரின் வரலாற்றினையும் எழுதினார்.

மரபான செய்யுள் வடிவில் நூல்களை இயற்றி வந்த சுவாமிகள் உரைநடை வடிவில் 'சத்திய வாசகம்' என்னும் நூலை எழுதினார். மேலும் முசுகுந்தனின் வரலாற்றினை நாடக வடிவில் 'முசுகுந்த நாடகம்' என எழுதினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவியிருந்த ஆங்கிலேய ஆட்சி மற்றும் ஆங்கிலக் கல்வியை எதிர்க்கும் விதமாக 'ஆங்கிலியர் அந்தாதி' என்னும் நூலை எழுதினார்.

தனது நூல்களை பனை ஓலைகளில் எழுதிவைப்பது மட்டுமின்றி அந்நூல்களை தனது சமகால புலமையாளர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்து அவை குறித்து விவாதித்தும் வந்தார். தம்மிடம் வரும் புலவர்களின் நூல்களை வாசித்து அந்நூல்களுக்குச் சுவாமிகள் சாத்துகவிகள் எழுதிக் கொடுத்தார்.

மயிலம் முருகன் கோயிலில் உருத்திராக்க மாலையை திருமாங்கல்யமாக அணிவித்து சுந்தரத்தம்மையை தனது மனைவியாக ஏற்றுக்கொண்டார். அம்மையாருக்கு பல்வேறு நூல்களை சுவாமிகள் தாமே கற்பித்ததுடன், நூல்களை இயற்றவும் செய்தார். அவர் எழுதிய நூல் பெண்மாட்சி.

Koviloor Digital Library

இவரது சமகாலப் புலவர்களாக விளங்கிய வடலூர் வள்ளலார், வளவனூர் சண்முக சுவாமிகள், ஆறுமுக நாவலர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முதலியார், பூவை கல்யாண சுந்தர முதலியார், மாம்பழக் கவிசிங்க நாவலர் போன்றோருடன் நட்பு பாராட்டினார்.

தமிழகம் மட்டுமின்றி கேரளம், இலங்கை போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்து சமய பேதமின்றி எண்ணற்ற பாடல்களை தந்தவர் தண்டபாணி சுவாமிகள்.

இவர் உருவாக்கிய திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலும் இவர் மாணவர் தவத்திரு இராமானந்த சுவாமிகள் உருவாக்கிய கோவை கௌமார மடாலயத்திலும் இவர் எழுதிய சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. திருவாமாத்தூரில் தங்கி எல்லை தாண்டா விரதத்தை மேற்கொண்ட சுவாமிகள் 05.07.1898இல் முருகப் பெருமான் திருவடியில் இரண்டறக் கலந்தார். இவரது மகன் வழி பெயரனார் தற்பொழுது திருவாமாத்தூரில் வசித்து வருகிறார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

1

திருச்செந்தூர் அகப்பொருட் கோவை

Koviloor Digital Library

Koviloor Digital Library

1

திருச்செந்தூர் அகப்பொருட் கோவை

காப்பு

விநாயகர் துதி

வேண்டுகை யாவு மடியார் பெற்றுய்ய விரைந்துதவி
யாண்டுகை யாதநல் லின்பத்தி லாழ்த்துமருட் செந்திலான்
பூண்டுகைக் குஞ்சிகி மேற்றோன்றுங் கோவைப் பொருள்விரிக்கத்
தூண்டுகைக் குஞ்சர மொன்று முன்னின்று துணைச்செய்யுமே. 1

சரசுவதி துதி

மின்னோடு றழும்வை வேற்செந்திலா னருள்வேட்டு முன்னஞ்
சொன்னோர் வழியி லகப்பொருட் கோவை சொலத்துணியு
முன்னோர் விதந்தெரித்தா னந்தவாறு முடிப்ப தனுக்
கென்னோடு நீதுணை யாவாய் வெண்டாமரை யேந்திழையே. 2

செந்திலாதிபன் துதி

இன்பக் கடலின்றுறை கோடி யென்னு மியல்பறியாத்
துன்பக் கவிஞர்க்குந் தொந்தங்கருதி முன்றோய்ந் தகன்ற
மின்பக் கலெய்த மடலூர்வ ரென்கின்ற வீணருக்கு
மென்பக் குவத்தமி ழாமோ செந்தூரி லிருப்பவனே 3

சுதந்தர யூகப் புலவோர்க்கு முத்தமத் தொண்டருக்கும்
பதந்தர வல்ல நின்மேற் றமிழ்க்கோவை பகரலுற்றே
னிதந்தர ரூரமிழ்தே யென்ன வோங்கு மியல்பளித்தா
ணிதந்தாங் கக்கட லார்க்குஞ் செந்தூரிடை நின்றவனே. 4

நூல்

தலைவன் வாய்பாடு

காண்டல்

சீர்பூத்த செந்திற் குகனருளான் முழுத்திங்க ளொன்றுங்
கூர்பூத்த வேலி ரண்டுங் குன்றிரண்டுங் குமுதமொன்று
மேர்பூத்த காந்தளி ரண்டுங் கமலமிரண்டுங் கொண்டு
கார்பூத்த சந்தன வெற்பரு கொன்று கவின்றந்ததே. 1

Koviloor Digital Library

ஐயுறல்

முக்கண்ணர் பாகத்து மையோ முராரிதன் மொய்குழலோ
வக்கர ரூபமதா விதிநா விலமர்ந் தவளோ
திக்கடங் கப்புகழுஞ் சசியாதிய தெய்வ மின்னோ
மிக்கசெந்தூர்க் குகன்றன் னருளோ விந்த மெல்லியலே. 2

தேற்றம்

கண்ணி மைக்கின்றன கானிலந் தோய்ந்தன கார்குழலி
லண்ணிய தார்மலர் வாடின வேர்வை யரும்பினவால்
விண்ணின ளல்லள் வியன்செந்தில் வாழ்குகன் மெய்யருளான்
மண்ணிடை யென்னிமித் தம்பிறந் தாளிந்த மாதரசே. 3

நெஞ்சொடு கிளத்தல்

மின்போலும் வேலுடைச் செந்தூர்ப்பிரான் சந்த வெற்பருகிற்
பொன்போல நிற்குமிப் பூவைதன் பூண்முலைப் போகம்விழைந்
தென்போ டுடலுமுருகத் தளரு மென்னேழை நெஞ்சே
யன்போட வளிசைந் தாலன்றி யுய்வ தரிதரிதே. 4

மதன்றொழிற் கிரங்கல்

புன்னைப் பொழின்மலி செந்தூரன் சந்தப் பொருப்பருகி
லென்னைத் தொடர்ந்து மலரெய்த மார னெனக்குமய
றன்னைக் கொடுத்தவண் மீதெய்தி லானவன் றானையிடை
முன்னைத் திறமையிவட் கீயலா மெனமுன்ன லுற்றே. 5

பிரமனைப் பழித்தல்

கொம்புறழ் கொங்கை நல்லார் நெஞ்சில் வஞ்சகக் கொள்கையையுந்
தெம்புறு மாடவருட் சகியா மயற்றீ மையையும்
பம்புற வைத்தமையாற் செந்தில் வாழயிற் பண்ணவன்முன்
னம்புயன் றன்றலை நான்கினுங் குட்டியது தகுமே. 6

விழிவலி கூறல்

வல்லாண்மைச் சூலங் கயிறேந்திச் சென்று வதைக்குநமன்
கொல்லாமற் கொல்லும் வகையறியான் கொல்லல் கொன்றெழுப்ப
லெல்லாமிருந்த படியே செயுஞ்செந்தி லெந்தை வெற்பின்
மல்லாருங் கொங்கை மயில்போலுஞ் செய்யிழை மைவிழியே. 7

பார்வைக் கிரங்கல்

கூராரும் வேற்படையாற் கொடுஞ்சூ ரனைக்கொன் றவன்வா
ழேராருஞ் செந்தினகர்ச் சந்த மால்வரை யேந்திழையாள்

Koviloor Digital Library

பாராத வேளையிற் பார்த்துக் கவிழ்கின்ற பண்பைவிட்டு
நேராகப் பார்த்திடும் போதெனைப் பார்க்க நினைத்திலளே. 8

அணுகற் கஞ்சுறல்

வடுத்தாங்கி வாரியினூ டேயெழுந்த பொய்ம்மாப் படவேல்
விடுத்தான் விளங்கு செந்தூர்ச் சந்தமால்வரை மேவுமின்னாள்
கொடுத்தாண் மயன்மிகக் கொண்டே னவளிடங் கொஞ்சிமெல்ல
வடுத்தாலென் சொல்வள்கொல் லோவென்றெ னாவி யலைகின்றதே. 9

குறிப்பறிந்துவக்கை

மதனனு நாணெழிற் செவ்வேள் செந்தூர்ச்சந்த மால்வரையிற்
சதமக னாதிய ருள்ளங் கவருமித் தையனல்லா
ளிதழதுக்கித் தலைசற் றசைக்கின்ற பண்பென் னையவள்
பதமலர்க் காம்பணி செய்கின்ற வாழ்விற் பதிக்கவென்றே. 10

நாணிக்கண் புதைத்தல்

சற்குரு வாவரு செந்தூர்க் குமரன் றடஞ்சிலம்பி
னிற்கு மின்னன்ன நன்னேரிழை யாளென்னை நேரிற்கண்டு
பொற்குடத்தைத் திறந்தாலா லந்தன்னைப் புதைத்துக் கொண்டா
ணற்குறி யீதென நானுவப் பெய்தலி னண்ணலுற்றே. 11

நாண் வியந்துரைத்தல்

வேணிக் கடுக்கைப்பிரான் மைந்தன் செந்தில் விசாகன்வெற்பி
லாணிக் கனகமணிப் பூண் மின்னாளை யடுத்திறைஞ்சிக்
காணிக் கையாயெ னைத்தந்தே னென்றேனது கண்டுமன
நாணிக் கவிழ்ந்து சற்றேதிரிந் தாளதென்னற் றவமே. 12

மடனறிந் துவத்தல்

படங்கொண்ட பாம்பணி பச்சை மயூரப் பரிக்குமர
னடங்கொண்ட செந்தின கர்ச்சந்த வெற்பினணா னெருங்குந்
திடங்கொண்ட சீர்கண்டு னன்றேயெனைத் தனிசெய்த தென்றாண்
மடங்கொண்ட நெஞ்சினண் மாலறிந் தேன்றுயர் மாறியதே. 13

அச்சக் குறியறிதல்

செஞ்சிகி யூருந் திருச்செந்தில் வேலன் சிலம்பகத்து
நஞ்சினுந் தேவரமுதி னுந்தோய்ந்த கண்ணா ரியினைக்
கெஞ்சிய னேகநயங் கூறிமெல் லெனக்கிட்டித் தொட்டே
னஞ்சினள் வேர்வை நுதலூடு முத்தொத் தரும்பியதே. 14

Koviloor Digital Library

பயிற்பெடுத் தோதல்

புள்ளி மயூரப் பரியூர் செந்தூரன் பொருப்பிடத்துக்
கள்ளி யென்மோகத்தி லெண்மடங் காகிய காதலுள்ளத்
துள்ளி ருக்கின்றது தோன்ற வொட்டாமலொட் டாரமிட்டா
ளள்ளியென் மார்பத் தணைத்தே னுடனுவப் பாகினளே. 15

வண்டோச்சல்

தேவினத் தூடுயர் செந்தூரன் சந்தச் சிலம்பிடத்துக்
காவினில் வாவியிற் பூவுண்டு தேனுண்டு கைக்களிற்றின்
மேவிய மும்மத நீருண்டு போமினிம் மின்னளகப்
பூவிலுற்றீர் வண்டு காளிடை பாரம் பொறுக்கரிதே. 16

கலவி மகிழ்தல்

சித்தர் குழாம்புகழ் செந்தூர்க் குமரன் சிலம்பிடத்திற்
பைத்த வராவுற ழல்குன் மின்னாண்முலைப் பாரந்தொட்டுப்
புத்தமிழ் தன்ன விதழுண்டு கொஞ்சிப் பொருவில்கவுண்
முத்தமிட் டின்பமுற்றே னும்பர் மாதரு மோகிக்கவே. 17

கொங்கைத் திறங்கூறல்

அங்கை வைவேலுடைச் செந்தூர்க் குமரனணி வரையின்
மங்கை நல்லாளிளம் பான்மை கருதிமகிழ்ந் தணைந்தேன்
வெங்கை யிருபதுடை யானை முட்டிய வேழமொல்கக்
கொங்கை யினாற்பொரு தாள்பிழைத்தேன் விதிக்கூறு கொண்டே. 18

சுவைநலஞ் சொல்லல்

செக்கச் சிவந்த குகவேடன் செந்திற் றிருச்சிலம்பிற்
றக்கச் சதுமறை வல்லானந் நாளிலென் றன்னிமித்தஞ்
சக்கரை முக்கனி பாகடு பாலமு தந்தமிழ்ச்சீ
ரொக்கப் பிசைந்து செய்தானோ விப்பாவை யுடம்பினையே. 19

இன்பநலங் கூறல்

கந்தா வெனத்துதிப் பார்மலி செந்திற் கடவுளது
சந்தா சலப்பெருஞ் சாரலிற் பேதை தருஞ்சுகமு
மைந்தா றெட்டுப் பதினைந்தொன்று மூன்றெனு மக்கரங்கள்
சிந்தா குலந்தவிர்த்துத் தருபே ரின்பச் சீருமொன்றே. 20

மாதுலன் மாமியைப் பழிச்சல்

ஆறா னனத்தவன் செந்தூர்க்கு மரனணி வரையின்
மாறா தவின்பந் தருவாளைப் பெற்று வளர்த்தவர்கள்

Koviloor Digital Library

பேறா யிரம்பெற்று வானோரும் போற்றும்பெரு மையெய்தி
நூறாண்டும் வாழ்வுற வேண்டுஞ் சற்றேனு நுடக்கமற்றே. 21

காமன் வலியுறுத்தல்

காமனைச் செங்கனற் கண்ணா லெரித்த கடவுளுக்கு
மாமறைத் தாரகஞ் சொன்ன செந்தூரனும் வள்ளிமுன்போய்க்
கோமளக் கொங்கை மயிலே யென்றேத் திக்குனிந்த துண்டே
லியாமதர்க் கண்கொள்ளு மிப்பேதைக் காட்பட லென்வியனே. 22

மனவலி கருதியேங்கல்

மலயக் கிரியில் வருமர மாதர்தம் வாள்பொருகட்
கலகத் தினுமயங் காதவென் சிந்தை கடவுளர்தந்
திலகத் துயர்ந்த செந்தூர்க்கு கன்வெற்பிற் றிகழ்மனிதக்
குலமைக் குழன்மட வாண்மை யல்வாரி குளிக்கின்றதே. 23

ஒருமைகண்டுவத்தல்

வயிரம் புனைந்ததிண் டோளானைத் தேவரை வாழவைக்கு
மயிலொன் றியதடங் கையான் செந்தூர னணிவரையின்
மயிலென்ற சாயலுடை யாட்கு மென்றற்கு மன்னியவா
ருயிரொன் றுடலிரண் டாகிய வண்மை யுரைக்கரிதே. 24

உரித்தெடுத்தோதல்

கயமூர் வலாரி சசியை விட்டாலுங் கமலமல
ரயனாதி யர்கலை மின்னாதி யரையயத் திடினும்
வியனார் செந்தூர்க்குகன் வெற்பிடை வாழும் விளங்கிழைதன்
னயமாதி யவற்றை நண்ணாதிரா தென்றனன் னெஞ்சமே. 25

நடைநலம் பயிறல்

சங்கர தேசிகச் சண்முகன் செந்திற் றடவரையாள்
சிங்கந் தளர்வுற வேழங் குலுங்கச் சிலமலர்கொள்
பங்கயம் பூப்ப விரண்டூசே லாடப் பவளநிறத்
தங்கமடம் பெயர்த்தா ளென்ற னாவி யலமந்ததே. 26

மொழிநலம் புனைதல்

ஆணாதி யாமொரு மூன்றாகியப் புறத்தப் புறமா
மாணாருஞ் சண்முகப் பெம்மான் செந்தூர்ச்சந்த மால்வரையாள்
கோணாத சொல்லமு துண்ணா தவுணரைக் கூட்டிக்கொண்டு
வீணாகப் பாற்கடலைக் கடைந்தா ரன்று விண்ணவரே. 27

Koviloor Digital Library

தலைவன் தலைவிமுற் பகர்தல்

புனைந்துரை விளம்பல்

வண்கனகத் தனிவேற் செந்திலான் சந்தமால் வரையின்
பெண்கள் சிகாமணி நின்முகத் தாக்கம் பெறக்கமல
மொண்கர வெய்யவன்முன் விரிந்தம்பிடை யுற்றுவெள்ளைத்
தண்கதிர் முற்குவிந் தோவா வருமைத் தவஞ்செய்ததே. 28

பொய் பகர்ந்தடுத்தல்

கயிலைக் கடவுள் புதல்வன் செந்தூர் வளர்கந் தனங்கை
யயிலைப் பொரும்விழி யாரணங்கே மலரம் புயமோர்
மயிலைத் துளைக்கவின் றெய்துவிட்டே னிங்கு வந்ததுண்டோ
குயிலைப் பழித்த செவ்வாய் திறந்தோர் மொழிகூறுதியே. 29

இடனிரந்து நிற்றல்

நன்னெஞ்சர் வாழ்திருச் செந்தூரிற் சண்முக நாதன்வெற்பிற்
பொன்னெஞ்சு மேனிப் புணர்முலை யாயிது பொய்யலநீ
யென்னெஞ்சி லுற்றனை யானு மவ்வண்ண மிருப்பதனுக்
குன்னெஞ்சிற் சற்றிடந் தந்தாள வேண்டுமுரிமை வைத்தே. 30

இரங்குமா றியம்பல்

நற்றேரு லாவு மறுகார் செந்தூர னளிர்வரையிற்
பொற்றே சிலங்குடற் பூவையன் னீருங்கட் போற்றியென்னை
விற்றேன் குற்றேவன் மிகச்செய் குவேனொரு வேலையிடச்
சற்றேனு முள்ள மிரங்கு கிலீரிது தர்மமன்றே. 31

தன்றிறங் கூறல்

தனிவேலன் செந்திற் றடவரை மீதொரு சற்றிரங்கிற்
கனிவா யிதழுண் டிறுகத்தழுவிக் கடித்து முத்திப்
பனிமால் வரைநிகர் கொங்கை நெருடிப் பகமளைந்து
குனிவார் சிலைமத னாடல் செய்வேனடி கோமளமே. 32

வலிதணைதற் கிரங்கல்

கொன்றைச் சடைத்தம் பிரான்மைந்தன் செந்திற் குமரன்வெற்பி
லின்றைக் கெனையறியார் போலநின் றனையாதி னுக்கோ
வன்றைக் கொருதர நீயே வலிதி லணைந்தசுக
மென்றைக் கினியடி யேனடை வேனடி யேந்திழையே. 33

Koviloor Digital Library

நிச்சயங் கூறல்

பைந்தோகை யூர்செந்திலான் சந்த வெற்பிற் பனிமொழியே
சந்தோட மாயொரு சொல்லுஞ் சொல்லாதெனைத் தள்ளிவிட்டால்
வெந்தோட முன்றனக் கெய்து மதன்றியு மேதினியோ
ரந்தோவென மடலூர்ந் தேனுமுன்னை யணைவ துண்டே. 34

அடைக்கலம் பகர்தல்

செங்கதிர் வேற்படைச் சேந்தன் செந்தூரிற் சிலம்பினுக்கோர்
மங்கள மாவரு மங்கைநல்லாய் முழுவஞ்சஞ் செய்யேல்
பங்கய மாப்பிண்டி முல்லை குவளைப் பனிமலரா
மைங்கணை மாரனுக் கஞ்சிய நானுன் னடைக்கலமே. 35

துகிற்சோர்வு கூறல்

சேயெனச் சற்குருவென்னச் சிவன்பகர் சேந்தன் செந்தின்
மேயெம்மை யாளும் பிரான் சந்தவெற்பில் விளங்குமின்னே
நீயென்னைப் பார்த்திலை நின்கொங்கை மென்றுகினீக்கி யுன்றன்
றாயெனப் பார்த்து மறைந்த தென்னாவி தவிக்கின்றதே. 36

கைத்தொழிற் கிளத்தல்

அங்கைவை வேற்குகன் செந்தூரிற் சந்தவெற் பாயிழைநின்
கொங்கையைக் கண்டு மகிழ வொட்டா தணிகோலவளைச்
செங்கை செய்கின்றத னான்மெலிந் தேனருள் செய்தனையேற்
சங்கை யற்றன்னவை மார்போ டழுந்தத் தழுவுமன்றே. 37

அலந்தமை தெரித்தல்

வலந்தாங்கும் வேலுடைச் செந்தூரன் சந்தவரைத் தலத்திற்
பொலந்தோய்ந்த பூண்முலைப் பூவைநல்லாய் தொய்யில்
பூத்தமென்றோள்
கலந்தார் வமெய்திக் கனியித முண்டு களிப்பதனுக்
கலந்தேனந் தோவறி யாயோ விரங்கிரங் கன்புவைத்தே. 38

நிலைகண்டிரங்கல்

கற்கும் புலவர் களிகூர்செந்தூர் வளர்கந்தன் வெற்பிற்
பொற்கும்ப நேர்முலைப் பாரஞ் சுமந்து புவியிடத்தி
னிற்கின்ற நின்னடி யென்றலை மேற்சற்று நேரமுற்றா
லெற்கின்ப மெய்துமிது பாவமோ சொல்லி ளங்குயிலே. 39

Koviloor Digital Library

பொருள்வயிற் பிரிவுணர்த்தல்

தெருள்பாண் டரங்கன் முன்னாட்டந்த செந்திற் சிறுவனுண்மை
யருள்வாஞ் சையுற்ற வரிற்சிலர் தாமும வாவுகின்ற
பொருள்வேண் டிப்போய் வரல்வேட் டேனின்னெஞ்சைப் புழுக்கிநையே
லிருள்கூந் தலம்பிடி போல்விளை யாடுமெழிற் றிருவே. 40

போர்வயிற் பிரிவுணர்த்தல்

சீரேறுஞ் செந்தி னகராளும் வேலன்றிருச் சிலம்பிற்
காரேறு மென்குழற் கன்னிநல்லாய் கடற்கண் கலங்கேல்
போரே றனைய வொன்னார் சிலரூரிற் புகுந்துழக்கி
மாரேறு மாண்மை யுடன்றிறை கொண்டுவரு மட்டுமே. 41

துறவரைப் பழித்தல்

வல்விற் கரத்தர் பலர்போற்றுஞ் செந்தில் வரதன்வெற்பிற்
செல்விக்கு நேரெழிற் சேயிழையே நின்றிரண் முலைசெய்
மல்வித்தையைக் கனிவாய்த் தேனைக் கண்டுண்ணும் வாழ்வறியார்
கல்விப் பயனுந் தவப்பேறு மேலெனக் காண்பவரே. 42

ஊருறவு பேர்வினாவல்

ஆரேய்ந்த சென்னிப்பிரான் மைந்தன் செந்திலறு முகவன்
சீரேய்ந்த சந்தன வெற்பூடென் கண்முற் றிகழன்னமே
யூரேதுனக் கிங்குறவே துன்றாய் தந்தையுன் றற்கிட்ட
பேரேது சொல்லணுப் போலென்றன் மீதுபிரியம் வைத்தே. 43

தன்பதி யுணர்த்தல்

மந்தரக் கொங்கை மயிலே செந்தாமரை வாழன்னமே
சுந்தரக் கோகிலமே யென்ற னூரினைச் சொல்லிடக்கேள்
கந்தன் வைவேற் படையொன் றேந்திக் காக்குங் கவினுடைத்தாய்ச்
செந்தமிழ்ச் சந்தன வெற்போ டொளிருந் திருச்செந்திலே. 44

மணங்கருதி வினாதல்

மன்றந் தொறும்புகழ் செந்தூரன் சந்தன மால்வரையின்
மின்றங்கல் போற்றிகழ் மெல்லி நல்லாயுன்னை வேறொருவர்க்
குன்றந்தை தாய்நல்க வுன்னிலவ் வாற்றிற்கு மொப்புவையோ
வென்றன் புணர்ப்புரைப் பாயோவென் றேங்கிய தென்மனமே. 45

கருத்து வினாவல்

பொன்னூர்ப் புத்தேளிரைக் காத்த செந்தூரன் பொருப்பிடத்திற்
றென்னூ ரனேர்விழிச் சிற்றன்னமே மலர்ச்செந் திருவே

Koviloor Digital Library

யென்னூர்க் கென்னோடு மின்னேவந்து வாழ்தற் கிசைகின்றதோ
வுன்னூர்க் கெனைவரச் சொல்கின்ற தோவுன்ற னுட்கருத்தே. 46

விழைவுரை யென்கை

பாரணங் கின்முகம் போன்ற செந்தூரன் பனிவரையின்
வாரணங் கண்ட முலையாற் பொருதென் மனங்கவரு
மாரணங்கே நின்னவாவை யின்றோ திடிலைந் தருவா
மூரணங் கார்க்கரி தானாலு மீகுவ னுண்மையிதே. 47

ஊடல் கண்டிரங்கல்

பாடிக் கொண்டாடு நர்க்கேற்ற செந்தூரன் பருப்பதத்தி
னாடிக் கொண்டாண்ட நளினமின்னே யுன்னை நம்புமென்பா
லூடிக் கொண்டா யுள்ளுடைந் தேனிவ்வூட லிலுற்றபயன்
கூடிக் கொண்டா லல்லவோ வென்றுநூல்பல கூறினவே. 48

வெறுப்பு விலக்கல்

மறுத்தவிர் சீர்திகழ் செந்தூரன் சந்தன மால்வரையிற்
கறுத்த மென்கூந்தலங் கன்னி நல்லாய்தருங் காதன்மிகப்
பொறுத்தல மந்தனன் கண்டா யெனையொரு புல்லனென
வெறுத்து விடேல்வெறுத் தாலென தாருயிர்விண் புகுமே. 49

இடமணித்தென்றல்

பூரண கும்பக்குட நேர்பொற் பூண்முலைப் பூவைநல்லாய்
காரமர் பூம்பொழி லொன்றுகண்டா யரைக்காதஞ் சென்றால்
வீரவை வேலன் புகழ்சேர் செந்தூரும் விரிகடலுங்
கூரறி வார்தொழுங் கோயிலுஞ் சந்தனக் குன்றமுமே. 50

வேழங்கண்டயர்ந்தமை விலக்கல்

காழரைப் பாதபஞ் சூழ்சந்த வெற்புடைக் கந்தன்செந்தூர்
வாழ வைக்கின்ற நலத்தின தேவரை மானவரும்
வேழமென் செய்யுநின் கண்போற்றி கழென்கை வேலுளது
வீழவெல் வேனடுத் தாலஞ் சிடேலிள மெல்லியலே. 51

கள்வர் பயநீக்கல்

வெள்வனச் சேவலங் கையான் செந்தூரன் வியன்கிரியிற்
புள்வருக்கம் பலபூண்ட பொன்னே மதன்போர் விலக்கி
யுள்வரி தாமின்ப மீந்தாயந் நன்றி யுளத்துளதாற்
கள்வருக் கஞ்சவிடேன் விறற்றோ ளுண்டு காப்பதற்கே. 52

Koviloor Digital Library

உறையுழிக்கிரங்கல்

நீடும் புனல்வளஞ் சேர்செந்தி லெந்தை நெடுங்கிரியி
லாடுங் கலாப மயில்போற் குலாவு மருட்கன்னியே
வீடுங் கனக மணிமேடை யாதியும் விட்டு வெட்சிக்
காடும் புனமுமிட மாகக் கொண்டதென் காரணமே. 53

வேளை வினாதல்

சேய்துவர்க் குன்றன்ன செந்தூரன் சந்தச் சிலம்பிடைவா
ழாய்துகிற் கோமளமே யன்னமே யெனதா ருயிரே
நீதுயிலா தென்வர வேகருது நன்னே ரமுநின்
றாய்துயில் வேளையுஞ் சொல்லி வைத்தானந் தமக்குநன்றே. 54

இடன்வினாதல்

பாவியர் காணருஞ் செந்தூர்க் குமரன் பருப்பதத்திற்
காவியங் கண்மயி லேயுன தாசைக்கடற் கடவேன்
வாவியின் பாங்கர் வரவோ தண்சோலை வயின்வரவோ
நீவிரும்புங் குடிற்பால் வரவோ வெதுநின் னிசைவே. 55

அவா மிகைகூறல்

பின்னாசை யற்ற வருந்தொழுஞ் செந்திற்பிரான் சிலம்பிற்
றன்னாசையை மறைத்தென் னாசை காணுந் தகையணங்கே
நின்னா சையே பெரிதீயாத பாதகர் நெஞ்சகத்துப்
பொன்னா சையுஞ் சிறிதே யென்னலாமிது பொய்யல்லவே. 56

இரவுபக னமக்கேதென்றல்

கொல்லுந் தொழிலுடை யார்க்கிரங் காதகுணங் கொளுஞ்சேய்
புல்லுந் திருச்செந்தின் மாநகர்ச் சந்தப்பொருப்பின் மின்னே
மல்லுண்ட தோண்மதன் போர்க்களத் தேயெதிர் வாய்த்தநமக்
கல்லும் பகலுமுண்டோ வுளத்தூடு நன்காய்ந் துரையே. 57

கடுத்துக் கூறல்

கோலாகலத் திருச்சந்தக் கவிதை கொழிப்ப வர்தம்
பாலாடுஞ் செந்தி னகர்க்கும ரேசன் பருப்பதத்தி
லாலால மன்னநின் கட்பார்வை யெய்தி யளவுபடா
மாலான வென்றற் கிரங்காத தேனடிவன் னெஞ்சியே. 58

சினந் தவிர்த்தல்

மெய்தேறுவார்க் கெளியான் றிருச்செந்தில் விசாகன் வெற்பிற்
கைதேறு மாரன் களத்தே யெதிர்ந்து கணைகண்மிக

Koviloor Digital Library

வெய்தேங்க விட்டவப் போதும் பணிந்துன்னை யேத்தல்விட்டு
வைதேனெனச் சினங்கொண் டாலுந் தீர்ந்தருண் மாதரசே. 59

முடிவின்மை கூறல்

தாமக் கடம்பணி செந்தூரன் சந்தத்தடஞ் சிலம்பி
னேமக்கன தனத்தேந் திழையேயுன் னையெண்ணி யெண்ணிப்
போமக் கணந்தொறு நெட்டுயிர்த் தின்பம் புணர்ந்துழலுங்
காமக் கடற்கரை காணாதென் னெஞ்சங் கலங்கியதே. 60

சோர்வின்மை மதித்தல்

தொண்டுண்ட பான்மையர் காணுஞ்செந் தூர்க்குகன்றொல் கிரியிற்
பண்டுண்டுண் டுன்னது பாற்றேக்கு மின்பப் பயனினிமேற்
றண்டுண்ட கையினராம் போதுந்தித் திப்பைத் தான்றருமோ
வண்டுண்ட பூங்குழன் மாமயில் போலுமடக் கொடியே. 61

உயர்ச்சி கூறல்

நறவாருஞ் செச்சையந் தார்ச்செந்தி னாயகனற் சிலம்பிற்
பிறவாமை வேண்டித் தவமே முயல்கின்ற பெற்றியுறுந்
துறவாளர் தாமுநின் னின்பசல்லா பத்துறை சொல்வரேன்
மறவாமை வேறுளதோ முருந்தோ டுறழ்வா ணகையே. 62

தன்றன்மை சாற்றல்

கஞ்சனைக் குட்டியுயிர் யாவுஞ்சிட்டித் தகையன் செந்தூர்த்
தஞ்சம தாம்வரைத் தாழ்குழலே யுன்றன திரண்டு
செஞ்ச ரணங்களுக் காளாகினேன் மற்றொர் திக்கிங்கில்லை
வஞ்சகஞ் சற்றுமறி யேனிச்சொல்லு மவ்வா றல்லவே. 63

துயர மாற்றல்

கூரயிற் கையுடைச் செந்தூரன் சந்தனக் குன்றிடத்தி
லீரமற்றுள்ள வன்னெஞ்ச மென்னெஞ்ச மென்றெண்ணி நையேல்
வாரம் வைத்திட்டதை மாற்றேனின் னாணைமகிழ்ச்சி பொங்காய்
வாரணக் கோட்டு முலையோ டுலாவு மடவன்னமே. 64

புறங்காட்டன் மறுத்தல்

அருகன் சமயமறப் பாடுஞ் செந்தில திபனருள்
பெருகுஞ் சிலம்புடைப் பேதைநல்லாய் சுருள்பெற்றி விட்ட
வெருகந் தளிரு மணற்குன்றுங் காரும் விலகிமுற்று
மொருதிங்கள் சக்கரந் தேன்கூடு தோன்ற வுளமிரங்கே. 65

Koviloor Digital Library

முதுமையினு மறவேனெனல்

கதிர்வே லணிந்துயர் செந்தூர்க் குமரன் கனகிரியிற்
பதினாறு மைந்தரை நீபெற்றுன் கூந்தலும் பஞ்சொக்கினு
மதிமோக முற்றவென் னெஞ்சுன்னை வேண்டுமெய் யையமுறேன்
மதிவாணுத லணங்கே வஞ்சி நேரிடை வாய்த்த கொம்பே. 66

கைக்கிளை கூறல்

மண்டல மெங்கும் புகழுஞ் செந்தூர்க்குகன் மால்வரையிற்
புண்டரிகத் திருப்போல் வாழ்மின்னே தென்பொதி யைவரைத்
தண்டமி ழன்னநின் சொற்கேட் டுருகித்தயங்கு மென்னைக்
கண்டருள் செய்திலை நின்னெஞ்சந் தான்கொடுங் கன்னெஞ்சமே. 67

மருந்து சொல்லென்றல்

வையிலங்குங் கதிர்வேற் செந்திலான் சந்தமால் வரையின்
மொய்யியம் புங்குழன் மாதரசே பண்டு முக்கண்ணனான்
மெய்யிழந் தோன்கணை தைத்தபுண் மீறிமெலிந் தடைந்தேன்
றொய்யின் மென்றோ ளன்னமே மருந்தொன்றின்று சொல்லுதியே. 68

நெஞ்சொடுகலந்தமை நிகழ்த்தல்

ஆயுந் தமிழ்த்திருச் செந்தூர்க்கு மரனணி வரையி
லேயும் பசுங்கிள்ளை நேர்தையலே யெனக்கிச்சை நல்கு
நீயு மென்னெஞ்சு மொன்றான தின்றேற்கன நித்திரையிற்
றோயுங் கலவிக் கனவெய்து மோவதி சூட்சமிதே. 69

கண்ணூற்றுக் கிரங்கல்

விண்ணூறு தீர்த்தருள் செந்தூரன் வெற்புறை மெல்லியலே
வண்ணூறு நின்னெழிற் கண்கொண்டு நாடொறு மாந்தியப்பாற்
றொண்ணூறு நூறு வயதாளர் தாமுந் துடிதுடிக்கக்
கண்ணூறு வாட்டுமன் றோவென்றெ னெஞ்சங் கவல்கின்றதே. 70

இன்பத்தளவுரைத்தற்கு இசையாமை கூறல்

களவிடை வள்ளியைக் கொண்டோன் செந்தூருறை கந்தன்வெற்பிற்
றளவமென் மூரலந் தைய னல்லாய்மதன் சாபநிகர்
குளவணங் கேயிங்கு நாம்பலவாறு குலாவு மின்பத்
தளவறை வார்தம்மை யெண்ணி யென்னெஞ்ச மழுங்கியதே. 71

Koviloor Digital Library

தலைவன் பாங்கன்முற் பகர்வன

பாங்கனைக் கண்டுடன் கூறல்

ஆழாழி சூழ்திருச் செந்தூர்க் குமரனணி வரையிற்
காழார் மனத்தொரு கன்னிதன் மோகக் கடலினிடை
வீழாமிகக் கெஞ்சி வாடிய நானென் விழியனைய
தோழாநின் சேர்க்கை யொன்றில் லாதயின்ற துயர்பலவே. 72

ஊமர் கனவொத்தமை கூறல்

பல்வரை யாடல் பயிலுஞ் செந்தூரன் பரிசனைய
நல்வரைப் பேதைதன் கண்ணால் வெருட்டலி னான்புனத்திற்
சொல்வரை விற்கடங்கா வண்ண முற்றுள்ள துன்பமின்பங்
கல்வரை மொய்ம்பநிற் காணுமுன் னூமைகன வொத்ததே. 73

இயல்பமைத் தியம்பல்

வண்டென்ற கண்ணுடைக் குஞ்சரிகோன் செந்தில் வாழ்குகன்மெய்த்
தொண்டென் றனக்கருள் வான்வரைத் தோழவத் தோகையின்ப
முண்டென் றவமுடித் தேனுன தாருயிருய் யுங்கொலோ
கண்டென்ற னுள்ளங் கவருமுன் னீயவட் காணுறினே. 74

மனவலி வியத்தல்

தென்பாண்டி நாட்டணிச் செந்தூரன் சந்தச்சி லம்பகத்தன்
றன்பாலெ னைவலி தாண்டுயிர் போற்றி கழாயிழைபால்
வன்பாளர் போற்சென்று வாடாதென் முன்னின்று வந்துநின்றா
யென்பாங்க நின்மனத் தின்வலி யோகர்க்கு மெய்தரிதே. 75

குறிகுணம் வினவல்

என்றுகண் டாங்கொளிர் வேலாயுதன் செந்தி லேய்ந்தசந்தக்
குன்று கண்டென் னவள்கோல முங்கண்டு குறிகுணமு
நின்றுகண் டிங்குவருந் தோழனே சற்று நெஞ்சமகிழ்ந்
தொன்றுகண் டாங்குரைத் தாற்றுயர் தீருமென் னுள்ளகமே. 76

அடையாளங் கூறல்

ஐம்புலன் றீர்ந்த பெரியோர் தொழுங்குகனா ளுஞ்செந்திற்
பம்புசந் தாசலச் சாரலில் வாழுயிர்ப் பாங்கமுலைக்
கொம்புடை யாண்மைக் குழலுடை யாளெண்குர லுடையா
ளம்புயப் பூவின் முகமுடை யாளென தாரணங்கே. 77

Koviloor Digital Library

அன்றென மறுத்தல்

வென்றுவெஞ் சூரனை மாய்த்தபிரான் செந்தில் வெற்பினிடைச்
சென்று கண்டேனுனைச் சேர்ந்தாளை மாந்தளிர்ச் சீருடையா
ளென்று சொற்றாய் நண்பனே யவளியாவள்கொ லெண்ணியவா
றன்றுபொன் போன்றொளி ராகமுள் ளாளென தாயிழையே. 78

மாண்புறப் புனைதல்

முன்னா ளொருவனி மித்தம் பரமனொர் மொய்குழலா
டன்னாகுலங் கெடத்தூது சென்றா னதிற்றாழ்ந் தனனோ
வென்னாவி யன்ன வண்முற் சென்றென் வாட்டமியம் பிடினின்
மன்னாண் மைகுன்றுங் கொலோசெந்தில் வேலன் வரைநண்பனே. 79

கருத்தளவோர்தல்

தோலுடையா ரிடந்துன்னிய பாவை தன்றோள் விரும்பு
மாலுடையா னல்லனா மளகேசன் மனத்தி லெண்ணல்
போலுடையா முகைக்கொங்கை யினாளைப் புகழ்வ தின்றோ
வேலுடை யான்செந்தில் வெற்பூடென் னேயம் விழைந்தவனே. 80

கனவு கூறல்

தினகர னாணயிற் கைப்பெருமான் றிருச்செந்தில் வெற்பி
லனவரதம் பிரியா நண்பநேற் றிரவத் தனையும்
புனமதிற் சென்றொரு பூவையைக் கண்டு புணர்ந் ததுபோற்
கனவுகண்டே னங்கும் வந்ததந் தோகொடுங் காமனம்பே. 81

சொல்லரி தென்றல்

புள்ளுகைக்குந் திறற்செந் தூரன்சந்தப் பொருப்பின் மின்னைக்
கள்ளுகைக் குந்துணி வைத்தரு காமக்கடற் பெருமை
யுள்ளுகைக் குள்ளமு நாணுமென் றான்மற் றொருவரிடம்
விள்ளுகைக் காகுங் கொலோவுயிர் போலுமென் மெய்யன்பனே. 82

உண்மை கூறியுவகை வருத்தல்

பன்னிரு கையுடைச் செந்தூரன் சந்தப்பருப் பதத்துப்
பொன்னியன் மேனிநல் லாள்வஞ்ச நெஞ்சப் புலவிகொள்வா
ளென்னிட நீயது செய்யா யுரைக்கு மிருவர்தம்மி
லுன்னி லுண்மை யுடையாள் கொலவந்த வொண்டொடியே. 83

பழமை பாராட்டல்

நெல்விளைக்கும் பணைசெந் தூர்க்கு மரனெடுங் கிரியின்
மல்விரைச் சாந்துடைக் கொங்கைநல் லாளின்று வந்தவணீ

Koviloor Digital Library

நல்விருப் பாலுயர் தாய்முலைப் பான்மண நன்ககலாப்
பல்விளங் குற்றவந் நாட்டொட்டு நீடும் பழக்கத்தனே. 84

மருந்து வினாதல்

பொருந்தலர் வேரறச் செற்ற செந்தூரன் பொருப்பிடத்து
முருந்துறழ் வாணகை யாண்மீது நான்கொண்ட மோகமொத்தத்
திருந்திழை யாண்மயல் கொண்டேங்கச் சீக்கிரஞ் செய்வதற்கோர்
மருந்தறிந் தாற்சொல்லு வாய்வரைத் தோணலம் வாய்த்தவனே. 85

உறைவயினுரைத்தல்

அங்காரகன் றொழும்வேலன் செந்தூர்ச் சந்தனா சலத்தில்
வெங்காத னோய்மிக நல்கிய பேதை விரும்புமிடங்
கொங்கார் மலர்த்தட வாவியின் பாங்கருங் கொட்டி லும்பூம்
பைங்காவுஞ் செந்தினைச் செய்த்தலை வாய்த்த பரண்களுமே. 86

இடையின்மை வியத்தல்

தடையற்ற வின்பந்தருஞ் செந்திலாதிபன் சந்த வெற்பிற்
றொடையற் பனிமலர்த் தோளுடைத் தோழவித் தோகைநல்லா
ளடையற் கருங்குழ லுந்தனக் கோடு மலமருமா
றிடையற் றிருந்து மிருமா தெனும்பெய ரெய்திலளே. 87

அலர் விரும்பல்

தானவர் கோனைத் தடிந்த செந்தூரன் றடஞ்சிலம்பிலி
யானவண் மேற்கொள்ளு மிச்சையு மென்ற னிடத்திலந்தக்
கானவள் கொண்டுள்ள காதலு மூரவர் கண்டு சொல்லற்
கானவந் நாளென்று கொல்லோ வென்னாருயி ரன்னவனே. 88

அலர்கண்டு மகிழ்தல்

காவை நற்றேனுவைச் சிந்தா மணியைக் கழித்தடியார்
தேவை யெல்லாந்தருஞ் செந்தூரன் சந்தச்சிலம் பினண்பா
யாவையுந் தோற்பினு நன்றேயெனக் கவ்விலங் கிழைப்பொற்
பூவை தன்னன்ப னெனுமாற்ற மாயிரம் பொன்பெறுமே. 89

மடல்கருதிக் கூறல்

விரும்ப வல்லார்க்கருள் செய்யுஞ் செந்தூர்க்குகன் வெற்பிடத்தோர்
துரும்பனை யேனைநற் றூணா மெனக்கொளுந் தொழமலர்ச்
சுரும்பவிர் கூந்தலந்தோகை நல்லாண் முலைதோயச் செய்யக்
கரும்பனை வார்மட லன்றிமற்றோர் துணைகண் டிலனே. 90

Koviloor Digital Library

உடன்பாடு வினாதல்

ஆரியர் போற்றிசைக் குஞ்செந்தில் வேலனணி வரையிற்
காரிய காரண மோர்ந்துள்ள தோழகரிய மைக்கட்
சீரிய மங்கையர் மால்கொண்டு வாடித் தியங்குநர்க்குத்
தூரியமும் படமுங் கொடிதோ நன்கு சொல்லுதியே. 91

மடல்பிழையாமை கூறித் தேற்றல்

மாங்கனி யொன்ற னிமித்தம் புவியை வளைந்துவரும்
பூங்கழற் சேய்திருச் செந்தூரிற் சந்தப் பொருப்பினளாற்
றாங்கரு மோகத் துடனூர் மடலுந் தவறுங்கொலோ
பாங்கநின் னுள்ளமஞ் சேல்வென்றி தோய்தரு பண்புளதே. 92

ஐயந் தீருமாறுரைத்தல்

முந்நீரொலி மலியுந் திருச்செந்தின் முருகன் வெற்பாள்
பைந்நீர்க் கதலித்துடை யூடெக்காலும் பதிந்த நெஞ்சேன்
செந்நீர் முழுதுமதப் புனலாதற் றெரிப்ப தற்கோர்
வெந்நீர் முட்போதுங் கண்டா யுயிர்போலும் விருப்பினனே. 93

சேராமை யுணர்த்தல்

பொன்சேர்ந்தசெந்திற் பதியான் பொருப்பிலப் பூவைதன்னை
முன்சேர்ந்த தில்லைநின் னாணைமெய் காண்டொட்ட மொய்குழலைப்
பின்சேர்தற் கித்தனை வாறாவருந் துறும்பேய னல்லேன்
மின்சேர்ந்த வேலுடைத் தோளாபொய்ச் சொல்லை வெறுப்பவனே. 94

பிறர்கோண் மறுத்தல்

பற்றார் குலமழிக்குஞ் செந்தில்வேலன் பருப்பதத்தி
லுற்றாரின் மிக்கவொரு தோழனே கலந்நூடிக் கொண்டான்
முற்றான் மடற்பனை யூர்வதென் கின்றமுறை தவறு
கற்றா ருரைப்பினுங் கான்றமைக் கேங்குங் கணக்கொக்குமே. 95

இதழ்ச்சுவை கூறல்

கோனுங் குரவனு மாச்செந்தில் வாழ்குகன் கொற்ற வெற்பி
லூனுண்ட வேல்கொண்டு லாவுநண் பாவிச்சொலுண் மைகண்டாய்
தேனும முதுந்தி ரட்டிய பாலுஞ் செழுங்கனியு
மானுஞ்சுவை தந்ததந் தோவப்பேதை செவ்வா யிதழே. 96

தனிநலம் பயிறல்

மாப்பட்ட வேலுடைச் செந்தூரன் சந்தன மால்வரையிற்
பூப்பட்ட கீர்த்தி புனைநண்பனே மயல்பூத்த வென்முன்

Koviloor Digital Library

வீப்பட்ட கூந்தனல் லாடனி யாயும் விளங்கியது
தீப்பட்ட வீட்டிடை மேல்காற்றுங் கூடிய சீரொத்ததே. 97

கவிழ்ந்து சென்றமைக்கிரங்கல்

குவிந்த கையார்க்கருள் செந்தூரன் சந்தனக் குன்றிடத்திற்
கவின்றரு வேழக் களிறனை யாயென் கருத்துடையா
ளவிழ்ந்த செந்தாமரைப் போதொடு திங்களு மன்னமுகங்
கவிழ்ந்து சென்றா ளன்பிலாள்போ லென்னெஞ்சகங் கன்றியதே. 98

புன்னகைக் குவத்தல்

வன்ன மயூரப்பரிச் செந்திலான் சந்தவான் கிரியி
லென்னகமே யொத்திலங்கு நண்பாவம் மினென்னை யன்று
கன்னல் வில்வேளிடங் காட்டிக் கொடுத்துக் கடக்கநின்று
புன்னகை யொன்று புரிந்தாளென் னெஞ்சகம் பூரித்ததே. 99

நூனலம் பயிறல்

ஒள்ளிய வேற்படைச் செந்தூரன் சந்தவெற் பூடெனையே
நள்ளிய தோழவந் நாரியன் பாலிங்கு நானுணர்ந்தேன்
றெள்ளிய செந்தமிழ் நூலுணர்வான் மிகச்சீரியவர்
கள்ளினுங் காம மினிதாமென் றோதிய கட்டுரையே. 100

தவத்தினைப் புகழ்தல்

செஞ்சிகி யூருந்திருச் செந்திலான் றன்சிலம் பிடத்தென்
னெஞ்சினை விட்டகலாத் தனிநேய வெந்நே ரத்தினுங்
கொஞ்சி யென்னாகங் குழையக் குழையக் கொடுக்குமின்ப
வஞ்சியொப் பாமிடையைத் தரன்முன் செய்த மாதவமே. 101

சுவர்க்கம் விழையாமை

ஞான வித்தாகிய செந்தூர்ச் சரவணநா தன்வெற்ப
னானநற் றோழ வருவியஞ் சாரலணிப் புனத்துக்
கூனல்விற் போலு நுதலாளைச் சந்ததங் கூடியநான்
வானகத் தின்பம்விழையேன் முக்காலு மெய்வார்த் தையிதே. 102

சித்தியின்மை கருதியேங்கல்

முத்திரைக் கையினர் போற்றுஞ் செந்தூரின் முருகன் வெற்பி
னித்தியம் வாழ்கின்ற நேயா வெனதுபுன் னெஞ்சழுங்க
வத்திரக் கண்கொண்டு பார்த்தாளுக் காமுருவா யடுக்கச்
சித்திகற்றே னில்லையே நம்மையாள் குலதெய்வ மொத்தே. 103

Koviloor Digital Library

கலையாதி வியத்தல்

மலையுங் கடலு மருவு செந்தூரன் மலர்ப்பதமே
நிலையென் றுணர்ந்தநன் னேயத்தனே யென்றனெஞ்ச முற்றுங்
குலையும் படியதி மேகாந்த காரங் கொடுத்த மின்னாள்
கலையும் பணிகளுங் கச்சுமுன் செய்தவங் கண்டிலனே. 104

சிற்றழுகைக் கிரங்கல்

கனங்கண்ட சந்தன வெற்பார் செந்தூர்வளர் கந்தனொத்தென்
மனங்கண்ட தோழவென் னாருயிர்க் கோருயிர் மானவரு
மனங்கண்ட மென்னடை யாளென்ற னன்பறியா தறைசொற்
சினங்கண்டு சற்றழு தாளென்ற னெஞ்சகந் தீய்ந்ததுவே. 105

பொய்த்துயில்வு கூறல்

மைத்தகு கண்வள்ளி கோன்றிருச் செந்தில் வரையகத்தி
னெய்தத் தண்டார் புனைமார்புடைத் தோழவென் னேயங்கண்டு
மெய்த்துகில் சோர்ந்த தறியாளைப் போன்று விழிகுவித்துப்
பொய்த்துயில் கூர்வளு டன்பாடு நாணமும் பூண்டவளே. 106

உடன்பாட்டுக் குறிப்புணர்த்தல்

கன்றைக் கனிக்கெறிந் தான்மருகோன் செந்தில் காத்தபிரான்
குன்றைப் பொரும்புயக் கொற்றவனே மலர்க்கோதை நல்லா
ளென்றைக் குத்தொய்யி லெழுத்துங் கண்மையு மிடற்கிசைவா
ளன்றைக்கென் மேற்கணை யாயிர மேவுவ னங்கசனே. 107

உடன்பாடின்மைக் குறிப்புணர்த்தல்

கலியினு மாடல் பயிலுஞ் செந்தூரன் கனகிரியி
லொலிபெறு மொண்கழற் காற்றோழனே யயிலொத்த கண்ணாண்
மலிதரு பூணுந் திருத்தாது வாடிவருந் துறுநாள்
வலிதழைத் தாலுமொரம்பு மெய்யான் கிள்ளை வாகனனே. 108

இரங்காமைக்கேங்கல்

பன்னகத் தோகைப் பரிச்செந்தில் வேலன் பருப்பதத்தி
லுன்னருங் கீர்த்தியுறு தோழனே மையலுய்த் தமின்னா
ளென்னக நொந்து தடுமாறிப் போற்று மியல்புகண்டு
மின்னமுஞ் சற்று மிரங்கா திருப்பதற் கென்செய்வதே. 109

தன்னைப் பழித்தல்

மின்றயங் குந்தனிவேற் செந்திலான் சந்தவெற் பிடத்தி
னன்றனைத் துந்தெரியுந் துணைவா வொருநா ரியிரு

Koviloor Digital Library

குன்றமொப்பா முலையாற் பொரும்போர்க் களங்கொள் வதனுக்
கென்றனைப் போலிச்சை கொள்வாரின் றென்கை யியல்பினதே. 110

தலைவன் பாங்கி முன்னிலையிற் பகர்வன

கண்டுணர்ந்தமை கூறல்

நலங்கிளர் செந்தி னகராளுஞ் சண்முகநாதன் வெற்பிற்
பொலங்கொடி போற்றிகழ் பூவை நல்லாயென் பொறிபிறழ்ந்து
கலங்குறப் பார்த்துக் களிகூர்ந் தெனது கருத்தினிற்கு
மிலங்கமைத் தோளிநின் றோழியென் றோர்ந்தன னிப்பொழுதே. 111

அன்று கொலென்றல்

மன்றுடையார் தருமைந்தன் செந்தூரில் வரதன் வெற்பின்
மென்றுகிற் சோர்வின் முலைதோன்ற வென்னெதிர் மெல்லவந்து
நின்றுளங் கொண்டுயிர் வாடச் செய்தேகின ணின்னிகுளை
யன்றுகொல்லோ வெள்ளை முத்தாரம் போலு மணிநகையே. 112

நவின்றமை வினாதல்

வான்படுந் துன்பந் தவிர்த்த செந்தூரன் வரைத்தலத்தின்
றேன்படுங் கூந்தற் சிறுமயிலே படர்செவ் வரிதோய்
மீன்படுங் கண்ணிதன் கோலா கலத்தில் விரகமுற்ற
நான்படும் பாட்டிடைநின் பாலப்பேதை நவின்ற தென்னே. 113

பொறுப்புக் கூறல்

தேங்கமழ் செச்சை யந்தார்ச் செந்திலெந்தை சிலம் பகத்திற்
பூங்க மலாதனப் பொன்னனை யாய்மிகு பொற்பமைந்த
கோங்கரும் பன்னமுலைத் தோழியென் னுடன்கூடிக் கொண்டு
நீங்கரு மின்பக் கடற்றோயச் செய்வது நின்பொறுப்பே. 114

கண்டுகளித்தமை கூறல்

பாம்பணி வார்தரு மைந்தன்செந் தூரன்பருப் பதத்தி
லாம்பலம் பூவுறழ் வாய்ப்பேதை மால்கொண்டல மருமென்
கூம்பருங் கண்களவ ளோடெப் போதுங் குலாவுகின்ற
காம்பவிர் தோளுடைக் கன்னிநிற் கண்டுங் களிக்கின்றவே. 115

நன்றி மறவேனெனல்

வென்றிவை வேற்படைச் செந்தூர்க் குமரன் வியன்சிலம்பிற்
பொன்றிகழ் மேனிநல்லா யென்னை நீயப் புணர்முலைதோ
ளொன்றிடக் காண்பதற் காமாறு நாடியுஞற் றிலந்த
நன்றியை நான்மறவேன் மறவே னெந்த நாளினுமே. 116

Koviloor Digital Library

வலியின்மை கூறல்

வேகம்பெருத்த மயிலூருஞ் செந்தில் விசாகன் வெற்பி
லாகஞ் சிவத்த வணங்கனை யாண்மத னாகமத்தின்
றாகங் கொடுத்துத் தயங்கவிட் டாளவடன் னைநத்து
மோகஞ் சகிக்க வல்லேனல் லன்யானினி மொய்குழலே. 117

ஆற்றாமை கூறி யுபாயம் வினாதல்

போற்று கின்றார்க்கருள் செந்தூரன் சந்தப்பொருப் பிடத்தின்
மாற்று ரையற்ற பொன்போலு நின்றோழி மயற்கடலிற்
கூற்று றழ்கண்வலைப் பட்டுநொந்தேன் கொடுங்கோன் மதன்போர்க்
காற்று கில்லேனைய கோவுய்யு மாறென் றறைந்தருளே. 118

தரம் போதாதோ வென்றல்

மங்கைய ராடன்மலியுஞ் செந்தூர்ச் சந்த மால்வரைவாழ்
கங்கைதன் சேயருட் போலுநல்லாய் மலர்க் காந்தள்வெட்குஞ்
செங்கை யிலம்மனை யுங்கழங் குங்கொளுஞ் சீர்பெறுநின்
றங்கை தன்கொங்கைக் கென்றோள் பற்றிடாதுகொல் சாற்றுதியே. 119

புண்ணியமும் புகழுங் கூறல்

திண்ணிய சீர்திகழ் செந்தூரன் சந்தச் சிலம்பிடத்துப்
பண்ணியன் மென்மொழிப் பாவைநல் லாய்நின் பழக்கமிக
நண்ணிய பேதை முலைப்போக நான்பெற நல்குதியேற்
புண்ணிய மெய்து மதன்றிக் கெடாத புகழுமுண்டே. 120

மண மறுத்தல்

கணஞ்செய்த சேனைப்பிரான் செந்தில் வாழயிற்கந் தன்வெற்பிற்
குணஞ்செய்யும் வீறுடைக் கோமளமே யன்று கூட்டிவந்த
பணஞ்செய்த வல்குனல் லாடந்தை தாய்முற் பகர்ந்துகெஞ்சி
மணஞ்செய்யு நாள்வரை தாங்கவொண் ணாதிந்த மையலையே. 121

பருவம் வினாதல்

பொன்னம் பொருப்புறழ் சந்தவெற்பார் செந்திற் புண்ணியன்றன்
றன்னந் தனியரு ணேர்தையலே யுனைச்சார்ந்து வந்தன்
றென்னன் புறக்கொண்டு போனாண் மற்றெங் கணுமியான் கண்டிலே
னின்னம் பருவம்வர வில்லையோ வவ்விளம் பிடிக்கே. 122

பருவமுண்டெனல்

வாசிக்கும் பூம்பொழில் சூழுஞ் செந்தூரன் வரைத்தலத்துப்
பாசிக் குழலணங்கே மையல்கூரும் பருவ மின்றேற்

Koviloor Digital Library

றேசிக்கனி நிகர்கொங்கை களேதெனுட் சிந்தை கண்டு
கூசிக் கொள்கின்ற குணமேது சொல்லக் கொடியிடைக்கே. 123

பிழையாமை கூறல்

திருகுற்ற கோட்டத் தகரூர் செந்தூரன் றிருச்சிலம்பி
னருகுற்ற சார லணங்கனை யாயளி யார்க்குமலர்
செருகுற்ற கூந்தனல் லாளணு கேலெனச் சீறிச்சொன்னா
ளொருகுற்ற முஞ்செய்த தில்லைக்கண் டாயென் னுளமறிந்தே. 124

பொய்மை கண்டிரங்கல்

மெய்யாய வீடருளுஞ் செந்தில் வேலன் வியன்சிலம்பி
னெய்யார் மலர்புனை நீள்குழலா யுன்ற னேயமிகு
மையாருங் கண்ணி வருவேனெனச் சொன்னவார்த்தை யொன்றும்
பொய்யாகி விட்டமை யெண்ணி யென்னெஞ்சம் புலர்கின்றதே. 125

இடையூறு வினாதல்

விடையேறு வார்தரு மைந்தன் செந்தூரன் வியன்சிலம்பி
னடைதோயு மின்னன்ன நங்கைநல்லா யென்னை நாடியகட்
கடையாளிக் காவகத் தேவந்து கூடிக் களிப்பதனுக்
கிடையூறு எதுகொல் லோவுள தாகி லியம்புதியே. 126

வஞ்சமுறுத்திக் கூறல்

படைவேல் புனைந்தகைச் செந்தூரன் சந்தப் பருப்பதத்தி
னிடைதோன்றி யென்மனங் கொண்டுதன் னெஞ்சையு மீந்தவடன்
றடையாவுந் தீர்ந்தெனைச் சேரச்செய் மாண்புன்றனக் கில்லையோ
தொடைசூடிக் காரமர் பூஞ்சோலை போலுஞ் சுரிகுழலே. 127

வெறுத்துக் கூறல்

நிலைப்பான சந்த வரையாள் செந்தூர்க்குக னீடருள்போல்
விலைப்பான் மைதீர்ந்த நல்லா ளெனைச்சேர விரும்புதலை
யுலைப்பார் மற்றி யாருன்னை யன்றியுள்ளார்பக ரொண்டொடியே
கலைப்பார் கலைக்கின் முலைப்பாலும் வேம்பெனுங் காசினியே. 128

உரிமை வேண்டல்

கன்மீது லாவுங்கழற் செந்தி லான்கடைக் கண்ணமரர்
மன்மீ தருள்செயற் கேட்டிலையோ வந்தவா றிரங்கி
யென்மீ துரிமைசற் றின்றுகொள் வாயென்றுமி யான்விரும்பு
மின்மீ துரிமை வைத்துத்தாயிற் பேணிய மெல்லியலே. 129

Koviloor Digital Library

ஐயுற்று வினாதல்

நன்மோக்க நல்குந் திருச்செந்தில் வேல னளிர்வரையின்
முன்மோ கினிக்கிணை யாமெனத் தோற்றிய மொய்குழலா
டன்மோகங் கூறினுங் கூறா விடினுந் தவிர்த்துருகு
மென்மோகங் கூறிய துண்டோ வின்றோபக ரேந்திழையே. 130

வணங்குமா றுரைத்தல்

நாடச்செய் தாண்டருள் கூர்செந்தி னாயகனற் சிலம்பிற்
றேடச்செய் தேகிய செய்யிழை யாளுயிர்ச் சேடியவ
ளூடச்செய் யாமலொன் றாகிய சிந்தை யுடனுவந்து
கூடச்செய் தாலுனைக் கொண்டாடும் வாய்கரங் கும்பிடுமே. 131

கள்ளங் காட்டல்

தவமுதிர்ந் தோர்புகழ் செந்தூர்க் குருபரன் சந்தவெற்பிற்
கவளம தாசலநேர் கொங்கை யாண்மையல் காட்டிச்சென்றா
ளிவணுழல வேனுவப் பெய்தாத வண்ணமி யம்புகின்றா
யவளினு நீகள்ளி யானாயென் றென்னெஞ் சறிந்ததுவே. 132

தன்னிலை தெரித்தல்

பொன்னைப் பெருக்கெழிற் செந்தூரன் சந்தப் பொருப்பிடத்தி
லென்னக் கண்ணாம் வலையாற் பிணித்தாடன் னிகுளையென
வுன்னைக் கொண்டொவ் வொருக்காற் றொடநாடில னுள்ளகத்து
மன்னைக் கொப்பாநினைப் பேனிரங்கா யுறவாக் குதற்கே. 133

அடிமைத்திறங் கூறல்

கற்பனை தீர்ந்த புகழ்ச்செந்தில் வேலன் கனகிரியில்
விற்படும் வாணுதற் றோழிதன் கொங்கை விழையுமென்னை
யற்பகடூர் மதற்கஞ்சா தளிக்கில நுதினநின்
சொற்படியே நடப்பேன் முருந்தோ டுறழ்தூ நகையே. 134

இயல்படுத்து வினாதல்

காழியிற் பாவலற்கோர் கலையீந்தருள் கந்தன் செந்தில்
வீழியிற் றீங்கனி யன்னசெவ் வாயிதழ் மெல்லியலா
ராழியங் கண்வலைப் பட்டார் பலருளறிவின் மிக்க
தோழியி னட்பின்றி யின்ப முற்றாரெவர் சொல்லுதியே. 135

சொல்லிரத்தல்

மருமலர்ச் சோலைமலியுஞ் செந்தூர்ச் சந்த மால்வரையிற்
குருபரன் மெய்யருளன்ன நல்லா யுனைக்கூடி யன்று

Koviloor Digital Library

வரும வணல்கிய மைய லில்வாடி மறுகுகின்றே
னிருவருஞ் சேரப்புரிவே னென்றோர் சொல் லியம்புதியே. 136

கூச்சந் தீர்க்குமாறு கூறல்

ஆசுமுற் பாடுங்கவி நான்குஞ் சூடுமணிச் செந்திலான்
றேசுடைக் குன்றத் தணங்கனை யாய்நின்றிரு வருளாற்
பேசுமப் பேதை யிசைந்தாள் சிலவிதப் பெற்றிகண்டு
கூசுகின் றாளது கூடாதென் றோதிக் குணஞ்செய்திடே. 137

கைமாறறியாமை கூறல்

கூதாள மாலைத் திருச்செந்தில் வேலவன் கொற்றவெற்பிற்
போதாளும் பொன்னனை யாண்முலைப் போகம் புணர்த்திமையற்
பாதாள வாரிக்கரை யேற்றி யவருட் பாங்கியுனக்
காதாளி யெய்திடத் தக்ககைம் மாறொன்றறிந் திலனே. 138

அருமை பாராட்டல்

கடவுளர்க் கோரரசாச் செந்தில்வாழயிற் கந்தன் வெற்பி
னடமிடுந் தோகை மயிலனை யாளின்ப நல்கியென்ற
னிடர்படு மையலொழித் தறமெய் தினையித் திறமோர்
முடவ னுண்ணக் கொம்புத் தேனெடுத்தூட்டு முறையொத்ததே. 139

வாழ்த்திக் கூறல்

கோழி யெழுதுங் கொடிநீடுஞ் செந்திற்கும ரன்வெற்பில்
வீழிளங் கோகிலமன்ன நல்லா ளின்ப மேவச்செய்து
பாழியந் தோண்மதற் கஞ்சாத வாழ்வுறப் பண்ணினையால்
வாழி பல்லூழி மயில்போலுஞ் சாயன் மடக்கொடியே. 140

தலைவி தன்மை

கண்டு நினைந்தமை கூறல்

பண்மறை யார்க்கும் பரிசாருஞ் செந்திற் பருப்பதத்தான்
வண்மலி தோகைச் சிகிமீது வேல்கொண்டு வந்தவன்பல்
பெண்மறுகிற் கண்டு சேவிக்கின் மோகம் பெருக்கி யென்றன்
கண்மலராம் வழியாற் சென்று நெஞ்சுட் கவின்றனனே. 141

கொங்கைப் பொலிவு கூறல்

சஞ்சலந் தீர்க்கத் தகுஞ்செந்தில் வேலன் றனதுசெழுங்
கஞ்சமலர் முகமோ ராறும் பன்னிரு கைந்நிரையுஞ்
செஞ்சர ணத்துணை யுஞ்சிகி யாதிய சீர்பிறவு
நெஞ்சகத் தூடமைந் துற்றதனாற் கொங்கை நீடியவே. 142

Koviloor Digital Library

கண்ணொடு புலம்பல்

பன்னிரு கையுடைச் செந்தூரன் றோகைப் பரியுடனன்
றுன்னிடம் வந்தவ னெஞ்சகத் துற்றமை யுன்னுதியோ
மன்னி தயக்குறிப் புன்னெதிர் கண்டு மகிழ்வதுதா
னென்னிரு கண்மணி யேவம்பி னீரிறை யேலினியே. 143

கொங்கைகட்கறி வுணர்த்தல்

என்னது கொங்கைகளே முத்து மாலை யிசைந்தருவிப்
பொன்னம்வெற் பென்றுயர்ந் தீர்வம்மினாட் களைப்போக்கன் மின்வேற்
றென்னவ னாகித்திருச் செந்திற்சந்தச் சிலம்பி லுற்றோன்
றன்ன கலந்தழு விக்கொளற் கானதவஞ் செய்மினே. 144

இதழுடனியம்பல்

மாயிரு ஞாலம் புகழ்ந்தோதுஞ் சீர்ச்செந்தின் மாநகரிக்
கோயி லுள்ளா னரன்பான் முதற்றாகங் கூறுநல
மேயிலங் குங்கனி வாய்தீண்டி னல்லதென் வெண்ணகைச்செவ்
வாயித ழேயுனைக் கொத்து மயானத்து வாயசமே. 145

கைந்நலங் கருதியேங்கல்

கிளைக்கும் வெஞ்சூர்ப் புலைமாவொடு மாயக் கிரியினையுந்
துளைக்கும் வைவேற் படைச்செந்தூ ரன்பொற்பதந் தொட்டமருக்
கிளைக்கருங் கொங்கை யழுந்தத் தழுவியிறுக் கினல்லால்
வளைக்கரம் பெற்ற பயன்யா தென்றுள்ள மறுகியதே. 146

மதியினைப் பழித்தல்

விண்ணாடர் போற்றும் வியன்செந்தில் வேலன் விருப்பமுறும்
பெண்ணாரைக் காய்தன் முறையோ வவன்றன் பிதாவினருட்
கண்ணாய சீர்தகுமோ மதியேயுனைக் கன்னல் வில்லி
நண்ணா மகிழ்குடை யென்றுரைப் பார்பலர் நானிலத்தே. 147

கடலொடு புலம்பல்

சேல்கொண்ட கட்புன லானாய்வெற் பொன்றுடைச் செந்திற்பிரான்
வேல்கொண்ட தோண்மையல் விஞ்சிய தோமுன் வெகுண்டதன்றோ
கால்கொண் டுலாவி முன்பற்றோ லிட்டென்னிற் கவலுகின்றாய்
மால்கொண்ட மெல்லணைக் காதர மாகிய வார்கடலே. 148

Koviloor Digital Library

செக்கரைச் சினத்தல்

வேலைப் புனைந்த திண்டோட் செந்திலானது வேட்கைதிகழ்
பாலைப் புரைந்த சொல்லார் மீதுனக்குட் பகைவந்ததேன்
சேலைப் பொறித்த கொடியான் செய்காமச் செழுங்கனலு
மாலைப் பொழுதின் கொடுமையும் போன்று வருஞ்செக்கரே. 149

தென்றலைப் பழித்தல்

கூம்பிய கையினர் நெஞ்சுறழ் செந்திற் குமரனன்பி
லாம்பிணைக் கண்ணிய ரஞ்சுறப் பாய்தலி னாலல்லவோ
தேம்பிர சக்க மலாதனத் தான்மதன் றேரெனவும்
பாம்பிரை யென்று முனைப்படைத் தான்சுடும் பாழ்ந்தென்றலே. 150

குயிலொடு பயிலல்

கயிலாய வாணர்தம் மைந்தன் செந்தூர்க் குகன்காதல் கொண்டு
வெயிலூடு மென்புழுப் போற்ற விப்பேனை வெருட்டுகின்றா
யயிலேந்து மன்னவன் பன்னிரு காதி னடுக்கச்சென்று
குயிலேயென் னெஞ்சொத் தவனெஞ்சுமால் கொளக் கூவுதியே. 151

அன்றிற் றொனிக்கிரங்கல்

குன்றினந் தோறு நடமாடுஞ் செந்திற் குகன்மயல்வந்
தொன்றிய தால்வருந் துற்றேன் முன்னாகி யுருவிலிதன்
வென்றி விற்கோலிக் கணையொன் றிரண்டு விடுத்தவுட
னன்றிலம் புள்ளொலி வந்து வந்தாவி யயில்கின்றதே. 152

முத்தொடு மொழிதல்

ஆயம்புகழ்த் திருச்செந் தூர்க்கு மரனடி தொழுஞ்சீர்
தோயுங் கடற்பிறந் தாயவ னாசை சுடுதல்கண்டு
நீயுஞ்சுடத் துணிந்தாய் முத்தமே யினிநெஞ்சை யென்றன்
வாயுஞ் சுடுங்கொலுனைப் போலும் வெண்ணகை வாய்ந்ததினே. 153

களபங் கழித்தல்

அந்தரர் போற்று மணிச்செந்தி லான்மய லங்கிசுற்ற
நொந்தயர் வேனுடற் சூடாற்றத் தக்கது நுண்ணியசீர்ச்
சந்தன மோவவன் றன்சீடன் வாழுந் தமிழ்வரையில்
வந்தத னாலவன் றோள்சேர்ந் திடாரை வருத்துவதே. 154

பூ வெறுப்புரைத்தல்

பாவலர்க் காதாரமாஞ் செந்தில் வேலவன் பன்னிருதோ
ளாவல் கொண்டேனுக் கவனீப மாலைய ளித்திலனாற்

Koviloor Digital Library

காவலர் நட்பிலர்க் கூர்பகை யாகுங் கணக்கின்மற்றப்
பூவகை யாவும் வடவாக்கினி யின்பொறி யொத்தவே. 155

மதனனைப் பழித்தல்

தண்படு தாமரைப் பூவாவி சூழ்தரு சந்தவெற்பால்
வண்படர் செந்தினகர்க் கோன்முற் சென்றுவில் வாங்கிநின்றுன்
றிண்பலங் காட்டினன் றாமதனா வம்பிற் சீறியிங்கோர்
பெண்பழி யேற்கவந் தாயுனைப் போலில்லைப் பித்தர்களே. 156

மதன்றொழில் வியத்தல்

அங்கிக்கணைந் துடையா னெரித்தா னிவனா றுடையான்
மங்கிச் செலப்புரி வானெனச் செந்தில் வளநகரிற்
றங்கித் திகழ் குகன்றன்னை விட்டீர்ங்கு ழறாங்குமென்பா
லிங்கிப் படிச்சமர் செய்மாரனூகத் தியல்பு நன்றே. 157

கார் கண்டுகலங்கல்

சீர்வந்த செந்தி னகராளுஞ் சண்முகன் சிந்தையிடை
நார்வந்த தாலிங்கு வந்தெனைச் சேரு நலங்கண்டிலே
னார்வந்தருங் கணவற் பிரிந்தார் கட்கவச நல்குங்
கார்வந்து வானத்துலவக் கண்டேன் றுயர்கை வந்ததே. 158

பனிக்கொடுமை பகரல்

விரியும் பணாடவிச் சேடனும் வெம்பவெதுப்பும் வெய்யிற்
சூரியன் றன்முன் சற்றும் வாடாததாமரை யொக்கவெந்து
கரியுங் கொடும்பனிக் காலஞ்செந் தூர்வளர் கந்தன்றிண்டோட்
பிரியங்கொளு மென்முகம் வாடச் செய்தல் பெரிதல்லவே. 159

வேனிற் பெருமைகூறல்

மைக்காலனை யுதைத்தார் தருஞ்செந் தில்வரதனைமற்
றெக்காலத்திற் பிரிந்தாலும் வில்வேள் கிளியே றியொரு
மெய்க்காலன் போல்வென்றி மீனோடு லாவிய வேனிலென்னு
மக்காலத்திற் பிரிந்தா லெனதாரு யிராற் றரிதே. 160

காற்றினைக் கருதிக்கூறல்

மாற்றுரை யற்ற பொன்மேருவைப் பேர்த்து மறிதிரைச்சீர்
தோற்று மகோததி யிற்பட்சி சாலந் துரந்துலவுங்
காற்றுளங் கொள்ளின் மயிலூருஞ் செந்திற் கடவுளையிவ்
வாற்று வந்தென் விழிமுன் னாகச்செய்வ தருமையன்றே. 161

Koviloor Digital Library

வண்டுவிடு தூது

பண்டே மயல்கொளப் பார்த்த செந்தூர்க்குகன் பன்னிருதோள்
கண்டே யங்குள்ள கடம்பாரத் தேனிற் களித்துவிடேல்
வண்டேயென் றென்றுமென் வார்குழற் பூங்கண் மடுத்தநன்றி
யுண்டே லென்றுன்ப மெலாமற வாம லுரைத்திறைஞ்சே. 162

கிள்ளைவிடு தூது

வான்மயிலூர் திருச்செந் தூரன் றோண்மிசை வாஞ்சைகொண்டு
நான்மன நோவது சொல்லிடப் போயங்கு நண்ணிவளர்
பான்மது ரத்தமிழ்ச் சந்தம் பொழியும் பசுங்கிளியின்
மேன்மயல் கூருவையோ பிள்ளை போலும் வியன்கிள்ளையே. 163

அன்னம்விடு தூது

தென்னவர் போற்றுந் திருச்செந்தில் வாழ்குரு தேசிகனிங்
கின்னம் வந்தானிலை யென்றேங் கித்தூதென யான்விடுத்த
வன்னமங் குற்றதுவோ வில்லையோ வள்ளி யங்கையின்பூத்
தன்னரங் காக்கொண்டதோதமியேன் றுயர்சாற்றல் விட்டே. 164

நாரைவிடு தூது

இரவினும் வாட்டமொ ரெள்ளள வாயினு மின்றிச்சென்று
வரவல்ல நாரைகளே யருட்சீர்ச் செந்தின் மாநகரிப்
புரவலன்பாற் சென்றென் புண்பா டனைத்தும் புகலுதிரேற்
கரவின் மெய்ப்பேறுங்க ளூடொன்று பெற்ற கதைநிசமே. 165

மேகவிடு தூது

சூர்மேனி சாய்த்த சுடர்வேற் செந்தூர்க் குகன்றோட் கடப்பந்
தார்மே லென்னாசை தழைக்கின்ற தானொந்து தட்டழிந்தேன்
கார்மேகங் காளவன்பாற் சொல்லு வீருங்கள் காவலன்பெண்
ணார்மேவு கொண்கனென் றெண்ணி விடேன்மின்க ணம்பினனே. 166

நெஞ்சுவிடு தூது

கஞ்சமுங் காவியும் பூத்தகையார் புணர்கந்தன் செந்தூர்த்
தஞ்சம தானவன் றன்பாலென் மோகந்தனைப் பகர்தற்
கஞ்சமுற் கூறுவ வாகாவென் றோர்ந்தன னாதலினென்
னெஞ்சக மேமுற்று நீபோயு ரைக்கி னிசப்படுமே. 167

தூது பிழைத்தமைக்கிரங்கல்

வாதுடைச் சூரனைக் கொன்றவை வேற்படை வைத்தசெங்கைப்
போதுடை யான்றிருச் செந்தூரன் சந்தப்பொருப் புறழ்தோண்

Koviloor Digital Library

மீதுமிக் காவல்கொண் டேனவன்பாற் சொல்ல விட்டுமகிழ்
தூது முற்றும் பிழைத்தாலென் செய்வேனினித் தோய்வதற்கே. 168

பழமொழிக் கயர்தல்

பொங்குள்ள வானந்த நல்குஞ் செந்தூரன் புயத்தினிச்சை
தங்குள்ளத் தென்றனத் தாசையன் னோன்மனந் தன்னிலின்றே
லெங்குள்ள மாந்தருந் தொன்றுதொட் டென்றென்று மெக்கவைக்கு
மிங்குள்ள வாறங்கு முண்டெனப் பேச லியல்பல்லவே. 169

குறி நினைந்தயர்கை

கூடையுங் கையிற் பிரம்புங் கொண்டோர்குறக் கோதைவந்து
மாடை வெற்பென் றுயர்செந்தூ ரன்றோடரு மையலையுஞ்
சாடையிற் சொல்லிப்புணர் வாயென்றோத லுந்தப்புங் கொல்லோ
வாடையிற் பூத்தமலர் வாளுளாற் கஞ்சு மாமனமே. 170

சகுனங்கண் டுவத்தல்

மற்சம ணாதிய பொய்ந்நெறி யஞ்சமெய்ம் மாதவஞ்செய்
சற்சனர் போற்றுந் திருச்செந்தில் வேலன்றனை விரும்பு
மெற்சனி போலன்னை யாதியர் வையினு மியானறிந்த
நற்சகு னங்க ளொன்றோ பலவாகு நவிலரிதே. 171

சகுனங் கருதியேங்கல்

கடமா வுலவுந் திருச்செந்தின் மாநகர்க் கந்தனென்பொற்
றடமா முலைதொடு வான்கொலென் றேங்குந் ததியிலுண்டா
மடன்ஞானி யின்செவி யோசையுஞ் சுந்தரி யார்ப்புமென
திடபாற் கெவுளியுந் தும்மலும் பொய்த்ததற் கென்செய்வதே. 172

தலைவன்றன்மை கருதிக் கூறல்

மன்னுமெய்ச் சீர்திகழ் செந்தூர்ச் சரவண வள்ளறன்பாற்
பொன்னு லகத்தினள் வாழ்வு மேனற் புனக்குறத்தி
தன்னுரிமைக் குடன்பட் டொருத்திக் குக்கைதான் கொடுத்தா
னென்னுடற் றோயி லிளப்பமக் காமுகற்கே தில்லையே. 173

வினைத்திறங் கூறல்

கரும்பாலை வாசங்கம ழுஞ்செந்தூ ரன்பொய்காட் டுஞ்சிற்றில்
வரும்பாலை மாரொடு மாடவல்லா னென்முன் வந்துநில்லா
னரும்பாசை யுற்றுமலர் வெறுத்தா லொத்தெனன்பைச் சற்றும்
விரும்பாமைக் கோர்பெருங் காரண முன்செய்த வெவ்வினையே. 174

Koviloor Digital Library

மறவாமைக் கிரங்கல்

நாலு மறையு முழங்கிய சீர்ச்செந்தி னாயகன்றன்
பாலுறழ்வெண் ணகைச்செவ் வாயும்பேரருட் பார்வைக் கண்ணும்
வேலுறு தோள்களு மென்மலர்த் தாள்களும் வேறுமிவை
போலுஞ் சிறப்பு முற்றுஞ் சிந்தியாத பொழுதில்லையே. 175

நகைநினைத் திரங்கல்

குகப்பெரு மான்றிருக் கைவேற் குமரன் குலவுசெந்தி
னகர்த்தெரு வூடெனைக் கண்ணாரப் பார்த்து நகைத்ததனா
லகத்துரித் துற்றனன்றோய் வானென் றெண்ணின னங்கசவே
ளிகற்கிடஞ் செய்தின்ன மிங்கு வராம லிருந்தனனே. 176

தலைவனைப் புகழ்தல்

அனவரதந் தன்னை வேண்டு மின்னார்தம் மகமகிழ
நனவின் மட்டும் புணர்வார் மற்றையாடவர் நஞ்சுமிழ்வாய்ப்
பனக மஞ்சுஞ் சிகிமேற் கண்டமாதர் பலர்களையுங்
கனவுநன விற்புணர் வான்செந் தூர்வளர் காவலனே. 177

கனவைப் புகழ்தல்

கொண்டாடு மிந்த நனவிற் செந்தூரனைக் கூடுமப்போ
துண்டாகத் தக்க மதநீர்ப் பெருக்கினுக் கொட்டிரட்டி
வண்டாரு நீபமலர் மாலை சூடி மயிலில்வரக்
கண்டாலு மந்தக் கனவிற் குபீரெனக் காண்கின்றதே. 178

கனவைப் பழித்தல்

அண்டருக் காகும முதைக்கை யாலள்ளி யள்ளிமிக
வுண்ட துபோலக் கனவுகண் டாலுமுடன் விழித்தாற்
கொண்ட பசிதணி வாமோ செந்தூரனைக் கூடுதல்போற்
கண்ட கனவிற் பயனேது கண்ணெதிர் காணனன்றே. 179

வரவு நினைத்திரங்கல்

வேடிச்சி மைந்தர் விழையுஞ்செந் தூர்ச்சந்த வெற்பிலென்னைக்
கூடிப் பிரிந்தவர் வாராம லுள்ளங் கொதித்துமிக
வாடித் தவிக்கவிட்டா ரிந்தமட் டுக்கும் வன்னெஞ்சரோ
வாடிக்கு முன்வருவே னென்ற வார்த்தை யயர்த்தனரே. 180

சொன்னினைந் தயர்தல்

கன்னல்வில் வேளொல்குஞ் செந்தூர்க் குமரக் கடவுள்வந்து
பொன்னவிர் கும்ப முலைமேற் சுணங்கு பொலியுமைய

Koviloor Digital Library

றுன்னநொந்தேன் றனைத்தோய்ந்த வந்நாடலை தொட்டு மெய்யாச்
சொன்னசொற் பொய்க்கிலென் னாருயிர் வீணினிற் றுஞ்சுமன்றே. 181

தலைவன் பொருண்மேற் பிரிதற்கிசையாமை கூறல்

தங்கமும் வெள்ளியு மாமிரு வெற்புடைத் தானுமைந்தன்
செங்க மலர்தனை வாழுஞ் செந்தூரன் றிருமுன்பினிற்
கொங்கர் கன்னாடர் முதலோ ரிடும்பொற் குவையினது
பொங்க மிருக்கப் பொருடேடிப் போதல் புதுமையன்றே. 182

பொருள்வயிற் பிரிந்த தலைவன் வராதலின் காரணங் கருதல்

அன்போர் மிகுந்திருச் செந்தினங் கேள்வர்செல் லத்திசையி
லென்போ லொருத்திகைச் சிக்கின ரோவுழைத் தெய்த்தனரோ
பொன்போது மட்டும்பெற் றாரில்லையோ வரும் போழ்திதுவோ
வன்போங்கு நெஞ்சரன் றேயென்ன காரணம் வந்திலதே. 183

தலைவன் போர்விழைந்தமை கண்டுபுலர்தல்

தன்னந் தனிப்புகழ்ச் செந்தூர்த் தலைவர் தகுவர்களை
முன்னந் தடிந்தனர் சாரணர் கூட்ட முழுதொழித்தார்
கன்னங் கறுத்தகலி யாதியரைக் கறுவு கின்றா
ரின்னஞ் சமர்விழைந் தாரெனத் தேறிநெஞ் சேங்கியதே. 184

போர்மேற் சென்றார் வருமுன்னிகழ்வது புகலல்

கார்மேலு லாம்பொழிற் செந்தூர் புரக்குநங் காவலர்முன்
சூர்மேற் பொருத சலிப்பின்றி நான்மறைச் சொன்னிறுவும்
போர்மேற் சென்றார்வரு முன்னான் பொறுப்பினும் பொற்புமுலை
வார்மேற் பணைத்து வளர்ந்தாவி சோர வருத்தியதே. 185

தலைவன் போர் வெல்லுமாறுணர்தல்

மடற்றாழை வாசமலியுஞ் செந்தூர்க் குகன்வானை முட்டுங்
கடற்றானைச் சூரனை மாய வெற்போடு கணத்தில்வென்றா
னுடற்றா னிலைத்த பொருளென்னு நூல்பயின் றூன்விழுங்கு
மிடற்றாளர் வேரற வென்றிங்கு மீள்கை வியப்பல்லவே. 186

கருப்பக்குறி கண்டயர்தல்

வாண்மெலி வின்றிய வீராதிவீரர் வணங்குஞ் செந்தூர்
வேண்மெலியா வென்முலைச் சூசுகங்கண் மிகக்கறுத்துத்
தோண்மெலிந் தாலிலைத் துத்தந் தழைக்கத் துவக்கியதாற்
சூண்மெலிந் தாரெனத் தோற்றுகின் றானினிச் சொல்வதென்னே. 187

Koviloor Digital Library

கருப்பங் கண்டுவத்தல்

சந்தன மால்வரைச் செந்தூர்க் குருபரன் றந்தையுடன்
முந்தருண் மோன மொழிந்த துண்டேலவன் மொய்ம்பணைந்து
வந்த கருப்பத்தில் வாழ்மகன் றாழவழக் குள்ளதோ
வந்தரி பேற்றினு மென்பேற திகநன் காய்ந்திடினே. 188

கருப்ப வாதைக்கிரங்கல்

பொருப்பன்ன பன்னிரு தோளுடைச் செந்திற் புரவலன்மேல்
விருப்ப முற்றேங்கிய நாளுற்ற துன்பமு மெத்தநன்றே
மருப்பனி நீபமென் மார்புறத் தோய்தலின் வந்தடுத்த
கருப்ப முற்றுந் துன்பசாகரந் தன்னைக் கருதிடினே. 189

மகப்பேற்று மகிழ்ச்சி

மாண்மகத் தாடிவர் செந்தூர்க் குமரன் மலர்க்கடப்பந்
தோண்மகரந்த மென்றொய்யிற் பயோதரந் தோய்ந்ததனால்
வாண்மகரக் கொடியா னஞ்சினான் முத்தி வாழ்வுநல்கு
மாண்மகப் பேறடைந் தேன்றுன்பம் யாவு மகன்றனவே. 190

பாலனைப் பழித்தல்

மாடிவர் வார்தர வந்தசெந் தூரர் முன்வைதுமிக
வூடினுங் கெஞ்சியுடன் பாடுவேண் டினருன்னைப் பெற்றிட்
டாடிய கொங்கைய ளாயபின் னான்சென் றருகுறினு
நாடி நின்றோர் மொழியும் பகராது நடந்தனரே. 191

மனத்தேற்றங் கொள்ளல்

அழலைப் புனைந்தகை யார்மைந்தர் செந்தி லதிபரம்பொற்
கழலைப் பணியினு நத்து கிலார்முனங் காதலுற்றென்
குழலைக் கரங்கொண்டுங் கோதுவ ரென்கைக் குழந்தையதன்
மழலைச் செவ்வாய்திறந் தாலந்த நாளின்னம் வந்துறுமே. 192

பரத்தையர்க்கருதி யேங்கல்

முக்கணர்க் குங்குரு வானசெந் தூரர்முன் மோகமிகுத்
தெக்கணத் துந்தமி யேனகத் தூடுற் றிருந்தவரென்
னொக்கலைப் பிள்ளை யுருவாக வேண்டி யொதுங்குதலுஞ்
சக்களத்திப் பகைகோ டாறு கோடி தழைக்கின்றவே. 193

பரத்தையர்க் கறுவல்

மின்னைவிட் டாலென்னவேல் விட்டுச்சூரனை வென்றசெந்தூர்
மன்னைவிட் டாரையு நாடேனை நாளு மருவுமவன்

Koviloor Digital Library

பொன்னை விட்டாயிரம் பூங்கோதை மார்முலைப் போகமயின்
றென்னைவிட் டானவர் தம்மைவிட் டென்னிடத் தெய்தினன்றே. 194

தூதியை மறுத்தல்

மாதுநல் லாரிடத்தா டவர்சென்று மறுக லுண்டென்
றேதுகண் டாயில் லைநீமா தன்றோம றையீரிரண்டு
மோதுசெந் தூரனு ரைத்தானென் றுள்ளகத் தொல்கலின்றித்
தூதுவந் தாயங்கு சென்றா னன்றாமெனச் சொல்லுதியே. 195

பாணனைப் பழித்தல்

சேணள வோங்கிய சந்தவெற் பிற்திருச் செந்திற்பிரான்
றோணயந் தேனவ னென்முலை வேட்டனன் றோய்ந்திருந்தோம்
பாணநிற் கண்டிலனீ சொல்லல் போதுநின் பாங்கிதுவோ
வீணர்நிற் போலுளரோ வந்தவாறு விரைந்து செல்லே. 196

பாணனைப் புகழ்தல்

ஆணைக்குக் கட்டுண் டிசையுமின் னாரின்ப மார்ந்தபின்ன
ரேணைக்குக் கோணை பகருஞ் செந்தூர ரெனக்கினிய
பூணைக் கொடுத்தனுப் பிச்சில மாற்றம் புகலவிட்ட
வீணைத்திறன் மலிபாணன் பொறுமை மிகவு நன்றே. 197

விதிப் புகழ்ச்சி

பரைதரு மைந்தரைச் செந்தூரிற் கண்டுபணிந்த வர்தம்
விரைதரு செங்கடப் பத்திச்சை மேலிட்டு மேவியப்பா
லுரைதரு மெய்ப்புகழ்ச் சீரோங்கு மாறென் னொருதலையில்
வரைதரு நான்முகத் தோனெண்கை நாடொறும் வாழியவே. 198

தற்புகழ்ச்சி

ஊன்செய்த வேலுடைச் செந்தூர்க் குமர னொளிர்கடப்பந்
தேன்செய்த மார்பினிற் சேரவுஞ் சிந்தைச் செழுமலரில்
வான்செய்த கீர்த்தியொ டன்னோ னுலாவுமெய் வாழ்வுறவு
நான்செய்த மாதவமார் செய்துளா ரிந்த நானிலத்தே. 199

தலைவி பாங்கிமுற் பகர்வன

அயற்பழிப்பு

செல்லார்க்குஞ் சோலைதிகழ் செந்தில் வேலன்றிரு வருணை
வல்லாளன் கோபுரத் தோர்கிளி கூறிய வண்புகழா
னெல்லாரு மங்கதத் தோளா றிரண்டு மிறுகநித்தம்
புல்லாத மங்கைய ரேன்பிறந் தாரிந்தப் பூதலத்தே. 200

Koviloor Digital Library

மோகமுற்றமை மொழிதல்

பாகநயத் தமிழ்ப் பாவலர் கூட்டம் பரவு செவ்வேட்
கோகனத் திருவாழ் செந்தில் வீதியிற்கும் பிடப்போய்
மோக முற்றேன வனெஞ் சொடுமானமு மூரிக்கச்சு
மேகலை யுங்குரு குங்கவர்ந் தானடி மெல்லியலே. 201

வருந்திக் கூறல்

காயுங் கதிர்நிகர் வேற்செந்தி லான்றனைக் கண்டதனா
லாயும் புலமை கற்பார்கையி னோலையொப் பாகிப்பெற்ற
தாயுந் தமருஞ்சகத் தோருமேசத் தயங்குமென்னை
நீயுஞ் சினந்துரைத் தாலென் செய்வேனடி நேரிழையே. 202

உடன் படுத்தல்

புழைகரத் தான்றுணைச் செந்தூரன் சந்தப் புயநிரையிற்
பிழைக்கரு மோகமுற் றேனவன்பாற் சென்றென் பெற்றியுரைத்
தழைக்கை மட்டோது மவையாவிற்குந் துணையா முதவி
யிழைக்கை நின்றன்கடண் காணுயிர் போலுமிகுளை மின்னே. 203

உத்தி வினாதல்

பத்தருக் காதாரனாஞ் செந்தில் வேலன் பவனியிடை
யெத்தனை மாதர்களோ வந்து நின்றன ரென்னருமைச்
சித்த மட்டுங் கவர்ந்தான் பதிலாயவன் சிந்தையினைக்
கைத்தல நெல்லிக் கனிபோற் கொண்மாறு கழறுதியே. 204

தூது செல்லென்றிரத்தல்

மாகத்து மங்கையு மால்வரைச் சாரன் மறக்கொடியு
மோகத்துடன் புணருந் திருத்தோண் மையல் முற்றியநான்
சோகப் படுந்துய ரெல்லாஞ்செந் தூரன்முற் சொல்லினன்றா
மாகத்து யிர்க்குயி ராயெனைக் காக்கு மருளன்னமே. 205

களிப்புஞ் சலிப்புங் கலந்து கூறல்

அஞ்சனந் தீட்டிய கண்ண ணங்கேயொ ரதிசயங்கேள்
செஞ்ச தங்கைத்திருத் தாளா னடந்தருட் செந்திலில்வாழ்
வஞ்சக னென்கன வூடுவந் தானொரு வார்த்தைசொன்னா
னஞ்சலென் றம்புயக் கைகாட்டி னானணைந் தானில்லையே. 206

தலைவன் சுபாவங் கூறல்

தேராரும் வீதித்திருச் செந்தில் வேலனைச் சித்தரெல்லா
மாராதிக் குங்குரு நாதனென்றேத்தினு மம்பருந்துங்

Koviloor Digital Library

காரார்மென் கூந்தனல் லார்நெஞ் செலாங்கவர் கைக்குளிகைச்
சீராள னென்றிட லாமிதிற் பாவஞ் சிறிதுமின்றே. 207

நாணொடு பகர்தல்

மானும் வெட்குங்கண் மயிலனையாய் செந்தில்வாழ் முருகோன்
மேனுவலற் கருமா லடைந்தே னிடமே வியவன்
றேனுவு நாணுறுங் கைகளி னாலெனைச் செய்தவித
நானுரைத் தாலுனைப் போல்வா ருளமு நகைக்குமன்றே. 208

கவன்று கூறல்

பகைக்கும் வெஞ்சூரனைக் கொன்ற செந்தூரர்தம் பன்மலர்த்தார்
வகைக்கிணங் கும்புய மாறி ரண்டிற்பெரு மையலுற்றுத்
தகைக்கு மித்துன்பமு மல்லாதென் னோடொத்த தையனல்லார்
நகைக்கிலக் காயுநொந்தே னெந்த வாறினி நானுய்வதே. 209

வெறுப்புக் காட்டல்

முன்னமென் சொற்படி வந்த செந்தூரர்பன் மோகமின்னார்
நன்னலங் கண்டதனா லோவல்லா தெந்த ஞாயங்கொண்டோ
வின்னம் வந்தாரிலை வந்திரந் தாலு மினியிசையேன்
கன்னல்வில் வேள்பதத்தாணை சொன்னே னுண்மை கண்டுகொள்ளே. 210

தன்மருளுணர்த்தல்

பூணார மென்னத்தலை யோட்டை யென்பைப் பொறியரவைப்
பேணாதி மைந்தனைச் செந்தூர் புரக்கும் பிரபலனைக்
காணாத போதுள்ள கோபமெல் லாமவற் கண்டவுடன்
றோணாது வந்தவன்சொல் வழிதோய்வுறுந் தொன்மை யென்னே. 211

வியந்து கூறல்

காமனைச் சுட்ட பெருமா னுதற்கட் கனலுதவு
மாமக வாயசெந்தூர்க் குகவேளிள மங்கை நல்லார்
கோமளக் கொங்கை பலகோடி தோய்ந்தலைக்கொட் டொலிகேட்
டேமமு நீலமணியு மன்னார்க்குங் கையீந்த தென்னே. 212

அழுக்காறு காட்டல்

புல்லுண் பவற்றையுங் கொன்றுண்ணும் வேடர் புனக்குடிற்பா
லொல்லுஞ் சிறுமிக்கு வந்த செந்தூரன் மற்றோ ருயிரைக்
கொல்லுங் கொடிதில் குலப்பேதை யாமெனைக் கூடிலனே
லல்லும் பகலு மறியாருட் சிக்கி யழுந்துவனே. 213

Koviloor Digital Library

தூதி வந்தமை சொல்லல்

ஆதியு மந்தமு மான செந்தூர னனுப்புமொரு
தூதியை நேற்றிங்கு கண்டேனங் கேவரச் சொல்லிநின்றா
ளேதிவன் றூதுவிட் டான்றந்தை தூதன்றொ ரேந்திழைபா
லோதிய தன்மை மறந்தான் கொலோவென் றுரைத்தனனே. 214

வைகறைக் கிரங்கல்

நாவலந் தீவின் முகம்போல்வ தாஞ்செந்தி னன்னகரிக்
காவல னேற்றிர வூடுவந் தென்னைக் கலந்துமகிழ்ந்
தாவன்முற் றுந்தவிர்க் கத்துணிந்தான் முற்று மாவதன்முற்
சேவலம் புள்ளொலி குக்கூவென் றார்த்தலிற் சென்றனனே. 215

புதுமை கண்டுரைத்தல்

குன்றங்க டோறுங் கொளுநேய முற்றுங் குலவுசெந்தூர்
மன்றந்தனிற் செலுத்துங் குகவேளிங் குவந்து வந்தியா
னன்றன்று கொண்மய லன்றே தணித்து மதுதவிரா
தொன்றன் பினொன்றுதித் தோங்கும் புதுமையென் னொண்டொடியே.
216

வலி வினாதல்

கஞ்சமுங் காவியும் பூத்த பல்லாவிக் கவின்செந்திலான்
குஞ்சர மாமுகத் தைங்கரன் றோழனெற் கூடிச்சற்று
நெஞ்சகத் தன்பிலர் போற்பிரிந் தானென நெட்டுயிர்க்குஞ்
சஞ்சலந் தீர்க்கவல் லாயல்லை யோபசுந் தாழ்குழலே. 217

மருத்தீடு கூறல்

முச்சிலொன் றேந்துமன்றே செந்தில் வாழு முருகன்வந்து
பச்சிலை யொன்றெடுத் தான்விரித் தானதிற் பத்திரமா
வைச்சிருக்கும் பொடியைத் தூவினான் சற்று வாயிலிட்டான்
கச்சிறுக்குங் கொங்கை யாரையொத் தேனடி காரிகையே. 218

நாட்சென்றமைக் கிரங்கல்

தூதளங் காய்த்துணை போன்முலை தோன்றத் துவக்குமன்றே
காதலுற்றேன் றிருச்செந் தூரன் மேலின்று கன்னல்விற்கைப்
பாதகன் றானுமவன் மாதுஞ் சூடும் பருமகுட
மாதல் கண்டுஞ் சிறிதாயினு நாடிலனன் புவைத்தே. 219

Koviloor Digital Library

நகக்குறிப் புகழ்ச்சி

கசத்துயர் தோகைப் பரிச்செந்தில் வேலன் கருணையினான்
முகத்தலுந் தோய்தன் முதலாம் பிறவு மொழிவருஞ்சீர்
தகப்பெரு கின்பந் தரத்தக்க வேயவன் றன்கரத்து
நகத்தடை யாளமொப் பாநின்று பேரின்ப நல்கலன்றே. 220

தலைவன் பிழைப்புரைத்தல்

பனியாய கொங்கை நல்லார் மயல்கூர்ந்து பவனியிடை
நனியாயச் செய்து நறுநீப மாலிகை நல்குகிலான்
செனியார் நுதற்கட் பொறியாகித் தோன்றுந்திருச் செந்திலா
னனியாயஞ் செய்யினுங் கேட்பா ரிலையடி யாரணங்கே. 221

பெற்றமை யுரைத்தல்

கலியனஞ் சும்படிக்கா நலமாயிரங் காட்டுஞ் செந்தூர்
வலியவன் றோகை மயிலில் வந்தான்பல மாதருள்ள
நலியவில் வேள்கணை யெய்தா னவரிடை நானுநின்றேன்
மலியரு ளாலழைத் தாங்களித் தானொரு மாலிகையே. 222

சொற்றவாறுணர்த்தல்

மாகர்தங் கூட்ட மகிழ்ந்தேத்துஞ் செந்தின் மகிபனருட்
டாகமுளார் பலர்நின் றேங்க நீபத் தடம்புயத்தின்
மோகம்விடே னெதிர்தோன்றித் தன்வாயிரு மூன்றுங் கொண்டு
சோகமு றேலுனைத் தோயாதி ரேனெனச் சொற்றனனே. 223

மேலீடு விளம்பல்

பாதியுடம் பிற்பெண் வைத்தார் புதல்வன் பசியபெருஞ்
சோதி மயூரப் பரிச்செந்தி லான்முனந் தோகைநல்லார்
நீதிவழி வந்தணைந் தானிந் நாளி னெடியதெரு
வீதியிற் றொட்டிழுத் தானென்ன காரண மெல்லியலே. 224

உரிமைக் காரணம் வினாவல்

ஆழாழித் தெண்டிரை யார்க்குஞ் செந்தூரி லறுமுகவ
னேழாம்விழாப் பெருங்கூட்டத் துளியான் சென்றிடினு மென்மேற்
றாழாவிரக முறுமா றுணர்த்த லென்றன் னதுமுன்
னூழாவ வனருளாக லப்பா வுணர்ந்தோது மின்னே. 225

வஞ்சனை விலக்கல்

பொன்னோங் கல்வில்லி யுதவும்பிரான் செந்திற் புங்கவனன்
றென்னோ டுரைத்ததெல் லாமுரைத் தேனென் னிகுளையென

Koviloor Digital Library

நின்னோடு ரைத்தமைநீ யுரையாமை நன்னீதி கொல்லோ
மின்னோடு றழிடையாய் வஞ்ச மியாவையும் விட்டுவிடே. 226

சின்னங் கூறல்

சேலாரும் வாவித் திருச்செந்திற் சந்தச் சிலம்பிலென்னை
மாலாகச் செய்தவற்கண் டேனென்றாய் வென்றி வாரணமு
நீலாங்கத் தோகை நன்னீழலுஞ் செச்சையு நீபமுங்கை
வேலாயுதமு முண்டே லவன்றா னென்கை மெய்ம்மொழியே. 227

தன்னிசை வியம்பல்

தென்னையு மாவுங் கமுகுஞ் செறியத் திகழ்ந்த செந்தூர்
தன்னை யென்றென்றும் புரக்கின்ற வேற்கைச் சரவணவே
ளென்னையங் கேவரச் சொன்னா னென்றாயவ னிங்குவந்தென்
னன்னை முன்னாகு மவர்காணு றாமலணை யினன்றே. 228

இகல் வினாவல்

கஞ்சமொன் றெய்யிற் சகித்து மற்றோர்கணை கையிலெடுத்
தஞ்சம்ப னெய்யுமுன் றோயுஞ் செந்தூ ரடிபணிந்து
கெஞ்சன்பு கண்டு மிரங்குகிலார் மெல்லக் கிட்டியவர்
நெஞ்சங் கல்லாகிடச் செய்தாரைத் தேர்ந்து நிகழ்த்தணங்கே. 229

அணித்திறம் வினவல்

வன்னியுங் கொன்றையு மத்தமும் பூத்தவிர் வார்சடையார்
கன்னிதன் பாற்றரு மைந்தர் செந்தூரரென் காதன்மறைத்
தன்னியர் தோளும் புணருமப் பேதைக்க வாவடைந்தா
ரென்னிலு மிக்கழ குள்ளாள் கொலோபக ரேந்திழையே. 230

தன்னிறை தெரித்தல்

சிவகுரு வாகித்திருச் செந்தில் வாழயிற் சேவகர்தம்
பவளவெற் பன்ன புயத்தாசை கண்டெனைப் பற்றிக்கொண்டா
ரிவளவு நாளுமொ ரேமன தாகி யிருந்தனமே
லவர்வெறுத் தேசினு நான்மற வேனடி யாயிழையே. 231

முன்னிலைப் புகழ்ச்சி

மாயம் பெருத்த வெஞ்சூர்மார் பைக்கீன்றும்பர் வாழவைத்த
தூயன்று களில்செந் தூருடை யான்சிவன் றோத்திரிக்கும்
வாயன்றனைப் புணர்ந்தா னந்தவாரி யின்மன்னு மென்ற
னேயங்களுக் குன்னை யன்றிமற் றார்துணை நீணிலத்தே. 232

Koviloor Digital Library

தலைவி தலைவன்முற் பகர்வன

உள்ளக்கவர்ச்சிக் கிரங்கல்

புன்னையிற் பூந்துணர்த் தேனாறனந்தம் பொலிந்த செந்தூர்க்
கன்னைமுற் கூறுமொரு நான்கு மாகுமயிற் கந்தனே
பொன்னை முத்தாரத்துடன் பூணுங் கொங்கை பொதுமநிற்கு
மென்னை விட்டுள்ளங் கவர்ந்தே கனிதிக் கிசைந்ததன்றே. 233

நியாயங் கூறி யுடன்படுத்தல்

மான்மகளைத் திருடுந் திருடா வெனவை யுமவன்
றான்மகிழும் படிக்கும் புரிந்தாய் நின்றடம் புயத்தின்
மேன்மயல் கூருமெனைச் சேர்ந்திடாது வெறுக்கை நன்றோ
வேன்மகிபா திருச்செந் தூரின் மேவிய வித்தகனே. 234

அச்சுறுத்தல்

அன்பழி யார்மிகுஞ் செந்தூர் புரக்குமறு முகவா
முன்பழிக் கஞ்சிய நீதிகெடா தொருமுத்த நல்காய்
வன்பழிக் குங்கணைக் காமன் செய்தீமை மலிந்ததந்தோ
வென்பழி யேற்றுக்கொள் ளாதேபெண் பாவமெளி தல்லவே. 235

வீரங் கூறல்

குன்றோ டுறழ்வன நின்றோளு மென்னது கொங்கைகளு
மென்றோது வாரவற்றிற் காறிலொன் றிவையென் னினும்போர்
வென்றோங்கு கின்றவை யாதோ வறிவம்வெருண் டொதுங்கே
னன்றோர்ந் துளார்புடை கொண்டாடுஞ் சீர்ச்செந்தி னாயகனே. 236

பாரென விரத்தல்

சங்கரற்குங் குருவாகிச் செந்தூரிற் றழைக்கும் வைவேற்
புங்கவனே மதன்பொல் லாங்கு மிஞ்சிப்புலர்ந் தடைந்தேன்
செங்கனற் கண்ணிரு மூன்றையு மூடித்திரு வருட்சீர்ப்
பங்கயமன்ன கண்பன்னி ரண்டா னன்கு பார்த்தருளே. 237

தழுவென விரத்தல்

பெண்ணாளைப் பாகம் வைத்தார்க் கொருதாரகம் பேசியப்பால்
விண்ணாட ரைப்புரந் தாண்டு செந்தூரிடை மேயவனே
பண்ணார் மலர்க்கணைக் கஞ்சாம லென்னைப் பரிந்துனது
கண்ணாரப் பார்த்தனை கையாற்ற முவிக்கருணை செய்யே. 238

Koviloor Digital Library

வஞ்சர் யாரென வினாவல்

தாயொரு வேற்படை யாகப் புனைந்து தமிழ்ப்புலவர்
மேயொருங் கேத்தெழிற் செந்தூரில் வாழும் விறற்குகனே
நீயொரு வார்த்தையுஞ் சொற்றாயிலை யுன்னை நேடியென்றன்
வாயொரு கோடிசொற் சொல்கின்ற தாரிதில் வஞ்சகரே. 239

கனவாடல் வேண்டல்

பனகமுண் டார்க்கு மயிலூர்ந்து சத்திப் படைக்கரங்கொண்
டனவரதந் திருச்செந் தூரில் வாழு மறுமுகனே
யுனதகலத் தலருங் கடம்பாரத் துரிமை யுற்றேன்
கனவிடத் தேனுமென் னெண்ண மொத்தாடல்கள் காட்டுதியே. 240

நனவாடல் வேண்டல்

பனவர்க் கொராதரமாஞ் செந்தில் வாழயிற் பண்ணவனே
சினவிற் கரத்து மதனான் மெலிந்து தியங்குமென்னைக்
கனவிற் கலந்துங் கெடுத்தா யவ்வாறினிக் கண்ணறிய
நனவிற் புணரினல் லாலுய்கி லேனிந்த நானிலத்தே. 241

வசைநாணிக் கூறல்

வளையுங் கலையு மிழந்தறி யாப்பல மாதர்வசை
விளைகின்ற தான்மெலிந்துள் ளேனைச்சேர்ந்து விதியொருக்காற்
றளைகொண்ட வாறவன் றம்பியு மெய்தத் தயைபுரிவா
யளையுண்ட வாயன் மருகா திருச்செந்தி லாதிபனே. 242

இசைநலம் பகர்தல்

அசையாப் பெரும்புகழ்ச் செந்தூரில் வாழு மறுமுகநின்
மிசையா வலுற்ற தனாற்பல மாதர் வெகுண்டுரைக்கும்
வசையா வுநீயரு ளாலெனைக் கூடி மகிழ்ந்திடுநா
ளிசையாகி மூவுல கிற்குமப் பாலு மிலங்குமன்றே. 243

பிழைப் பொறுப்பிரத்தல்

அன்னை யொத்தும் பரையாதரிக் குஞ்செந்தி லாயடியா
ளுன்னை யொப்பாரு முளாரென நாடில னுண்மைகண்டா
யென்னை குற்றங்க ளிழைத்தாலு நீபொறுத் தின்பநல்கி
மின்னை வெட்கும்படி செய்யிடை யார்புகழ் வீறருளே. 244

இயல்பல்லவென்றல்

கன்னன் பொருவு கொடையாளர் வாழ்செந்திற் காவலனே
முன்னம் பவனியிற் கண்டுன தாசை முதிர்ந்ததனாற்

Koviloor Digital Library

கின்னம் பெருத்து மதனா லளவில் கிலேசமுற்றே
னின்னங் கருணை புரியா திருப்ப தியல்பல்லவே. 245

நொந்தமை நுவலல்

கொம்பானைச் செந்தி னகராதிபா சந்தக் குன்றுடையாய்
நம்பாரறி வரியா யடியா ளுன்னை நாடிமத
னம்பான் மெலிந்து நொந்தேனைய கோவினி யாற்றுகில்லேன்
வம்பாயிறக் கவிடாதே யென்பாற் சற்று வந்தருளே. 246

புகழ்ந்துடன் படுத்தல்

நின்னது சீடனருட் பாலுண் டுய்ந்து நிலவுமுனி
சொன்ன சொல்லா லுய்ந்துளா னிடைமாதரிற் றோறிருந்தா
னென்னன் மெய்யாகி லெனக்கா வடிவமொன் றெய்திவர
லுன்னருட் சீர்க்கரிதோ செந்தின் மேவிய வுத்தமனே. 247

பழித்துடன் படுத்தல்

காங்கை யனைய நிறவேடர் கண்டு கறுவவொரு
வேங்கை யுருவமு மானாயென் றோர்ந்துநின் வேட்கையுற்றேன்
றீங்கை யடையத் தகுமோ விளப்பஞ் சிறிதுமின்றோ
மூங்கையுஞ் செந்தமிழ்ப் பாடுஞ் செந்தூரின் முருகையனே. 248

காரணங் கூறல்

சூரனந் நாளுனைத் தோத்திரஞ் செய்துடன் றூறுதற்குங்
காரண நின்றிருக் கண்ணாத லாலுனைக் காதலித்து
மாரனுக் கஞ்சியென் னெஞ்சேங்கச் செய்வது மற்றுளதோ
கூரயிற் கைக்குகனே செந்தின் மேவுங் குணக்கொண்டலே. 249

வஞ்சமெடுத்துக் காட்டல்

ஆடானை மஞ்ஞை யெனுமூன்றி லேறி யயிலணிந்து
தாடாண்மைச் செந்தி னகர்புரப் பாயிரு தாரமன்றிக்
கோடாநு கோடி மடவார்க்கு மின்பங் கொடுத்துளநீ
வாடாம லென்னை வைத்தாயில் லையேயிது வஞ்சகமே. 250

நியாயங் கேட்டல்

பானற்கருங் கண்ணுமை பாகர் கெஞ்சிப் பணியக்கண்டு
மோனத்தை விண்ட முருக்கிதழ்த் தேனை முருடரிடு
மேனற்கொடிக் களித்தா யெனக்கீயி லிளப்பங் கொல்லோ
வானத்துளார் புகழ்சீர்ச் செந்தின் மாநகர் வாழ்கந்தனே. 251

Koviloor Digital Library

ஈரமின்மைக் கிரங்கல்

கீரன் சொலென்னக் கிளர்கூந்தல் கண்டுநின் கிள்ளையின்சொற்
சீரன்ன வாய்திறந் தோலிடற் கேட்டுந் திருவுளத்தி
லீரமொ ரெள்ளள வேனு முற்றாயிலை யென்னசெய்வே
னீரருவிச் சந்த வெற்பார் செந்தூரிடை நின்றவனே. 252

நிந்தாத் துதிகூறல்

நித்தியப் பித்தன் மகனென்று மாமலை நீலிமுலை
நத்திய வாயனென் றும்புனம் பார்த்த நரையனென்றும்
பத்தியு ளாரிடஞ் சொற்றேன் கொலோவெனைப் பார்த்திலர்போற்
சத்திவை வேலுடன் செல்கின்றதேன் செந்திற் சண்முகனே. 253

பின்வரவு வினாதல்

அன்னந் துயிலும் வயற்செந்தி லாயெண்ணி லாயிழைமார்
முன்னஞ் சிகியில் வந்தாயென்னை மாத்திர மூரிமதன்
சின்னம் படுத்த விட்டுத்திருக் கோவிற்குச் செல்கின்றநீ
யின்னம் பவனிவரு நாளையேனு மியம்பி னன்றே. 254

பொய்நினைந் தயர்தல்

ஈராறு நான்கும் வயதென்ன வோதியென் றென்றுமெனத்
தாராள மாவொரு மைந்தனுக் கீந்தருள் சங்கரர்சேய்
நீராத லாலுஞ் சொனிச்சய மோவென நெஞ்சயர்ந்தேன்
பேராண்மைச் செந்தி னகராள வந்த பெருந்தகையே. 255

பொய்யு மெய்யுங் கலவாமை வேண்டல்

மொய்யுலவும் பொழிற்செந் தூர நின்மயன் முற்றியபின்
மையுண்ணு மாவடுக் கண்ணி யர்கூறும் வசைபெருக்கா
னையுமென் றன்னொடு நாணாதடிக் கடிநா டொறுநீ
பொய்யு மெய்யுங் கலந்தோ தாமைவேண்டிப் புலர்ந்தனனே. 256

நம்பிக்கை கூறல்

மையென்ன வந்துபொருஞ் சூரனைக் குத்தி மாய்த்தவைவே
லையென்ன வாழ்த்துநர்க் காஞ்செந்தி லாய்நின் னலர்கடம்பின்
மொய்யென்ன வாழப்பெறே னொடுநீமுன் மொழிந்த வெல்லா
மெய்யென்ன நம்புகின் றேனெந்த வாறு விடியுங்கொலே. 257

விதி நினைத்திரங்கல்

காதார் விழிச்சிவை பாகத்தர் சென்னியிற் கண்ணிலொத்துஞ்
சீதார விந்தத்திரு வடியாய் செந்திற் செல்வநின்மால்

Koviloor Digital Library

வாதாடு மாரன் வசஞ்செய்ய நொந்து மறுகலுற்றேன்
வேதா விதித்த விதியோ விவ்வாறு விளைத்ததுவே. 258

மறவேலெனல்

முன்னை விரதப் பயனாலெனைப் பெற்று முத்தமிட்ட
வன்னையைத் தோழியர் தம்மை மற்றோரை யயத்ததுபோ
லுன்னைச் சிறிதுமற வேனிதுண்மை யிலுண்மை கண்டா
யென்னை மறந்து விடாதே செந்தூரி லிருப்பவனே. 259

இன்பங் கைப்போவெனல்

பொன்னின் குடமிரண் டன்னமென் கொங்கைப் புனக்குறத்தி
தன்னின்ப முற்றது மல்லாமன் மற்றுந் தறையிலுள்ள
மின்னின் புடையனை யார்பலர்க் கின்பம் விளைத்தவுனக்
கென்னின் பங்கைக்குங் கொலோசெந்தின் மேவு மிறையவனே. 260

பிறர்க்கஞ்சிக் கூறல்

பூமி யெங்கும்புகழ் செந்தூர் புரக்கும் புரவலனே
நீமிகத் தொந்தரவேன் செய்கின்றாய் நன்று நேற்றுவந்து
காமியென் றென்னை யறியா முன்றொட்டனை கண்டுகொண்டான்
மாமி பொல்லாதவள் காணன்றி யூரும் வசைசொல்லுமே. 261

மான மிக்குரைத்தல்

சீதையின் முத்தெறிக் கும்பணைச் செந்திற் சிறுவவென்னைப்
பாதையிற் கண்டுடன் றொட்டிழுத் தாய்பலர் பார்த்திகழும்
வேதையுண்டா மென்றறி யார்கள் போலிவ் விதஞ்செய்ததாற்
பேதையர் தம்மொடு நீபிற வாமை பிறங்கியதே. 262

பொய்யூடல் காட்டல்

குன்றைத் துளைத்துக் கடலைக் குடித்துயர் கொற்றவைவே
லொன்றைப் புனைந்த செந்தூர்க் கந்தரேயுள் ளூரிமைமிகுத்
தின்றைக்கு மெல்லச் சருவுகின்றீர் வெட்கமில்லை கொல்லோ
வன்றைக்கு வந்தவள்பாற் சென்றிடா திங்கடுத்த தென்னே. 263

செட்டெடுத் தியம்பல்

பூட்கைப் புகர்முகப் புத்தேள் பிற்றோன்றும் புகழ்ச்செந்திலீர்
கேட்கையிற் சற்றுநல்கீர் சினந்தான்மெல் லக்கெஞ்சிக் கொள்வீர்
வாட்கை வல்வீரர் விண்ணோர் முனிவோர்கவி வாணரன்னார்
வேட்கை யெவ்வாறருள் வீரருள்வீ ரென்கைமெய் மையன்றே. 264

Koviloor Digital Library

கொடுமை கூறல்

சட்டியிற் சூரனைக் கொன்று செந்தூரிற் றலைமையுற்றீர்
கட்டிமுத் தந்தரிற் கொள்வீர் பொன்கேட்கிற் கடக்கநிற்பீர்
கிட்டிவந்தாலு மெட்டா தோடு வீரிவை கேட்டுமுன்னாள்
செட்டி யென்றோர் பெயரிட்டார் வல்லோரிற் சிறந்தவரே. 265

ஏற்றமின்றெனல்

செவ்வானை மாமுகத் தான்றுணை யாய்த்திருச் செந்திலில்வந்
தொவ்வார் தம்மாவியுண் டீருமக்கே மைய லுற்றுருகி
வெவ்வாத னைப்படல் கண்டணைந் தீர்பின் வெறுத்தவர்போ
லிவ்வாறு வாடவிடுவ தனாலு மக்கேற்ற மின்றே. 266

எண்ண வேற்றுமையாதெனல்

உம்மை யல்லான்மற் றொருவரைச் சிந்தையி னுள்ளுமிவர்
செம்மை யுள்ளாரென்று நாடாத வென்னைச் சினந்துசில
வெம்மைய வாயமொழியுஞ் சொற்றீ ரெண்ணம் வேறுளதோ
பொய்ம்மை கொள்வாரு ணராச்செந்தின் மேவிய புண்ணியரே. 267

சொற்பிறழ்ச்சி வினாவல்

கானிற் குறத்தியுங் காவகத் திந்திரன் கன்னிகையுந்
தேனிக்க வாழுந்திருச் செந்திலீர் மிகத்தேம்பு மென்பா
லானிக்கு முன்வருவே னெனநீரன் றறைந்தமொழி
யேனிப் படிப்பிறழ்ந் தீரித னாற்பய னேதுமக்கே. 268

நீங்காமை வேண்டல்

கோங்கா ரிளமுலைக் குஞ்சரி யுங்குறக் கோதையுந்தேர்
பாங்காள ராந்திருச்செந் தூரரே யிச்சை பற்பலவு
மேங்காம லென்றற் குதவா விடினுமென் றென்றுமென்னை
நீங்கா திருக்கிலது போதும் போது நிசச்சொலிதே. 269

பிரிதற்கிசைவின்மை கூறல்

தெரியற் கடம்புங் குரவமுஞ் செச்சையுஞ் சேர்த்ததிண்டோட்
குரியசெந் தூர்க்கந்த ரேயும்மை யேதின முன்னியணைந்
தரியநல் லின்பமயி லாதிருப்ப தற்கஞ்சு மென்னைப்
பிரியத் துணிந்தவர் போன்றுரைத் தீரென்ன பெற்றியிதே. 270

ஆணையறி வுறுத்தல்

வீணை வல்லாருந் தமிழ்ப்பாவ லருமிகுத்த செந்திற்
றாணைய மிட்டதகை யுடையீர் முன்றனித் தொருநா

Koviloor Digital Library

ளேணையிற் பிள்ளை யெடுத்துமுன்னே வருமென் றலைதொட்
டாணையிட்டுச் சொன்ன சொல்லும் பொய்யாகி லதிசயமே. 271

காலங்கருதிக் கூறல்

சிலத்த வத்தர் குழாங்களி கூர்திருச் செந்திலில்வாழ்
வேலப்பரே யென்னை யோவாது சந்தத மேவியநீ
ராலத்தினுங் கொடிதா நினைத்தீ ரிவ்வணாக் கியதோர்
காலக் கொடுமையை விட்டும்மை நோவக் கணக்கில்லையே. 272

மிகை பொறாதுரைத்தல்

கூற்றுவன் றன்னைமுன் கொன்றார் பயந்த குழவியெனப்
போற்று நர்க்கும் பயனல்கிச் செந்தூருறை புங்கவரே
யாற்றுகிலா ரொத்தடி யாளையின் பத்தழுத்தும் வண்ண
நேற்று வந்தேகியு மின்றும் வந்தீரிது நீதியன்றே. 273

குறை பொறாதியம்பல்

சீர்த்தியின் மிக்க செந்தூர் புரந்தும்பர் சிறைதவிர்க்குங்
கூர்த்தனி வேற்படை கொண்டதிண் டோளுடைக் கொற்றவரே
பூர்த்திய தாமைய லுற்றேனுக் கின்பப் பொலிவருளக்
கார்த்திகை மாதப்பிறை போலத் தோன்றலென் காரணமே. 274

கைந்நலம் பகர்தல்

மைதொடுங் கண்ணிய ராடுஞ்செந் தூர்ச்சந்த மால்வரையி
னெய்தொடும் வேல்கொடு நின்றவனே யின்று நேற்றும்வந்து
மொய்தொடு மென்மலர்க் கூந்த லவிழ்தர முத்தமிட்டுன்
கைதொடப் பெற்றபின் னேமத வேளென்றன் காறொட்டதே. 275

மெய்ந்நலம் பகர்தல்

சீரேய்ந்த செந்திற் பதியாளுஞ் சண்முக தேசிகரே
நீரேது வித்தைசெய் கின்றீர் வெஞ்சூரன் முன்னேர் விடுத்த
போரே வனைத்து மணுகுமுன் றீயப் பொடித்தவுடல்
கூரேவனை யகண்ணார் கொங்கை தோயிற் குளிர்கின்றதே. 276

உவப்புறக் கூறல்

கோகனகத் தடஞ்சூழுஞ் செந்தூரிற் குமர நிற்போன்
மோக வினோதவை போக ரின்றான்முன் முகுந்தனயன்
மாகமதிக் குடையோ னென்று ளாரிரு மங்கையருன்
பாகமுறப் புரிந்தார் புணர்ந்தா ருணர்பண் பறிந்தே. 277

Koviloor Digital Library

தன்னலம் பகர்தல்

பன்னருஞ் சீர்திகழ் செந்தூர நின்றிருப் பார்வையெய்தி
யுன்னடற் றோளுடனென் முலைதோயு முன்னொள் வளையார்
முன்னம் வெட்குற்றிடைந் தேனிந்த நாளென்முகக் களிப்போர்ந்
தன்னவர் காணுற நாணுகின் றாரிதொ ரற்புதமே. 278

தன்னைத் தாழ்த்தித் தலைவனை யுயர்த்தல்

உன்றனக் கென்றனைப் போல்வா ரனேக ருலகிலுள்ளா
ரென்றனக் குன்னையொப் பாரிலைக் காணிவை யெண்ணிடிலென்
றன்றன நின்றிருத் தோள்சேரச் செய்ததுன் றண்ணருளே
மின்றயங் குங்கதிர் வேலா செந்தூர்வளர் வித்தகனே. 279

தன்னை யுயர்த்தித் தலைவனைத் தாழ்த்தல்

ஏனற் புனத்துக் குறமாது கொங்கைக்கு மேக்கறுநீ
யானத்து மாறிசை வாத லரிதன் றிருசுடர்ச்சீர்
வானத் தரையுமதி யேனிற் காமுறல் வண்மைகண்டா
யீனத்தினர் மருவாச் செந்தின் மேவு மிறையவனே. 280

கள்ளங் கண்டுணர்த்தல்

வள்ளத்தனத் திருமங்கை நல்லாருடன் வாழ்ந்து மெள்ள
மெள்ளத் தொடர்ந்தென்னை யாண்டீ ரந்நாளின்று வேட்கைசற்று
முள்ளத்தி லாதவர் போற்றிகழ்ந் தீரிதென் னூடலஞ்சுங்
கள்ளத்தன மென்றறி வேன்செந் தூர்வளர் காவலரே. 281

திருத்தி கூறல்

பொன்னாடர் போற்றும் புகழ்ச்செந்தின் மேவும் புரவலனே
பன்னாடரும் புகல்சீரீந் திலாய்வந்து பையப் பைய
நன்னாக ரீகமொழி பேசிக் கூடிநயஞ் செய்கின்றாய்
நின்னா ளெனும்பெய ரொன்றே யெனக்கு நிறைசெல்வமே. 282

நிட்டூரம் விலக்கல்

தட்டூ டுருவிக் கிரியுங் கரியுந் தவிடுபட
விட்டூறு தீர்த்தவை வேற்குகனே செந்தின் மேவியுன்னை
நட்டூரறிய நின்றோள் சேர்ந்து ளேனிவ் வணையச்செய்யு
நிட்டூர முன்றனக் காமோமுற் சொல்லை நினைத்தருளே. 283

பெரியது நல்கிச் சிறியது போற்றற் கிரங்கல்

மேனைதன் பேரனென் பார்க்கருள் கூர்செந்தில் வித்தகனே
வானை முற்றாளி மகள்வேண்டும் பொற்புய வாழ்வளித்தாய்

Koviloor Digital Library

தேனை யொப்பா மொழியா ரிகழாப்புகழ்ச் சீர்நல்கிலா
யானை தந்தார் துறட்டிக்கு மன்றாடலொப் பாமிதுவே. 284

தலைவி பாங்கன்முற் பகர்வன

வேட்கையளவு வினாதல்

வேள்விரும் புந்திருச் செந்தூர் வெட்சி மிலைந்ததுணைத்
தாள்விரும் புங்கும்ப னாதியர்க் கோவயிற் றாங்கியதிண்
டோள்விரும்புங் குறக்கோதை முன்னாம் பலதோகை யர்க்கோ
நாள்விரும் புங்குணத் தாருணர்ந் தாங்கு நவிலையனே. 285

தவத்தினுமின்ப முயர்வெனல்

தேளிற் கொடிய தகுவரைக் காய்ந்துயர் செந்திற்பிரான்
றாளிற் கலந்த தவத்தோரைக் காணத் தகாதவன்பொற்
றோளிற் புணர்ந்த மின்னாரங் கொழிந்திலர் துங்கவடி
வாளிற் சிறந்த புயவீர மேலெது வையகத்தே. 286

தலைமகன் றன்மைகூறல்

காரொன்று சோலைத்திருச் செந்தின் மாநகர்க் கந்தர்கடுங்
கூரொன்றும் வேலுடை யார்மையல் வாரி குளித்திடச்செய்
தூரொன் றலர்விளைத் தொவ்வொ ருக்காற்புணர்ந் தொப்பில்புகழ்ப்
பேரொன்று மாத்திரந் தந்தார் கண்டாய்நின் பிரியத்தரே. 287

குணவேற்றுமை கூறல்

தென்னைப் பொழின்மலி செந்தூரில் வாழ்நின்சி னேகரந்நா
ளென்னைச் சிறிதும் பிரியாதிருந் தனரேந் தெழிற்சேய்
தன்னைக் கண்டார் முலைப்பாலா னனைந்தமுன் றானைகண்டார்
முன்னைக் குணங்களெல் லாம்விடுத்தார் கொற்ற மொய்ம்பினனே. 288

வேண்டுகோள் விழைதல்

தேனைப் பொழிமலர்த் தண்டலை சூழ்தரு செந்திற்பிரான்
சேனைக்கு மற்றுள சீர்க்கு முதவிசெயுந் துணைவா
மானைப் பொரும்விழி யாரைப் பல்வாறு வருத்துமவ
னேனைத்திறஞ் செய்யு மாறொரு மாற்ற மியம்புதியே. 289

பயன் வினவல்

செங்குருதிப் பெருந்தாரை வைவேல் கொடுசெந் திலிடந்
தங்குநங் கேள்வர்நின் றோழனென் றாயொரு சத்தியங்கே
ளங்குவிட் டிங்குவந்தார் சிலநாட் கழித்தந்த வண்ண
மிங்குவிட் டங்குசென் றாரிதனாற் பயனேத வர்க்கே. 290

Koviloor Digital Library

தலைவன் மொழிக்குறிப்பு வினாவல்

செப்போ டுறழு முலையுள்ள நாளையிற் செய்தநல
மிப்போது சற்றுஞ் செய்கின் றாரிலையினி யென்னசெய்வே
னொப்போ தருந்திறற் செந்தூர்க் குருபர ருன்னிடத்தி
லெப்போதி லேனுமெனைக் குறித்தோதலுண் டென்னிற் சொல்லே. 291

தலைவன் சொற்கவற்றினமை கூறல்

வில்லிசைச் சீர்திகழ் வீராதி வீரநின் வேட்கையுறு
நல்லியற் றோழமைச் செந்தூரர் வந்தந்த நாளென்னெஞ்சக்
கல்லினைத் தீயின் மெழுகாகக் கண்டிரு காதறியச்
சொல்லிய வண்ண முடியாமை நின்றுதுயர் செய்ததே. 292

உண்மை யுசாவல்

நின்னுருக் காண்டலு நங்கேள்வற் கானநன் னேயனென
வென்னுளத் துண்மை யுண்டாவது போனின் னிதயத்துநின்
றன்னுடைத் தோழற்கினி யாளென் றுண்மை சனிப்பதின்றோ
மன்னுமெய்ச் சீர்ச்செந்தி லானுயிர் போன்றுள்ள வாஞ்சையனே. 293

வழக்கம் வினாவல்

கோடாத செந்தமிழ்க் குன்றும் பொருநையுங் கொண்டதமிழ்
நாடாளுஞ் செந்தினக ராதி பனத்து நங்கையர்க்கு
வாடாத நீபமலர் மாலை நல்கும் வழக்கமின்றோ
தாடாளனா மவன்றோள் போற்கு லாவுந் தகையினனே. 294

யாரென வினவல்

கானகத் தோர்குறக் கன்னிசெந் தூர்வளர் காவலவ
னீனமுற் றேங்க மயலீந்த நாளையி லியானையெனப்
போனநற் றோழன் கொலும்பர் தம்மூரைப் புரக்குநலந்
தானவன் பாற்சொலச் சென்றான் கொனீயெவன் சாற்றுதியே. 295

உரிமை வருத்து முபாயமுரையென்கை

சந்தனக் குன்றொளிர் செந்தூரின் மேவிய சண்முகவேள்
பைந்தமிழ்ப் பாவலர்பால் வைத்தவாஞ்சை யென்பக்கல் வைத்தற்
கெந்தவிதஞ் செய்யலா மறிந்தானன் கியம்ப வன்றன்
சுந்தரத் தோள்பன்னி ரண்டுடொன் றொத்தொளிர் தூயவனே. 296

போயது வருதற்கிரங்கல்

சீய வடிவங் கொள்வான் மருகோன்றிருச் செந்தில்வளர்
நாயகன் பாற்குறப் பேதைதன் சீர்பகர் நாரதனே

Koviloor Digital Library

ராயநற் றோழவந் நாளவற் கின்ப மளித்துவிட்டுப்
போய பருவம் வருமாறுண் டென்னிற் புகலுதியே. 297

வருமக்குறிப்புணர்த்தல்

சென்முழங்கும் பொழிற்செந் தூரிடத்திற் றிகழும் வைவேன்
மன்முருகே சர்தந் தோழா வவரிங்குவந் தொருக்கா
லென்முக நோக்கித் தலைசற் றசைய விதழதுக்கிப்
புன்முறுவற் செய்து போனாரென் னெஞ்சகம் புண்பட்டதே. 298

பொதுநிலை விழைதல்

கனக்கும் புகழுடைச் செந்தூர்ப் பிரானெனைக் கள்ளியென்றான்
சினக்குந் தகைமலிந் தியானும வனைத் திருடனென்றே
னுனக்குந் தெரியுமவன் றோழ னாயினு முண்மைநினைத்
தெனக்கு மவற்கும் பொதுவாகி நீயிங்கிருக்கை நன்றே. 299

நல்வஞ்ச முணர்த்தல்

ஆழியிற் றெண்டி ரையார்க்குஞ் செந்தூர்க்கு கனன்பவென்றன்
றோழியன் னோன்விடு தூதியொத் தென்னுடன் சொல்வதுண்டு
வாழிய நீயந்தவா றவன்பாற் சொல்லவல்லை கொல்லோ
வேழிசைச் செந்தமிழ்ப் பாவாணர் கேட்டுவப் பெய்திடவே. 300

பாங்கன்றன்மை

இடைநிலைக் கயர்தல்

ஊனை வழிய விடும்வேல் புனைந்து செந்தூ ரில்வளர்
கோனை வருத்துமய னோய்க்கும் வேடர் குலத்துதித்த
மானை விட்டோ வருமூடற்கு மத்தியின் மன்னுறலா
லானை யிரண்டினிடைக் கொதுகொத்த தென்னா ருயிரே. 301

தலைவனைப் புகழ்தல்

மாரன் வெட்கும்புகழ்ச் செந்தூர்க் குமரன்முன் வாரியினிற்
சூரனைக் கொன்ற தரிதல்லப் பல்படை தொட்டவன்கைக்
காரர்தம் மேனற் புனத்திதண் மேலுறுங் கன்னிகையைச்
சேரலைத் தன்னுடன் கொண்டிங்கு வந்ததைச் சிந்திக்கினே. 302

தலைவனைப் பழித்தல்

வானத்து மங்கையைத் தண்புனத் தாளைமருவு செந்தூர்
ஞானக் குருபர நாதனுக் கென்றென்று நாரியர்தம்
பானற்கட் பார்வை விழைந்து பல்வாறவர் பாற்றினம்போ
யீனக்கள்ளன்ன சிற்றின்ப மிக்கார் வதியல் பல்லவே. 303

Koviloor Digital Library

தலைவியைப் புகழ்தல்

பனிவேய் மலியும் பருப்பதச் சாரலிற் பாசமின்மா
முனிவேட்ட மான்றர வந்தபெண் கோகில முத்தமிழ்ச்சொற்
கனிவேய்ந்த தொண்டர் நிமித்தஞ் செந்தூரிற் கவின்றருளுந்
தனிவேற் குகன்புயஞ் சேரமுன் செய்த தவநல்லதே. 304

தலைவியைப் பழித்தல்

மல்லாருந் திண்புயச் சூர்க்கொன்ற வேலுடன் வாழ்செந்திலான்
சல்லாப மெய்தியும் பீலி கலந்த தழையுடைமென்
புல்லாதி யாற்செய்த பூண்கூடை வேத்திரம் போல்வனமற்
றெல்லாம் விடுத்தில ளேபுனங் காத்த விளங்குயிலே. 305

முறையுணர்ந் துவத்தல்

வில்லடி யுண்டமுது வேடர் பாகத்தின் மேவுபுலிப்
பல்லணி மங்கலை தோட்டொட்டி லால்வளர் பாலன்செந்தில்
வல்லவனாயு மறப்பேதை தன்னை மணந்த பண்பா
னல்லவர் தங்குலப் பேதையர்க் கேக்கறன் ஞாயமன்றே. 306

இசைவுணர்ந்தியம்பல்

வெயிலேய்ந்த மண்டல மெல்லாம் புகழும் வியன்செந்திலான்
மயிலேறிச் சேவலுங் கிள்ளையுங் கொண்டு வடித்தகதி
ரயிலேந்திக் குன்றமுற்றாள் வதனாற் புனத்தன் றுகுறக்
குயிலோகை யுற்றிசைந் தாடனக் கேற்ற குணத்தனென்றே. 307

தலைவன் மயன்மிகை கருதிக்கூறல்

வயிரப்படை கொண்டொரு சீயங் கொன்று மகிழ்செந்திலாற்
கயிலொத்த கண்ணுமை யாரன் மின்னார்தரு மாரமுதுங்
குயிலொத்தி தண்மிசை நின்றோ லமிட்டுக் குலவுமெழி
லெயினச் சிறுமி தருந்தினை மாவொத் தினித்ததன்றே. 308

தலைவன் வாஞ்சை யளவறிந்திரங்கல்

செங்கையில் வேலெடுத் தாடுஞ் செந்தூரன் றிரண்டெழுந்த
கொங்கையுங் கூந்தலுங் கோலன்ன நாட்டமுங் கொண்டுவரு
மங்கையர் மேல்வைத்த வாஞ்சையை நூற்றில் வகுத்தவற்றோர்
பங்கையு மென்மிசை வைத்தி லனேபழம் பத்தனென்றே. 309

தலைவன் வெறுப்புணர்ந்திரங்கல்

பைந்நாக மஞ்சுறக் கூவு மயூரப் பரிச்செந்திலா
னெந்நாரி யரிடத்தெவ் விதஞாய மியற்றிடினு

Koviloor Digital Library

மந்நாளென் றன்னுடன் சொற்றுவந் தானவற் றாயிரத்தொன்
றிந்நாளிற் சொல்கில னியாதும்பிழை களிழைத்த தின்றே. 310

தலைவியைக் கறுவிக்கூறல்

அந்தரத் தோருமுனி வோருமுத் தொழிலா ளர்களுஞ்
செந்தமிழ்ப் பாவல ருந்தினந் தேடித் தியங்குகின்றார்
மந்தர வெற்புறழ் கொங்கைகள் கொண்டு மயக்கிச்செந்திற்
கந்தனைக் கைவசஞ் செய்துகொண் டாள்குறக் கன்னிகையே. 311

கொடுந்தன்மை கூறல்

காம தகனம் புரிந்த பிரான்றிருக் காதிடத்திற்
பூம னறிவரு மெய்ப்பொரு ளோதும் புகழ்ப்பெருக்கைத்
தாமரை வாவித் திருச்செந்தில் வேலவன் றண்புனத்துக்
கோமள வேடிச்சி மாலான் மறைக்கை கொடுமையன்றே. 312

வஞ்ச நன்குணர்தல்

வெஞ்சமர் வீரர்பலர் போற்றுஞ் செந்தில்விசாகன் விண்ணூர்க்
குஞ்சரிக் கானபடி பேசி யேனற் குறக்கொடிதன்
னெஞ்ச மகிழும் படிக்கான வாறு நிகழ்த்துகின்ற
வஞ்சகன் றானெனச் சொல்லுமெந் நாளுமிம் மாநிலமே. 313

புகழுணர்ந் துவத்தல்

கும்மாளி கொள்ளும் பகடூர் நமனுயிர் கொண்டபதத்
தம்மான் மகன்செந்தி லாதிப னென்னைய யத்திடினு
மிம்மாநிலத் தவற்றோயந் தாருந் தோய்தற் கிரங்குநருஞ்
செம்மான் மகள்கொண்க னண்பனென் றேயென்றுஞ் செப்பலுண்டே. 314

இம்மகளின்னாற்காமெனல்

ஞாலத்தில் வானிற் பிலத்திலிப் பேதை நலம்புரையுஞ்
சீலத் தொருத்தியைக் காண்பரி தாதலிற் செந்தினகர்
வேலப்பனுக் கிசைந்தா னலமாமலர் வேதனந்தக்
காலத் தெவ்வாற மைத்துள்ளான் கொலவ்விதங் காண்பரிதே. 315

பாங்கன் றலைவன்முற் பகர்வன

தலைவியைக் கண்டமை கூறல்

வாடையிற் றாழை மலர்கின்ற வாசமலி செந்திலாய்
சாடையி னீயன்று சொல்லிய பூங்கொடி தன்னைக்கண்டே
னோடை மிக்கார் தருசாரற் புனத்திலொரு பிரம்புங்
கூடையுங் கொண்டு மயில்போலு லாங்குறக் கோதையன்றே. 316

Koviloor Digital Library

நெறிநலம் பகர்தல்

திகழ்வே லணிந்தெழிற் செந்தூரிற் சந்தச் சிலம்பில்வளர்
குகனே தினைப்புனக் கோதைதன் மான்மிகக் கொண்டுறினு
மகல்வா னத்தும்பர் களிகூரப் பொன்னக ராண்டுறையு
மகவான் மகண்மனம் வாடுறச் செய்வது வண்மையன்றே. 317

தன்றுயர் கூறல்

அன்னைச் சிவையை யயில்வேல தாக்கி யணிசெந்திலா
யுன்னைப் புணர விரும்பு மின்னார்நின் னுளமறியா
தென்னைத் துணிந்துமிக் கேசுகின்றா ரிதற்கியானென் செய்வேன்
முன்னைப் பழவினை யோவென்ன ஞாய மொழிந்தருளே. 318

துணைவரே னென்றல்

குன்றுக டோறு நடமாடு நின்றிருக் கோலமிக
நன்றுநன் றென்ன விழைந்த மின்னார்பலர் நாட்டிலுள்ளா
ரென்றுதங்கண் முற்றனிப்பா யென்றெண்ண லியல்பு கண்டாய்
நின்றுணைக்கி யான்வர லாமோ செந்தூர் நிலைத்தவனே. 319

பிரிவின்மை வியத்தல்

பொன்னு லகும்புகழ் செந்தூர் புரக்கும் புரவலனே
மன்னு ரிமைத்திற முள்ளார னேகரிவ் வையகத்துண்
டுன்னு வர்தோய் வர்சற் றூடிப்பிரிவர தொன்றுமின்றி
நின்னுட னேன்றிரிகின் றாளிம்மா தெந்த நேரத்துமே. 320

மடலூர்தற் றடுத்தல்

மைகுலவும் பொழிற்செந் தூரிலுற் றும்பர் வாழுநலஞ்
செய்குக மாரனை மோகினி தன்னைச் செலுத்தியதான்
மெய்குளி ரின்ப மயிலாமற் பன்மலர் வேய்ந்துளதா
மொய்குழ லாண்முன் மடலூர நாடன் முறையல்லவே. 321

அவையவமெழுதலரி தெனல்

சீரிய மேலவர் போற்றுஞ் செந்தூர்வளர் செல்வநின்கைக்
கூரிய வேல்பொரு கண்ணா ளுருவங் குறித்தெழுதுந்
தூரியங் கண்முத லாமுறுப் பெய்துந் தொழிலெழுதா
காரிய மல்ல மடலூ டெழுதக் கருதுவதே. 322

வியந்துரை வினாவல்

கொள்ளை வண்டார்க்கும் பொழிற்செந் திலாய்நின்சொற் கொண்டுமகிழ்
வள்ளை யொக்குஞ்செவிப் பேதை முன்னேனல் வனத்தில்வரும்

Koviloor Digital Library

புள்ளை யெல்லாம் வெகுண்டோச்சிய வாசனை போயருணைக்
கிள்ளையை மாத்திரந் தொட்டு முத்தாடுங் கிளர்ச்சியென்னே. 323

உண்மையின்மை யுரையெனல்

வம்பிட்ட கொங்கை யுமைபாக ராதிய வானவர்க்குத்
தெம்பிட்ட வேற்கரச் சேவகனே திருச்செந் திலுள்ளா
யம்பிட்ட கட்குறப் பேதைதன் முன்ன ரணுகியன்று
கும்பிட்டுக் கெஞ்சிய துண்டுகொ லில்லைகொல் கூறுதியே. 324

தன்னுணர்ச்சி கூறல்

நீலத்தினை நிகர்கண் ணுடைப்பே தையை நீயினியோர்
காலத்திற் கூடிக் களிகூரி னல்லது காமனெமன்
சூலத்தினுங் கொடிதாங் கணை யேவுந் தொழின்மறவா
னாலத்தினை யுண்டபெம் மானருள் செந்தி லாதிபனே. 325

தகுதியின்மை யெடுத்துக் கூறல்

வெண்பிறைச் சென்னிப் பெருமானுக் கோர்சொல் விளம்பிமருட்
பண்புடைச் செந்திற் பதிவேல னேவிண் பகட்டினது
வண்பிட ரேறுமக வான்மகளை மணந்த பின்னர்
தண்பு னத்திற் கிழவேட மிட்டேக றகுதியன்றே. 326

சொற்சுவை வினவல்

விண்டலத் தோர்புகழ் செந்தூ ரனேநின் வியன்செவிக்குக்
கண்டரு தோகை யுடுத்தாள் சொல்லோ வயிற்கைக் கிளியின்
றண்டமிழ்ப் பாடல்க ளோவினி தன்றிச்சமங் கொல்சொல்லாய்
தொண்டருட் டோன்றிய சந்தேக முற்றுந் தொலைதரவே. 327

தலைவிய ரருட்பான்மை வினவல்

நன்னலஞ் சேர்செந்தி னாயக னேமலை நாட்டெயின
மின்னருட் பான்மை மிகலும்விண் ணோர்புகழ் வேந்தன்மக
டன்னகத் தேயது குன்றலுங் காணல் சரதங்கண்டா
யென்னவிதம் பகரா யிவைஞா யத்தி யல்பல்லவே. 328

தூதியுட னொத்துக்கூறல்

கடல்கொதிக் கின்றவுவா நாளின் மாரன் கணைமிகச்சிந்
திடல்சகிக் கின்றிலள் பேதை யென்றாளவ ளேவவந்தாண்
மடலெடுத் திங்குவ ராதங்கு நீசெல்லல் வண்மைகண்டா
யடலயிற் றோட்கந்தனே செந்தின் மாநக ராள்பவனே. 329

Koviloor Digital Library

பெண்மடலூர்தற் காணொணா தென்றல்

தண்மலர் வாவித் திருச்செந்தி லாய்மதன் றானும் வெட்கும்
வண்மருவப் பெறுநின் னைச்செவ் வேளென வையகமும்
பண்மறையுஞ் சொல்ல லுண்டு கண்டாய்தவப் பான்மையர்போற்
பெண்மட லூர்வது கண்டா லிளப்பம் பெரிதெய்துமே. 330

தலைவியின் றொடர்ச்சி கண்டியம்பல்

மட்டின்மெய்க் கீர்த்தி பெறுஞ்செந்திலா யுன்னை வையகத்தோர்
செட்டியென் றோதிடற் கேட்டேனின் சந்நிதி தேடிவந்து
கிட்டியின்றே மடலூர்வே னென்றோதுங் கிளிமொழியாட்
கிட்டிடும் போது நீலியென்றான் மிக்கிசையு மன்றே. 331

பாங்கன் றலைவிமுற் பகர்வன

தலைவனைத் தலைவிக்குணர்த்தல்

தந்தி யுலாம்பொழிற் சாரற் புனத்துத் தனிமயில்போ
லுந்திய பச்சிதண் மேலுறை வாயென்று மும்பர்புகழ்
செந்திலின் மேவிய செவ்வேற் குகனருட் சித்தசன்காண்
பந்திய தாகிய பன்னிரு தோளுடைப் பாவலனே. 332

ஒத்துமை கூறல்

பெருங்கோர வேடர்குலம் போற்றும் வீறும் பிறங்கலிற்றோய்
தருங்கோதில் வாழ்க்கையுஞ் செந்தூர் புரக்குஞ் சரவணற்கு
மருங்கோவு நிற்குமுண் டாதலி னாலவன் வாஞ்சை கொள்ளாய்
கருங்கோ கிலமெனக் கூவித் தினைப்புனங் காத்தமின்னே. 333

தலைவனுயர்ச்சி கூறல்

புள்ளிப் புலியுரித் தார்நுதற் றீக்கட் புலிங்கமென
வெள்ளிக் கிரியில் வருசெந்திலா னுன்னின் மேலல்லவோ
வள்ளிக் கிழங்கெடுக்குங் குழியூ டன்று மான்றரலாற்
றுள்ளிக் கிடந்து வனவேட ராள்வளர் தூநகையே. 334

பெறுநலம் பகர்தல்

பச்சைத் தினைப்பிண்டி யுந்தேனு முண்டு பரணிடம்வாழ்
கொச்சைக் குறக்குலக் கோதைநல்லாய் செந்திற் கோன்புயத்தி
னிச்சைக் கிசைந்தபின் னன்றோ வுன்றன்னை யிமையவரும்
பிச்சைத் தவத்தின ருந்தொழு மேன்மை பிறங்கியதே. 335

Koviloor Digital Library

செய்தவம் புகழ்தல்

கண்டோர் கலிதவிர்க்குஞ் செந்தின் மாநகர்க் கந்தன்வைவேற்
கொண்டோத வாரிதி மாவறக் காய்ந்துயர் கொற்றமுடன்
வண்டோலி டுஞ்செச்சை கூதாள நீப மருவுநிரைத்
திண்டோள் புணர்நல மீகைமுன் னீமிகச் செய்தவமே. 336

தலைவனுட் குறிப்புணர்த்தல்

தென்னையைப் போலுங் கமுகார்ந்த சோலைத் திருச்செந்திலா
னுன்னைமிக் கேத்து மவர்க்கீயும் பேற்றினை யுன்னிடுங்காற்
றன்னை நட்டார்க் கருளின்பப் பெருக்கொருசற் றல்லவோ
பொன்னை யொப்பார் பலர்சூழ்தர வாழும் புனக்குயிலே. 337

ஐயந் தீர்த்தல்

தன்னாண்மை காட்டிவெஞ் சூர்க்கொன்ற தாற்செந்திற் சண்முகன்கொண்
மின்னாண் மனமிக வேதனை யெய்தியும் வேட்கைமுற்றுன்
பன்னாகத் துத்திப்படம் போலு மல்குலின் பாலமைத்தா
னுன்னாணை யீதறி வேனறி வேனுண்மை யுண்மையன்றே. 338

மறுமொழி கூறல்

மாசொன்ன வேலுடைச் செந்தூர்க் குருபரன் வண்டமிழாற்
பாசொன்ன நாவலர்க் கோரெளி யானுமை பால்கமழும்
வாய்சொன்ன சொற்கு மறுமாற்ற மாகமறுகி நின்று
நீசொன்ன சொல்லினும் யான்சொல்லுஞ் சொன்மிக நேர்மையன்றே. 339

மொழிவழி தேற்றல்

சிறப்பாயிரம் பெறுஞ்செந்தூர்க் குருபரன் றேவர் தம்மூ
ரறப்பான்மை நீடுறச் செய்த பிரான்றன தாருயிர்நேர்
குறப்பாவை யேயுனைச் சற்றேபிரிந்த கொடுமை கண்டு
மறப்பா னெனவருந் தேலின்று நாளை வருவதுண்டே. 340

கிளிவர வுணர்த்தல்

எக்கியத்திற் றக்க னீடறத் தாக்கு மிறைவனுக்கு
முக்கியத் தாரகஞ் சொற்ற செந்தூர்க்குகன் முன்னுனது
கைக்கிளி சொன்னசொல் லாலவ னுள்ளங் களித்ததுண்டு
மிக்கிடைந் தேங்கி மெலியேல் வந்திங்குன்னை மேவுவனே. 341

தன்பழி நீக்கல்

முன்னை வெஞ்சூர னொடுபோர் பொருது முடுகியன்னோன்
வென்னையுங் கண்டு மகிழ்செந்தி லானுன்னை மேவியதும்

Koviloor Digital Library

பின்னைநின் மேற்சின மெய்தலு நானறி பெற்றியன்றா
லென்னை வம்பிற் கறுவேன் மயில்போலு மெயினமின்னே. 342

சினந்தகாதென்றல்

பனகத் தரசும் புகழருஞ் செந்திற் பதிக்கந்தவேள்
கனகத் திருநகர்க் காவல்செய் வான்மகள் கன்றநின்மேன்
மனம்வைத்த வுண்மை யறிந்துமிந் நாளவண் மாட்டுவம்பிற்
சினவத்த குங்கொல் புனத்திதண் மீதுறுஞ் சிற்றன்னமே. 343

பொறைவியந்துரைத்தல்

தென்னாட்டின் வண்மைச் சிரம்போற் குலவுந் திருச்செந்திலா
னுன்னாசை கொள்ளல் சகியாது குஞ்சரி யுள்ளுடைந்தாள்
பின்னா யிரமட வார்க்கிச்சை கொண்டயர் பெற்றிகண்டு
நின்னார் வங்குன்றிய தின்றே குறக்குல நேரிழையே. 344

தலைவனைத் தாழ்கை நன்றென்கை

அன்போர் குழாநெருங் குந்திருச் செந்தி லதிபனுக்கு
நின்போற் பிரிவரு நேரிழை மாருமிந் நீணிலத்தி
லென்போன்ற தோழரு மெண்ணிலர் நந்தமக் கின்னுமவன்
றன்போ லொருவரு மின்றாத லாலவற் றாழ்கைநன்றே. 345

தலைவன் செய்கை விலக்கரிதென்றல்

தாயினை வேலெனக் கைப்பிடித்தான் றந்தை தான்பணிந்து
வாயினையும் புதைக்கப் புரிந்தான் செந்தில் வாழ்குமர
னீயிவை செய்யத் தகாதென் றெவரு நிகழ்த்திலர்காண்
வேயிணைத் தோளன்ன மேயவன் செய்கை விலக்கரிதே. 346

தலைவனை நம்பி வாழ்க்கைதகுமெனல்

ஒருவாய் கொண்டொவ் வொருவாறுரைப் பான்செந்தி லுற்றபிரான்
றிருவாய் களாறெனற் றேர்ந்திலை யோவவன் செப்பியதோர்
பொருவா மொழிகொண் டிறுமாக்கொண் ணாதுபுகழ்ந் திறைஞ்சிற்
றருவா னல்லின்ப மெனநம்பி வாழ்க்கை தகுந்தகுமே. 347

பாங்கன் பாங்கிமுற் பகர்வன

சந்திப்பு வியத்தல்

அடலவு ணேசனைச் செற்ற செந்தூர னருணலமே
திடமென நம்பிய நானும் புனத்துச் சிறுகுறத்தி
யிடமக லாதுள்ள நீயுமிவ் வேளை யெதிர்ப்பட்டசீர்
கடலும லையுமொன் றாக்கூடி நின்ற கணக்கொக்குமே. 348

Koviloor Digital Library

உயர்ச்சி வினாவல்

பொன்னுடை யார்மிகுஞ் செந்தூர் புரக்கும் புரவலனா
மென்னுடைத் தோழன் கொலோக வணேந்து மிளம்பிடிநே
ருன்னுடைத் தோழி கொலோவுயர்ந் தாரெவருண்மை சொல்லாய்
பின்னுடைக் கூந்தன் மயில்போலுஞ் சாயற் பிறங்கிழையே. 349

பொருத்தங் கூறல்

குன்றோ டுறழ்புய மீராறு கொண்டு குலவுசெந்தூர்
நின்றோ னெழிற்கு நெடும்புனங் காக்குமந் நீலவள்ளி
தன்றோகைச் சாயற்கு மான பொருத்தந் தகுமல்லவோ
மென்றோட் டொயிலணங் கார்வெட்கு மாண்புறு மெய்த்திருவே. 350

குறிப்பறிவித்தல்

மன்னருந் தேவரு மாதவர் தாமும் வழுத்துஞ் செந்தூர்
முன்னவ னானவென் றோழனின் றோழி முலைச்சுவட்டி
னன்னலந் தோய்ந்தமை கண்டத னாலினி நாஞ்செயுமா
றின்னதென் றோர்ந்திலை யோகொடிப் பூமல ரீர்ங்குழலே. 351

ஒருமை பாராட்டல்

வெம்மனத் தானவர் வேர்கின்று மீண்டவை வேற்செந்திலான்
செம்மலர்த் தாட்கன்பு நான்கொண்டு ளேனவன் சேரும்வள்ளி
யம்மனைக் காட்பட்டு ளாய்நீயிவ் வண்மை யடைந்தபண்பா
னம்மன மொன்று பட்டாலவர் சீர்சொல்ல நாணமின்றே. 352

அறிந்த மட்டுசாவல்

தன்னெண் ணங்கொண்டு சராசர மோர்ந்து தமிழ்ச்செந்தில்வாழ்
மன்னெண்ண முற்று மறிகின்றி லேனவன் மாட்டுறையு
மின்னெண்ண முற்று மறிந்ததுண் டேற்பகர் வெட்கமுறேல்
பொன்னெண்ணப் பூத்த சுணங்கோ டெழுந்த புணர்முலையே. 353

பின்னியல் புரைத்தல்

மின்னை வெல்வேல்கொடு செந்தூரில் வாழும் விகிர்தனிட
நின்னை நின்றோழி விடுக்கின்ற நாள்வந்து நேர்ந்துகொண்டா
லுன்னையங் கேகண்டு வந்துனக்காம் படியொத்துஞ் சொல்வே
னென்னையு மவ்வண்ண நீதாங்க வேண்டு மிளங்குயிலே. 354

வலியின்மை கருதிக் கூறல்

உன்றன் பிராட்டிதன் பாற்செந்தி லான்பல் லுருவெடுத்துங்
குன்றன்ன வேழ மழைத்தும் புணர்ந்த குறிப்பறிவே

Koviloor Digital Library

னின்றந்த வண்ணநின்பாற் செயற்காம் வலியான் பெற்றிலே
னென்றன் றுயர்களை யாயவன்றோழ னென்றெண்ணம் வைத்தே. 355

தலைவியைத் தாழ்த்திக் கூறல்

மைந்நிற வேட்கு மயங்குகின் றார்பல மாதரென்று
மெந்நிலமும் புகழ்செந்தூர்ச் செவ்வே ளிச்சையா ரெய்திடார்
வெந்நிண முண்டு வளர்வேட மங்கை வெறுக்கிலவன்
சந்நிதிச் சீர்குன்று மோவவ ளேவல்செய் தாழ்குழலே. 356

தன்னை யுயர்த்திக் கூறல்

மட்டாருஞ் சோலை மலிசா ரலேனல் வனத்திதணிற்
கட்டாரிக் கண்மறப் பேதையைக் கண்டு கவினெழுதி
நட்டார்க் கிரங்கு செந்தூர்க் குகவேளிட நான்கொடுத்தேன்
கிட்டார்வ மெய்தின னீயென்செய் தாயக் கிளிமொழிக்கே. 357

வெட்குறப் பகர்தல்

அன்னையி லெண்மடங் காகிச்ச ராசரத் தார்வமெய்திப்
புன்னையங் காவடர் செந்தூரில் வாழ்குகன் புன்னுனிமட்
டென்னை வஞ்சித்தறி யானின் பிராட்டியன் றேனலிடை
யுன்னை வஞ்சித்தல்ல வோவவன் றன்பிற கோடியதே. 358

உறவளவுசாவல்

நானுனைக் கண்டமை செந்தூர்க் குருபர நாதனுள்ளந்
தானுண ரும்படி சொல்வே னெனைக்கண்ட தன்மையந்த
வேனுனிக் கண்மறப் பாவையுணர விளம்புவையோ
வேனுரைக் கின்றன மென்றிருப் பாய்கொல்சொல் லேந்திழையே. 359

திகைப்பறல் வினவல்

மஞ்சவிர் சோலைத் திருச்செந் திலானை மறைமுனிவோர்
குஞ்சரி யாளன்ப னென்பதுந் தொண்டர் குறக்கொடிதன்
செஞ்சரண் போற்றுந னென்பதுங் கேட்டுத்திகைத் தனனின்
னெஞ்சறிந் தாற்பக ராயறற் போலு நிறக்குழலே. 360

நட்பறாதென்றல்

அடையலர் தம்மை யவர்குலத் தோடுமழித் தவைவேற்
படையணி செந்திற் பிரானுக்கு மன்னவன் பன்னியர்க்கு
முடையமெய்த் தோழனுந் தோழியு நாமென்ப துள்ளமட்டு
மிடையறு மோவன்ன மேநமதாவ லெனுங்கொடியே. 361

Koviloor Digital Library

பாங்கி தன்மை

தலைவி புலம்பு மாறியம்பல்

மின்போலும் வேலுடை யானென்னுஞ் செந்தில் விசாகனென்னு
மன்போர்க் கிரங்கும் பிரானென்னு மீடி லழகனென்னும்
வன்போங்கு மாவை வென்றா னென்னுந் தோகை மயூரனென்னும்
பொன்போலு மென்முலைப் பாரம் பொறாவிடைப் பூங்கொடியே. 362

தலைவி மையல் கண்டிரங்கல்

மத்தன் மகன்றிருச் செந்தூரி னல்கிய மையலெனும்
பித்தடைந் தாளன்று தொட்டுவப் பார்தரு பேச்சறியாண்
முத்தங் கரிய முதிர்காச்ச லெய்தினன் முப்பழம்பால்
வைத்தமு தூட்டினு முண்ணாள் கிடந்தமட வன்னமே. 363

கண்டுளம் வருந்தல்

தண்செய்த தாமரைப் பூவாளி தன்னைத் தளையிலிடுந்
திண்செய்த தோளுடைச் செந்தூரன் மாலிற் றிளைக்குமிந்தப்
பெண்செய்த கோரணி யெல்லாங் கண்டின்னற் பெருக்குறன்முன்
கண்செய்த பாவங்களோ வென்று நெஞ்சங் கவல்கின்றதே. 364

தலைவன்மீது நிட்டூரங் கூறல்

போதுவந் தானைப் புடைத்த செந்தூர்க் குகன்பொற் புயத்தை
மாதுகண் டேங்கி வளைகலை நாண மறந்தணையின்
மீதுருண் டங்கிப் புழுப்போல் வருந்தும் விதமறிந்து
தூதுசென் றெய்த்தன னின்னம்வந் தானிலைத் தோய்வதற்கே. 365

ஏசல் கண்டிரங்கல்

ஆசு வல்லார் புகழ்செந் தூர்க்கும ரனரிவையணி
தூசு கொண்டான தற்கியானென் செய்வேன்மதி சுட்டதென்றாள்
வீசுதென் கால்புலி போன்றதென் றாண்மிக வெம்பியென்னை
யேசுகின்றா ளவடன்னை யிவ்வூர் முற்றிகழ் கின்றதே. 366

சுரம்போக்கு விளம்பல்

பூதல மாதிய மூவுலகுந் தினம்போற்றுஞ் செந்தூர்
நாதன் வந்தெவ் விதஞ்செய் தான்கொலோவிள நங்கையிராப்
போதவன் றன்பிறகே நடந்தாள் கொடும்புல் லர்களை
யாதரிக் கும்புல வோர்கலி போலு மருஞ்சுரத்தே. 367

நற்றாயிரங்கல்

ஆறு முகத்தொரு வானவனாஞ் செந்தி லாதிபன்றான்
கூறு மொழிவழி போய்ப்பெற்ற கும்பி கொதிக்கவிட்டா

Koviloor Digital Library

ளுறு முலையமு துண்ட வெண்பல்லொன் றுதிர்ந்துமற்றும்
வேறுபல் லொன்று முளையாப் பருவத்து மெல்லியலே. 368

துயிற்காரணங் கூறல்

மந்தரக் கொங்கைத் துணைப்பாரந் தாங்கரு மங்கைநல்லாள்
சுந்தரப் பூவணை மேற்றுயில் கூர்தரச் சோம்புகிலாள்
பைந்தமிழ்ப் பாவலர் கொண்டாடச் செந்திற் பதிபுரக்குங்
கந்தனைத் தோயுங் கனாமிகக் காண்பதிற் காதலுற்றே. 369

துயிலன்று சோகமெனல்

சயிலங்க டோறு நடமாடுஞ் செந்திற் சரவணன்றன்
வெயிலங் கதநிரைத் தோள்வேட்ட மங்கை வியன்முலையிற்
பயிலுஞ் சிலம்பணி மால்படைத் தாளட்ட பாலுமுண்ணா
டுயிலெங் ஙனம்வரு மாரன்கைப் பூத்தருஞ் சோகமிதே. 370

வெறி விலக்கல்

கற்றோர் பரவுந் திருச்செந்தில் வேலவன் காதன்மிக
வுற்றோ வுறாப்பெருஞ் சோகமுற் றாளிதற் கூரவர்தா
மற்றோ ருயிர்வதைத் துண்ணா நலத்தை மறந்தவராய்ப்
புற்றோயும் வாயசத் தின்பலி வேண்டல் பொருத்தமன்றே. 371

வெறியாட்டால் விபரீத முண்டெனல்

நிசங்கண்ட மேலவர் போற்றச் செந்தூரிடை நின்றவன்மால்
கசங்கும் படிசெய நொந்தாளைத் தேற்றக் கருதிலவன்
வசங்கொண்டு போய்விட்டு வாரா தறத்தை மறந்துவம்பி
லசங்கொன் றிடிற்சினப் பானவன் வாகனத் தன்பதென்றே. 372

தலைவனை யுயர்த்திப் பிறரைத் தாழ்த்தல்

கற்றையஞ் செஞ்சடை யார்மைந்தன் செந்திற் கடவுடன்மா
லுற்றையம் பன்சம ராலிறந் தோருமுயர்ந் தவர்தா
மற்றைய வானவர் தாமே யிரந்து வலிதணையப்
பெற்றையந் தீர்நல மெய்துகின் றார்களும் பீடிலரே. 373

பருவங் கண்டிரங்கல்

அமரர்க் கதிப னரசாளச் செந்திலி லன்றுவந்தோன்
பமரக் கடப்ப மலர்மாலை வேட்டிந்தப் பாடுபட்டுந்
தமரைப் பகைக்கவு மஞ்சுகி லாளினித் தக்கவண்ணங்
குமரிப் பருவம் வந்தாலென் செய்வாளிக் கொடியிடையே. 374

Koviloor Digital Library

மாலையாதோவெனல்

அரவக்குலம் வெருளத் தோகை நீழலிலா சில்செந்தூர்
பரவப் பவனிவரு வானைக்கண் கொண்டு பார்த்தமின்னா
ளிரவிற் றுயில்கின் றிலாளிச்சை யுற்றமை யாமறியக்
குரவத்தி னீபத்தில் வெட்சியி லென்னவுங் கூறிலளே. 375

பிரமையைப் பெருமையென்கை

தாகித்த வர்க்கருள் செய்யுங் குமரன் றடம்புயத்தை
மோகித் தளவி லெமைமறந் தாள்வள முற்றுச்செந்தூர்க்
கேகித்த னெண்ணப்படி வாழி யாரையிலக் குவைப்பாள்
பாகித்த கார்முகில் போலக்கு லாங்குழற் பைங்கொடியே. 376

பாங்கி தலைவிமுற் பகர்வன

புதுமை கூறல்

வேதமு மாகம நூல்களும் போற்ற விளங்குசெந்தூர்
நாதனைத் துங்கமயின் மீது பார்த்துள்ள நாணிழந்து
சீதரன் பாவையர் மீதழுக் காறு செலுத்துகின்ற
காதலுற் றோர்பல ருண்டுனைப் போலெங் குங்கண்டிலனே. 377

பயனின்மை காட்டல்

கன்மேற் புரியுந்திருக் கூத்துளான் செந்திற் காவலவ
னின்மேற் பிரியம்வைத் தானிலன் போன்றன னீயவன்சீர்ச்
சொன்மேன் மனமுழுதுஞ் சேறவிட் டனைதோய்ந் திலனென்
றென்மேற் சினந்தத னாற்பயனி யாதடி யேந்திழையே. 378

தேற்றல்

காராழித் தெண்டிரை யாயிரங் கோடி கலந்துபொருஞ்
சீராருஞ் சந்நிதிச் செந்தூர னாளுஞ் செயும்பவனிக்
காரார் மயங்குகி லாருனைப் போன்மிக்கவா வடைந்தோர்ச்
சேராதி ரானவன் றிண்புயஞ் சேர்வது திண்ணமன்றே. 379

ஆத்திரமாகாதெனல்

தேனாருஞ் செச்சை மலிசந்த மால்வரைச் செந்திற்பிரான்
வானாடர் பாவையை நீங்கிக் குறவர் மகளிடம்போய்க்
கானாற்றுச் சாரலிற் கெஞ்சிப் புணர்ந்துள்ள காமுகன்றா
னானாலு முன்றனக் காகாதிந் நாளிந்த வாத்திரமே. 380

Koviloor Digital Library

பேரவா நீக்கல்

கற்றுணர்ந் தோர்தவத் தோரிமை யாமலர்க் கண்ணுடையார்
பற்றுநற் றாளுடைச் செந்தூர்க் குகனிரு பாரியர்க்கு
மற்றுமெண் டீர்பல மாதர்க்கு மாம்பொது வாழ்வுடையான்
முற்றுநின் பாலமை வானோ வருந்தலென் மொய்குழலே. 381

ஏக்கங் கண்டிரங்கல்

கன்னல்வில் வேண்மன நாணுற நீடுங் கவின்செந்திலான்
முன்ன நின்றன்னை முகங்கொண்டு நோக்கிலன் மோகமுற்றா
யென்னதவப் பயனோ வொவ்வொர் காலம்வந் தெய்துகின்றா
னின்னமு மேக்கந் தவிர்கின்றி லாயிதற் கென்செய்வதே. 382

தலைவன் வேட்கை கூறல்

வாது விண்டார்தமை யெல்லாஞ் செயித்தன்று வன்கழுவின்
மீதுகண்டான் றிருச்செந் தூரனின் பெருவேட்கை யன்றா
னேதுவந் தானிலை யென்றேங் கிடேனின் னியல்புரைக்கத்
தூது சென்றேனை யுந்தொட்டி ழுத்தானடி தூநகையே. 383

செல்லனன்றென்கை

குன்றந் தொறுந்தினங் கூவிய சேவற் கொடிச்செந்திலா
னன்றங்கு தந்த மயலோடிங் குற்றுளைந் தாய்வுறுநீ
யென்றன் மொழிப்படி யன்னவன் கோயி லெழின்முகப்பிற்
சென்றன்பு செய்திடிற் சேராதி ரானடி தேமொழியே. 384

தவஞ் செய்யெனல்

எத்திரத் தோரும் புகழ்செந்தி லான்ற னெழில்வடிவஞ்
சித்திரத் திற்பொறித் தற்கமையாது திருந்து நெஞ்சாற்
பத்திரஞ் செய்யிற் சிலர்க்கே யமையுமிப் பாங்கறியாய்
தத்திரங் கொள்ளன்மின் னேயவன் றோன்றத் தவஞ்செய்திடே. 385

புத்தி கூறல்

மெய்வசந் தீர்பர மானந்த மெய்திய மேலவர்பாற்
செய்வசனத் தன்றிருச் செந்தி லான்றனைச் சேர்ந்தபின்னர்
கைவச மாகின னென்றுவப் பாரைக் கழித்துவெறும்
பொய்வசத் திற்புகுப் பானஞ்சி வேண்டல்செய் பொற்கொடியே. 386

வலிதுவருங் கொலென்றல்

ஆனேறு கைத்தவன் சேய்திருச் செந்தி லதிபனிட
மேனேனிரங் குகிலாயெனக் கெஞ்சுந ரெண்ணின் மின்னார்

Koviloor Digital Library

தேனேரு மின்சொற் றிருவே யுனைமிகத் தேடியிங்கு
தானேருங் கொனின்வேட் கைகளி யாவுந்தரும் பொருட்டே. 387

கேட்டமை யுணர்த்தல்

சந்தாசலந் திகழ்செந் தூர்ச்சரவணன் றன்னை நம்புங்
கொந்தார் குழன்மட வார்பல ருள்ளங் கொதிக்கவிட்டுன்
சிந்தா குலந்தவிர்ப் பானுனைத் தேடிச் சிகிப்பரியில்
வந்தானை நீமதித் தாயில்லை யாமடி மாதரசே. 388

என் செய்தாயெனல்

மைப்படியுங் கறைக்கண் டத்தர் பாகத்து மங்கைதனச்
செப்படிப் பற்றி யமுதுண்ட வாயன்றிருச் செந்திலா
னப்படிநீ சொன்ன வண்ணமெல்லாஞ் செய்யுமன்பை விட்டிங்
கிப்படி யேன்றிரும் புற்றானென் செய்தனை யேந்திழையே. 389

குறைவருமாறு கூறல்

நீர்த்தை யல்வாழுஞ் சடைக்காடு ளார்மக னெட்டிலையின்
கூர்த்தைய வேற்படை கொண்டோங்குஞ் செந்திற் குமரனுன்னைப்
பார்த்தைய மெய்தலெனத் தீர்க்க மாகப் பகருகின்ற
வார்த்தையின் வண்ண நடவா திருக்கில் வருங்குறையே. 390

தருக்கூட்டல்

வாரொன்று மென்முலைப் பேதைநல்லா யென்சொல் வம்பலக்கேள்
சீரொன்று கோடி விதமாவிளங் குந்திருச் செந்திலிற்
கூரொன்று வேலொடு நின்றவன் றோள்புணர் கோதையென்னும்
பேரொன் றிருக்கிலது போது மெந்தப்பிறப் பிற்குமே. 391

மகிழ்வுற வாழ்த்தல்

பஞ்ச வன்னக்கிளிக் கையான் செந்தூர்வளர் பண்ணவன்முன்
குஞ்சரி யைக்குறக் கோதை யினாற்றுயர் கொள்ளவிட்டா
னஞ்சனக் கண்ணி னவளுன்ற னாற்றுய ராரச்செய்வான்
வஞ்சகம் பொய்சொல்ல மாட்டேன் கண்டாயடி வார்குழலே. 392

பாங்கி தலைவன்முற் பகர்வன

மணமெடுத்துரைத்தல்

காவுல கத்தினர் நம்புஞ் செந்தூர்வளர் கந்தசெஞ்சொற்
பாவுல கத்தின ளவேக மழுநின் பத்தியிந்த
மாவுல கத்தை விட்டார் நெஞ்சின்மட்டு மணக்கும்வைத்த
மூவுல கத்தினும் வாசிக்கு மென்மகண் மொய்குழலே. 393

Koviloor Digital Library

பருவங் காட்டல்

நூன்மணக் கும்புகழ்ச் செந்தூர்க் குமர நுடங்கரிய
வேன்மணக் குங்கைக் குமரேச வெட்சியின் மென்கடம்பின்
றேன்மணக் கும்புயமால் கொடுத்தாயதிற் சிக்கிக் கொண்டென்
பான்மணக் குஞ்சிறு வாயாள் படுந்துயர் பார்க்கரிதே. 394

இயைபுரைத் திரத்தல்

இலக்கண சார மறியாப் புலவ ரிழிகவிக்குங்
கலக்கமில் வாழ்வளித் தாளவல் லாய்நின் கருத்தறியா
தலக்கணுற் றேங்குமிவ் வாயிழைக் கின்பமளித் தருளாய்
நலக்க மலாலயத் தாரகலாச் செந்தி னாயகனே. 395

ஓமலிப்புக் கூறல்

ஏக்கலை யுந்தெரி வார்தொழு தேத்துமெழிற் செந்திலாய்
மெய்க்கலை வாகன னாணுறுந் தோகையில் வீதிவந்து
கைக்கலை தாங்கி வளைதேடு வார்பலர் கண்ணெதிரென்
னொக்கலைப் பெண்ணுக்கு மால்கொடுத் தாயிதொ ரோமலிப்பே. 396

முற்றும் பொயன்றெனல்

வாயார வாழ்த்துநர்க் கின்பமெல்லா நல்கும் வண்மைகண்டு
பேயாய்ப் படுத்து மகள்வாழ வேண்டியென் பெற்றவயிற்
றாயாச மிஞ்சியொவ்வோர் போதொவ்வோர் பொய் யறைவதன்றி
யோயாமற் பொய்சொல்ல மாட்டேன் செந்தூர் வளருத்தமனே. 397

தழை வியந்துரைத்தல்

முத்தமிழ்ப் பாவலர் போற்றுஞ் செந்தூரின் முருகையநின்
கைத்தழை கண்டுதொட் டின்பமுற் றாண்மகள் காசினியோர்
பித்தடைந் தாரர வங்கடித்தார் கொடும்பேய் பிடித்தா
ரொத்த வரைத்திருத் தத்தழை வேண்ட லுணர்ந்தனனே. 398

வயிற்றினைப் புகழ்தல்

எயிறுக வெய்யவன் றன்னைவென் றார்மைந்த வெவ்வுலகும்
பயிறுக டீர்புகழ்ச் செந்தூர வாய்கொண்டு பற்றியமு
தயிறுக ணாற்ற மறியா விரதமனைய வற்றென்
வயிறுகன் றிச்செய்த வங்காணின் மேன்மகண் மால்கொண்டதே. 399

அடைக்கலங் கூறல்

இறலருஞ் சீர்திகழ் செந்தூர்க் குமரநின் னின்னருளாற்
பெறலருங் காலத்திற் பெற்றவென் பேதை பெருக்கமைய

Koviloor Digital Library

ஞறலறிந் துன்னிடத் துய்த்தே னவள்கொங்கை யூக்கமறைந்
தறலன்ன கூந்தல் பஞ்சானாலு முன்றற் கடைக்கலமே. 400

நெறியெடுத்தியம்பல்

வன்மனச் சூரனை மாய்த்தும் பர்வாழ்வுற வைத்தனந்தந்
தன்மநி லாவிய செந்தூர் புரக்குஞ் சரவணனே
பன்மட வார்களி கூர்தர வின்பம் பகிர்ந்துளநீ
யென்மகண் மட்டி லிரங்கா திருப்ப தியல்பல்லவே. 401

உய்வ தெவ்வண்ணமெனல்

காயிரும் புங்கதிருஞ் செக்கர் வானுங் கனிதுவரு
மாயிலங் குங்குக நின்னைச் செந்தூரிற்கண் டன்றுமுதற்
றாயினை வையத் துணிந்தா ளமுதந் தனைவெறுத்தா
ணீயிரங் காவிடி லெவ்வணுய் வாளந்த நேரிழையே. 402

நினைத்திலா யென்றல்

நஞ்ச யின்றாரழற் கண்ணால் வருஞ்செந்தி னாயகனே
யஞ்சல ரேவுமத வேட்குந் தென்றற்கு மம்புலிக்குங்
குஞ்சர மாய விருளுக்கு மஞ்சிக் குலைந்துநித்த
நெஞ்ச கத்துன்னை நிறுவுகின் றாளை நினைத்திலையோ. 403

முரசொலி வினாவல்

தாமரை வாவிபல சூழுஞ் செந்திற் சரவணனே
நீமட மாதர் பல்லோர் நெஞ்சி லுள்ள நிறைகுலைத்தற்
காமடை யாளமன் றோபிரி யார்தமக் கார்வநல்குங்
காமன்முர சொலிசந் நிதிமுன் னென்றுங் காட்டுவதே. 404

சங்காழி யிரத்தல்

மங்குலுஞ் சோலையு மாறாத சந்தன மால்வரைச்சீர்
பொங்குசெந் தூருடைப் புண்ணியனே நின்புயம் விரும்புங்
கங்குலங் கூந்தனல்லாள் கலைசோரக் கவர்ந்து கொண்ட
சங்குட னாழியை யானாலு மிக்கணந் தந்தருளே. 405

மாலிகை வேண்டல்

பொங்கட மார்தரு சூரனைக் கீன்ற புகழ்ச்செந்திலா
யங்கடம் போலு முலைமீ தனங்க னலர்சொரியச்
சங்கட மெய்தித் தவித்தெய்த் துளாணின் றடம்புயத்துச்
செங்கடம் பாரமளித் தாலுய் வாளென் சிறுமியன்றே. 406

Koviloor Digital Library

விலகாமை வேண்டல்

கேடற்ற தென்னரு ணாபுரி மேய கிளிப்புலவன்
பாடற் சுவைபொரு மென்மொழிப் பேதைநின் பன்னிருதோட்
கூடற் குறிப்பின ளியாதோ விழைந்தன்று கொண்டுள்சிற்
றூடற் கொதுங்குற லாமோ செந்தூரி லுறைகந்தனே. 407

மகணலம் பகர்தல்

நீடிய செங்கரும் புச்சிலை யான்சமர் நேர்ந்தமையால்
வாடிய வல்லிக் கொடிபோனு டங்கிமுன் மாழ்கியவ
ளாடிய தோகைமயி லூர்செந் தூரநின் னங்கதத்தோள்
கூடிய பின்னுவப் புற்றா ளெனது குலமுய்ந்ததே. 408

வருநாள் வினவல்

கொக்கன்று துண்டுபட வாரி செந்நிறங் கொள்ளவென்று
திக்கந்தமும் புகழ்சீர்த் தோய்செந்தூர நின்றிண் புயத்தா
லிக்கன் சமர்விளைந் தேங்கிப் பரதவித் தென்மகடன்
மைக்கண் பிசைந்தழு தாளென்று நீயங்கு வந்தெய்தலே. 409

ஏமாற்றொண்ணாதெனல்

வாமாங் கனையுடை யார்நுதற் கண்ணிடை வந்தசெந்தூர்க்
கோமானிற் கூடுவதென் றோவென்றோ லிடுங்கோதை கண்முன்
னீமாத்திரந் தனித்தே கித்தொடா வண்ணநின் றுமறைந்
தேமாற்றி டத்தகுமோ விதுன்மேன்மைக் கிசைந்த தன்றே. 410

கோதிலாளென்றல்

அன்பே வடிவமுற் றாலன்ன தொண்ட ரணுகுஞ்செந்தூர்க்
கின்பே விளைக்கவருங் குமரா நின்னெழிற் பவனி
முன்பே மயங்கி வெகுபாடு பட்டு முயங்கிமகி
ழென்பேதை குற்றமொன் றில்லாளி ருக்கினிற் கேற்றமின்றே. 411

மகள்பேறு வியத்தல்

பொன்மழு வேந்துங் கரத்தாரு மெச்சும் புகழ்ச்செந்திலாய்
நின்மருங் குற்றவர் நிற்கமற் றெங்கு நிறைந்துவளர்
பன்மட வாருளுனைக் கூடி யின்பம் பருகுநலத்
தென்மகள் பெற்ற பெரும்பேற்றின் சீல மெவர்க்குளதே. 412

கரையேற்றம் வினவல்

கச்சைத் திருவரைக் கந்தா செந்தூர்வளர் காவலவா
பிச்சைத் தவமுடை யாரருளாற் பெற்ற பெண்குழந்தை

Koviloor Digital Library

செச்சைப் புயநிரை மேற்கொங்கை தோய்தரச் சேர்வதற்கா
மிச்சைக் கடலுள் விழுந்ததெந் நாள்கரை யேறிடுமே. 413

உணர்வொடு மாழ்கல்

கொல்லாமற் கொல்கொடுங் கூற்றுறழ் காமன் குவளைமல
ரல்லாத நான்குமெய் தாய்விட்ட தின்னமதை யெடுப்பா
னெல்லார் வயற்செந் தில்வாழ் வாயுலக நிகழ்த்துவன
வெல்லா மறிந்த வுனக்கினி நான்சொல்வ தேதுளதே. 414

ஒப்புக் கேட்டல்

மோக மின்னா ரிடம்பொய் பேசலாமென முன்னைமறை
யாகமஞ் சொல்லியது போல வென்ற னருமைமகள்
பாகமிர் தன்ன சொற்கேட்டும் பல்வாறு பகர்ந்திலையோ
வேகசொ ரூபத்தனே செந்தின் மேவு மிறையவனே. 415

ஏழைக்கிதஞ் சொல்வதேனெனல்

மாழைக் குவடுறழ் கொங்கை நல்லாளிடம் வந்துமுன்னை
யூழைத் தவிர்க்கும் வலியுமுள்ளே னென்றுறுதி சொல்லிக்
கீழைச் சிறிதுமுலை நோக்கு முன்னங்கு கிட்டல்விட்டீ
ரேழைக்கிதஞ் சொல்ல லாமோ செந்தூரி லிருப்பவனே. 416

அலுப்பொடு சினத்தல்

இத்தனை தூரந் தெருவீதி தன்னி லிழுத்தென்மகள்
பித்தடைந் தாரிற் றடுமாறத் தக்க பிரமைநல்கிப்
பத்தமில்லா தகுறக்குணங் காட்டப் படாது கண்டாய்
முத்தமிழ்த் தேசிகனே செந்தில் வாழு முருகையனே. 417

உறுத்திக் கூறல்

காவாரும் பொன்னகர்க் காவல் கொள்வானைக் களிக்கவைத்த
தேவாதி தேவசெந்தூர் முருகா நின்றிரள் புயத்தின்
மேவா மகிழ விரும்புகின் றாளை வெறுத்தனையேன்
மூவாமறை முழுதோர்ந் தாயென் றோதன் முழுப்பிழையே. 418

இகழ்ச்சி கண்டிரங்கல்

முப்பத்து மூன்றுவகைக் கோடி தேவர்தம் மூதுணவிற்
செப்பத் தகுஞ்சொல் லுடையாளைக் கண்டுசிரித் தொருபாழ்ங்
கொப்பத்தில் யானையை வீழ்த்த லினீமுன் கொடுத்தமைய
றுப்பக் கழிவுபட லாகுமோ செந்திற் சுந்தரனே. 419

Koviloor Digital Library

புணர்ப்புரை யென்றல்

கொன்றைத் தொடையணி செஞ்சடை யாருங் குரவனென
வன்றைக்குப் போற்ற வருங்குமரா செந்தி லாதிபனே
யின்றைக்குங் காமன் கணையாற் றளர்வுறு மென்மகளை
யென்றைக்குத் தான்புணர் வாயளவா வின்ப மெய்துறவே. 420

இழிவுனக்கென்றல்

காலபயந் தவிர்த்தோர் வேதியற்குக் கருணை செய்தார்
பாலனென வந்துளாய் செந்தில் வேலநின் பன்னிருதோட்
கோல நினைந்து மற்றெல்லா மிழந்து கொதிகொதிக்கு
மேலநெடுங் குழலா டுன்ப மெய்தி லிழிவுனக்கே. 421

நிசமொழி விழைதல்

கன்மோக மங்கை யுருவாகச் செய்த கழற்பெருமான்
றன்மோகன மருகா செந்தில் வாழுந் தமிழ்க்குகவென்
மின்மோக நின்மிசை கொண்ட துண்டந்த விளங்கிழைமே
னின்மோகஞ் சற்று மிலையோ முக்காலு நிசஞ்சொல்லிடே. 422

உடன் வரவழைத்தல்

மன்றுவந் தாடும்பிரான் மைந்தரே செந்தில் வாழ்கந்தரே
யொன்றுசொல் கின்றனன் றள்ளாது கொள்ளு முமைக்கலந்த
வன்றுதொட் டின்று மட்டுந் தினந்தேடி யழுங்குமவ
ளின்றுவந் தோர்மொழி நீர்சொல்ல வேண்டி யெனைவிட்டதே. 423

மகவாசை காட்டல்

பற்றலர் தம்மை யெல்லாமெ மன்வாழ்நகர் பார்க்கவிடுங்
கொற்றவை வேற்குகனே செந்தின் மேவுங் குணக்கொண்டலே
சிற்றன நேர்நடை யாள்சொனிட் டூரஞ்செவி வழிபோய்ப்
பெற்ற வயிற்றை யுடனே திருக்கிப் பிசைகின்றதே. 424

தன்றொடர்பொழித்தல்

தென்றமிழ்க் குன்றுடைத் தேசிகன் போற்றச் சிறந்தசெந்தூர்
மன்றகத் தாடுங் குகனேநின் மோகவலை யிடைப்பட்
டென்றனை வையத் துணிந்தாளுக் கெய்துறு மின்பதுன்ப
முன்றனக்கே யல்லவோ வெனக்கேது சொல்லுற் றுணர்ந்தே. 425

Koviloor Digital Library

பாங்கி பாங்கன்முற் கூறுவன

பழித்தலிற் புகழ்தல்

என்றலைவிக் கெதிரா னையைக் காட்டி யெழிற்புனத்தி
லன்றணைந் தானிச்சை யில்லாளை யிங்ஙனடை தனன்றோ
குன்றனைத் தும்புகுந் தாடிச் செந்தூர்வரு கொற்றவனா
முன்ற லைவன் பொருகாமுக ராரு முலகிலின்றே. 426

தலைவனைக் குறிப்பிற் றாழ்த்திக் கூறல்

எங்கள் பிராட்டி தன்மேன்மத வேள்கணை யெய்தறியா
னுங்கள் பிரானையு மெய்தில னோவிங் குரைக்குமிவர்
தங்களின் மேலெவர் தாழ்வா ரெவர்பகர் தண்பனிநீர்ச்
செங்களபம் பொலிசீர்ச் செந்தி லான்றுணைச் சேவகனே. 427

தலைவனிரக்க மிலானென்றல்

கன்னலம் பாகுறழ் சொற்குறப் பேதையைக் கள்ளுமன்று
பின்னடர்ந் தோர்களைக் கொன்றான வளமும் பெற்றியினா
லன்னவ ருய்ந்தனர் செந்தூரில் வாழு மறுமுகவ
னின்னருட் சீருடை யானெனக் கூறுவ தெவ்விதமே. 428

தலைவனிளையானென்றல்

மாடேறு மீசன்றன் மைந்தன்செந் தூரில்வரு மடியா
ரிடேறச் செய்யவல் லானெங்கள் பாவைக் கிசைந்தவனோ
வாடேறிப் பார்ப்பதி தன்முலைப் பாலுண்ட ளவின்மலை
காடேறி யாடிக் களிகூரத் தக்கதொர் கான்முளையே. 429

ஒத்துரையென்றல்

தீயொரு கையி லுடுக்கை யொர்கையிற் செறித்தபிரான்
சேயொரு மைப்புகழ்ச் செந்தூரன் மாலிற் சிறந்தமின்னா
டாயொரு பாதகி செய்துயரான் மிகத்தட் டழிந்தா
ணியொரு வேளையென் னோடொத்து நின்று நிகழ்த்தினன்றே. 430

சகிப்பரிதென்றல்

காயுங் கதிரயிற் கையான் செந்தூர்வளர் கந்தனன்பிற்
றோயுங் கொடியிடையைக் கன்னல் வேளுந் தொனிக்கடலும்
பாயுந் தென்காலுங் குயிலாதி யவும்பகைத் ததன்றித்
தாயும் பகைத்தனள் காணிது பாவஞ் சகிப்பரிதே. 431

Koviloor Digital Library

தன்னுடன் சேர்த்துப்புகழ்தல்

தாமக் கடம்பணி செந்தூர்க் குமரன் றனக்குமவ
னாமக்கதிர யிற்றோள் வேட்கை யாளுக்கு நாமிருவர்
சேமக் குறிப்புரைக் கின்றபண் பாலவர் சிந்தைகொண்ட
காமக் கடலின் கரைகாட்டும் வண்மைக் கலமொப்பமே. 432

தாங்காமை கூறல்

நற்றேவர் கோன்முத லோர்தொழு தேற்றநவி லுஞ்செந்தூ
ருற்றேதந் தீர்க்கவல் லானுயிர்த் தோழமை யுள்ளவள்ளால்
பொற்றே ரனையவல் குற்பெரும் போகம் புணர்த்துமவன்
சற்றே பிரியினுந் தாங்கா ளெனது தலைமகளே. 433

செய்தி வினாவல்

கோலா கலமயி லூர்ந்து செந்தூர்வளர் கொற்றவன்கை
வேலா யுதம்பொரு கண்ணா ளென்றன்னை வெறுத்திகழ்வாண்
மாலான வர்க்குள்ள பண்பெனத் தேறி மகிழ்ந்துகொள்வேன்
சேலாருங் கேதனத் தானனை யாயங்குன் செய்தியென்னே. 434

கண்களைப் புகழ்தல்

திண்கழற் காலுடைச் செந்தூர்க் குமரன் றினைப்புனத்துப்
பெண்கள் சிகாமணியைத் தேவர்கோன் றருபெய் வளையைப்
பண்கலுழ் செச்சைப் புயத்தாற் றொடுதலும் பார்க்குநந்தங்
கண்கள் செய்புண் ணியத்தைச் சேடனாலுங் கழறரிதே. 435

குறையின்மை கூறல்

அஞ்சியலக் கரத்தார் மைந்தனா றெழுத்தாள் செந்திலான்
விஞ்சிய சீர்ச்சந்த வெற்புடை யானிரு மெல்லியலார்
நெஞ்சியல் போர்ந்தவர் தாமகிழ்ந் தேத்த நிதமணையிற்
கொஞ்சிய வாழ்வுள்ள நாணமக் கேதுங்குறை யில்லையே. 436

நூற்பயன்

வெல்லு மருட்பெறு வார்செல்லு மாறு விடுத்தமைபோற்
சொல்லு மகப்பொரு ளீதுசெந் தூர்க்குகன் சூடியது
கல்லு முருகக்கனி சுவைத்தா மெனக்கற்று நித்த
மல்லும் பகலு முணர்வாருக் கில்லையரு வினையே.

முற்றிற்று

Koviloor Digital Library

Koviloor Digital Library

2

திருப்புகலூர் பஞ்சரத்தினக் கோவை

Koviloor Digital Library

Koviloor Digital Library

2

திருப்புகலூர் பஞ்சரத்தினக் கோவை

காப்பு

நேரிசைவெண்பா

யக்கர்பிரான் போற்று மெழிலார் திருப்புகலூர்
முக்கணருக் கான மொழிதேடிச் - செக்கர்நிறப்
பஞ்சரத்தி னக்கோவை பாடுவேன் பற்றுதுணை
குஞ்சரத்தி னோடு குகன்.

நூல்

பொன்போன்ற மேனிப் புனிதர் புகலூரி
லன்போர்க் கிரங்கும ருட்கடலே - யென்போல்வார்
பாடலைக் கைக்கொண்டு பரிசளித்தாற் பாவமென்றோ
நாடலைநன் கெண்ணுதியிந் நாள். 1

நாளத் தனைவம்பிற் போக்கிவிட் டேன் செங்கை ஞாங்கரணி
வேளத் தனைப்புக லூர்ப்பெரு மானைமுன் வெற்பளித்த
காளத் தனைமண வாளனைப் போற்றிக் களிக்கையின்றித்
தாளத் தனைய முலைச்சிறு மாதர் தமை நினைத்தே. 2

தமையளத்தற் கறியாதார் தண்புகலூர்க் கோயிலிடை
யமையனைய தோளியொடு மமர்ந்திருக்கு மம்மானா
ரிமையசையு மத்தனைபோ தெனையருளா லெண்ணுவரேல்
சுமை யைநிக ரூனுடம்புஞ் சொரூபமதாத் தோன்றுமன்றே. 3

அன்று சுந்தர னுண்மகிழ் வதுகருதா
வம்பொ னெஞ்ச லறவருளினை யதனா
லென்று மம்புவி யில்வரு புலவரைநீ
ரிண்டை தங்கு முடிவிறை வளர்புகலூர்
நன்று நன்று கவிபக ருதிரெனவோர்
நந்த லின்றிய பதிகமெ ழுதினனா
னின்று ணர்ந்துபல நுவல்கை யெய்தினனீ
யென்செய் கின்றனை கொலறி கிலனரனே. 4

Koviloor Digital Library

அரவினும் வெளுத்த வங்கமா லையினும்
பரவுமென் பனுவல் பழுதெனத் தகுமோ
வங்ஙனந் தானென் றறைகுதி யாயி
னெங்ஙன மெனக்கேட் டிழாதுனை விடேன்காண்
முன்னநீ யணிந்த முதிர்தமிழ்ப் பெருக்க
மின்னண முளவென் றிகழுழு தறியு
மாதலிற் பொதியை யகத்திய னனைய
மாதவர் தம்பால் வழக்கிடப் போது
மியானிவண் சொல்லா லிளியுனக் கின்றே
கூனிய முதுகாள் கொடைவுண வேட்டு
மண்சுமந் ததுவு மகவுடை வணிகப்
பெண்சலிப் போவப் பெருந்திறல் வழுதி
யவையிடை வழக்கன் றாடலுங் கரத்திற்
கவையணி குயவர்க் கள்ளவல் வழக்கிட்
டீர்த்தது மறியா ரிலையிலை யீர்ந்தோற்
போர்த்தளி கூரும் புகலூர்ச் சிவனே. 5

சிவனே திருப்புகலூர்ச் சித்தனே யென்னைத்
தவநேச மில்லார் தலைவ - னிவனேயென்
றாயவிட வேண்டா மமரரெல்லா மஞ்சவருந்
தீயவிட முண்டதெண்ணிச் சேர். 6

சேரனன் னார்க்கொரு சீட்டேனு நல்குதி செம்பொ னிச்சைக்
காரரொப் பாகிக் கழிவுபட் டேனின்கனற் கண்மைந்தன்
பாரறி யக்கற் கிணறுதொட் டேங்கப் படுத்துகின்றா
னாரணன் போற்றும் புகலூர்ப் பரவுமை நாயகனே. 7

நாயனைய சிறுநெஞ்சா னலங்குலைந்து நாரியர்தம்
வாயதரச் சுவைநாடி வருந்தவென்னை விடலாரோ
வாயபொருண் முழுமையுமா யவையொன்று மாகானே
தீயவர் களேத்த ரியதிருப் புகலூர்ச் செங்குன்றே. 8

செங்குன் றூரிடை பகர்மொழி நினையீர்
தெம்பொன் றீனர்முன் யாதுய ரொழியீ
ரெங்கும் போகுமென் மனமிசை மிதியீ
ரின்பம் சேர்வதெ வண்மினி தருள்வீர்
சங்கும் காதினி லணிதகை யுடையீர்
தண்பைஞ் சோலையொ டிலகிய புகலூர்
தங்குஞ் சீரியர் தவமென மிளிர்வீர்
சண்டன் சாவுற வடுகழ லினரே. 9

Koviloor Digital Library

கழகப் புலவோர் கணம்முன் னேகிக்
குழன்மணத் தியற்கை கூற வல்ல
நும்புகழ் பகர்வே னுடங்கத் தகுமோ
தெம்புறு மாறோர் சிறிதருள் புரிவீர்
வானநாட் டகத்தோர் மாழ்கப் புவியிற்
போனக மிரந்தும் புலவனுக் களித்தீ
ரென்னகங் களிகூர்ந் திடச்செயீ ராயிற்
பன்னக ரினரும் பழிப்ப ரந்தோ
விகலூர் முற்று மெரியெழ நகைத்துப்
புகலூர் மேய புராணபுங் கவனே. 10

புங்கரனை வர்க்கும் புகலாம் புகலூரிற்
சங்கரனைத் திங்கட் சடையானைத் - தங்க
நெடுமாற்ற தாக்கொடுக்கும் நித்தியனை நத்தித்
தடுமாற்றந் தீரத் தகும். 11

தீரத்த னாகித் தவம்புரி யாமற் றினமு மெண்ணி
லூரத்தந் தேடி யுழன்றேனந் தோவெனக் கொண்புகலூர்ச்
சீரத்த னேநின் றிருவருட் செல்வங்கள் சென்னியின்ன
னீரத்தனை நல்க வேண்டுங்கண் டாயிந்த நேரத்திலே. 12

நேரார்தம் மிகல்கருதி நிதந்தளருந் தமியேனைக்
கூராழி மாயனெனக் குலவிடச்செய் திடல்வேண்டு
மாராதித் திடுஞ்சேய்க்கா வந்தகன்ற னுயிருண்டாய்
தேராளர் மலிவீதித் திருப்புகலூ ருடையானே. 13

யானு னக்கினிய வாறொழுகு நீரிலே
னேனு மித்ததியி லாளல்கட னாகுமா
லானு வப்படையு மாறுசெய நாடினே
னாத லிற்சிவசி வாவிதென் பாவமோ
ஊனு ணக்கொலைசெய் வார்களினு மீனனோ
வோத வர்க்குவகை யீதன்முறை யாகுமோ
பானு வொத்தகுழை யாளிலகு பாகனே
பார்ம தித்தவள மேயபுக லூரனே. 14

ஊர்தொறு மிரந்துண் டுடையத ளாக
நீர்தலைக் கொண்டு நிலவன்மெய் யாயி
னன்றுபோற் றிசைத்த வருந்தமிழ்ப் புலவன்
கன்றுறா வண்ணம் கனகச் செங்க

Koviloor Digital Library

லெங்ஙனங் கொடுத்தா னென்னவை யுறுவார்க்
கிங்ஙனந் தானென் றெனக்களித் துணர்த்தாய்
வானநாட் டவரு மகிதலத் தினரும்
பானலங் கண்ணார் பலரொடு தினமும்
வந்து வந்து வழிபட வரங்க
டந்துதந் தருளித் தண்பணைப் புகலூர்
மாட்டு நின்று மலிதமிழ்ப் பனுவல்
கேட்டுமிக் குவப்பாற் கிளர்கிழ வோனே. 15

கிழவனெனப் பல்கால் கிளத்துநனென் றெள்ளேன்
மழமடவார் நெஞ்சுருக வந்த - வழகினையுஞ்
சொல்கின்றேன் கண்டாய் துகளில்புக லூர்துதிக்கச்
செல்கின்றார் நெஞ்சிற் சிவா. 16

சிவனேமுக் கண்ணுடைத் தேவே யருந்தமிழ்ச் சீர்ப்புகலூ
ரவனேநின் மைந்தற் கடிமைசெய் தேன்மிக் கருள்செய்திடா
திவணேங்க விட்டன னின்பால்வந் தேன்நின் னிதயமென்னோ
தவநேய மில்லவர் நிந்தைவெந் தீச்சொற் சகிக்கிலனே. 17

சகிக்கரிய வினைத்துயரிற் றளைப்பட்டுத் தவிக்கின்றேன்
முகிற்பரியா னடைவருஞ்சீர் முன்னியவா றருள்செய்வா
யகிப்பணிமிக் கணிவானே யறமலிதென் புகலூரா
திகிற்படுமா னினம்முற்றுஞ் சிந்தையுவப் புறுமாறே. 18

மாறாத துன்ப மென்று புவியோர்தாம்
வாயால் விளம்ப வந்த மிடியானோய்
நீறாயெ ரிந்தொ ழிந்து விடுமாறே
நீதானி ரங்கி யென்றெ னெதிராவா
யாறான னன்பி றந்த விழியானே
யாழாழி நஞ்ச முண்ட புகழோனே
பேறாளர் வந்தி றைஞ்சு புகலூரா
பேய்பாட லும்பு னைந்து மகிழ்வானே. 19

மகிழ மாலிகை மாரன் றானிலும்
நெகிழுமன் பின்றி நிற்கொலக் கருதித்
தழல்வளர்த் திருந்த தக்கன் றனிலுங்
கழகத் திகழ்தரு கவிஞன் றனிலும்
பொல்லே னல்லேன் போற்றிநின் றிரந்தேன்
வல்லே னன்ன வளர்முலை மடவார்

Koviloor Digital Library

தென்றிருப் புகலூர்ச் செழும்பொற் கோயிலில்
வென்றிவெள் விடைக்கொடி விளக்கும் வேதியனே. 25

வேதியரிற் பற்பலர்போய் மென்றகையான் கன்றருந்துந்
தீதினரைப் போற்றுமிந்தத் தீநாளின் - மேதினிப்பாற்
றோன்றவென்ன பாவந் துணிந்துமுன்னாட் செய்தேனோ
வான்றபுக லூரா வறை. 26

அறைகழற் றாளெடுத் தாடும் பிரானுக் கணிப்புகலூ
ரிறைவனுக் குத்தொண்டு செய்யகில் லீரிரு ளென்னவிரு
பிறையெயிற் றந்தகன் கைவலை வீசிப் பிடிக்கவந்தாற்
பறையடிக் குஞ்சிந்தை யாலெண்ணு மாறொரு பற்றுமின்றே. 27

இன்றைக்கே விடைப்பரியி லென்னெதிர வந்தெல் லோரு
நன்றைத்தோய் தருமாறு நடத்திடற்கும் வல்லை யன்றோ
கொன்றைத் தார்ச்சடை யானே குமரிவள ரிடப்பாகா
வென்றை ச்சாடிய வீரா வெழிற்புகலூ ரெம்மானே. 28

எம்மைநீ யடிமை கொண்டதுபொ யாமலே
யின்னல் வாரிவடி யும்படிக லாபிநே
ரம்மை யோடுவிடை யின்கண்வர வேணுமா
லன்ன வூணில்விர தஞ்செயலி நாள்கொலோ
மும்மை மாமதிளெ ரிந்தநகை வாயனே
முன்னு வார்வினைக ளைந்தபுக லூரிலோர்
செம்மை யாளன்வனை யும்பதிக மோதுமா
செய்ம்ம னோரதம தன்றியிலை நாடினே. 29

நாடி நாடி நலமிக விழைந்து
பாடிப் பாடிப் பரதவிக் கின்றே
னின்ன தருணெறி நினைவினி லடங்கா
தின்னலுஞ் சுகமு மிடையிடை விளைத்த
தவற்றிற் றுயரே யதிக மாதலிற்
றுவக்கிய தவமுந் தோமற முடியாத்
தேடணை மூன்று மிகலின வன்றிப்
பாடலு மொருபாற் பணைத்தெழு கின்றன
நரைவரக் கண்டு நடுங்கிய தன்றித்
திரையினை யெண்ணித் திடுக்கமிக் குற்றேன்
பல்லுயிர்த் திரளும் படைத்தநீ யெனது
நல்லுரைக் கிரங்கா ஞாய மென்னோ

Koviloor Digital Library

வெவ்விதத் தேனு மினிப்பிறப் பெய்தாச்
செவ்விய பதத்திற் சேர்ப்பதுன் பரங்காண்
முக்கனிச் சாறு முறைமுறை பாயத்
தக்க தண்பனைத் தடந்தா மரையிற்
சங்குமிழ் மணியைத் தஞ்சினை யென்னப்
பொங்குபே ரன்பாற் பொன்னஞ் சிறையா
லோதிமம் புரத்த லோவாப் புகலூர்
நீதிவேந் தென்ன நிலவுசங் கரனே. 30

சங்கணிந்த கைம்மடவார் தந்நிறையெல் லாந்தணந்து
பங்கமுற வென்றோ பவனிவந்தான் - செங்கண்
ணரிபூட்கை வல்லியதோ லார்த்தபுக லூரான்
விரிப்பூட்டுந் தார்விடையின் மேல். 31

மேலாய தாய்சொற் கடங்குகில்லாண் முற்றும்வெட் கம்விட்டாள்
பாலார்ந்த வன்னமுங் கைத்ததென் றாளென்ன பாவமந்தோ
சேலார் விழிச்சிவை பங்காளர் தம்மைத் திருப்புகலூர்க்
கோலா கலத்தெரு வீதியிற் கண்ட கொடியிடையே. 32

கொடிய மதன்விடுங் கணையிற் குலைவுறுமக் கோதைக்காக்
கடிகமழும் பசுங்கொன்றைக் கண்ணி யருளிடல் வேண்டு
முடிமதியச் சூடொழிய முறைப்படி சேரவும் வேண்டும்
பொடியணியு மேனியராப் புகலூர்வாழ் புண்ணியரே. 33

புண்ணி யந்தெரியு மாடவ ராமவர்
பொய்மை யின்றியமி னார்மய லாய்மிக
நண்ணி வந்தணைகு வாயென வோதினு
நன்னர் நெஞ்சமில ராயிகழ் வார்கள்கொல்
பண்ணியைந்த மொழிமோகினி மாதெதிர்
பன்னி யின்றியவர் போல்விழ லோரதிரொர்
கண்ணி லங்கியுடை யீர்புக லூரிடை
கண்ணி யங்கொடுகு லாவிய நாதரே. 34

நாதங் கடந்து நான்மறை மிசைவாழ்
பாதங் குலவும் பழம்புக லூரான்
போற்றுநர்க் கெல்லாம் பொற்பெருஞ் செங்கன்
மாற்றுரைக் கரிதா வழங்குகின் றானென்
றெண்ணி யென்னை யிகமலி வகுளைக்
கண்ணியன் கைக்கணைக் கிலக் காக்கிச்

Koviloor Digital Library

சென்ற கேள்வர் திரும்பிடி னன்றிக்
குன்ற நேர்முலைக் குறும்படங் காவே. 35

அடங்காட்டு வார்புரங்க ளட்டார் புகலூ
ரிடங்காட்டு மான்போல்வார் யார்க்கும் - விடங்காட்டுங்
கண்படைத்த நான்முகன்கை காலன் களிகூரு
நண்பதென வெண்ணுகின்றே னான். 36

நானந்த மங்கையைக் கண்டிந்த மட்டு நடந்துவந்தேன்
றேனந்தண் கொன்றைச் சடைப்புக லூரர் திருவருளாற்
றானந்த வர்சென்று பார்த்தாலென் மாற்றஞ் சரதமதா
மூனந்த வேற்படைச் செவ்வேளொப் பாயென் னுயிர்நண்பனே. 37

நண்ணார்தம் புரமூன்று நாசமுற நக்க பிரான்
கண்ணான்முன் மதவேளைக் காய்ந்த வன்றென் புகலூரில்
விண்ணாணச் சொன்மடவார் விழிவேல் பட்டுளநெஞ்சார்
தண்ணார்மென் முலையழுந்தத் தழுவி னன்றிப் பிழையாரே. 38

பிழையி தென்று நினையே லெனது தோழனே
பிரமை தந்த மடவாள் விழிமு னேர்கிலாள்
கழைம தன்க ரியநீ லமெறி யாமுனே
கலவி யின்ப மயில்சீர் கருதி லாதிநாள்
பழைய தொண்டன் விடுதூ தர்புக லூரினீள்
பனையி லொன்று மடலே துணைய லாதுவே
றுழையி லொன்று மிலைநீ யறியி லோதுவா
யொளிபெ ருங்குறளெ னூலுமிது கூறுமே. 39

கூறொரு மடவாள் கொள்ள நல்கி
யாறொளிர் சடைமீ தணியு மம்மான்
றென்புக லூரிற் றினமெழுந் தருளி
யன்புடை யவர்வேட் டவைமுழு தளிக்கை
கேட்டிலை கொல்லோ கிளிமொழிப் பாவை
மாட்டிவ ரிருகான் மலரடி நோவச்
சென்றவண் டிருத்தச் செலுத்திய புலவன்
றன்றமிழ்ப் பதிகந் தனையுணர்ந் திலையோ
பக்கனின் றரையன் பஃறர முறுக்க
வொக்கலு முறவு மொருங்குநெட் டுயிர்ப்ப
நற்றவ முனிவோர் நக்குமிக் கிகழ
மற்ற மானிடர் மறுகெலாங் குழுமப்

Koviloor Digital Library

பனைமட லூர்தற் பகர்ந்தனை யிதுநல்
வினையெனப் பகரேன் வெண்ணீ றணிந்து
கண்டிகை பூண்டு கமழ்மல ரிலைநனி
கொண்டினி தவர்தாள் குறிக்கொடு வணங்கிற்
பொறிமகள் கலைமகள் புலோமிசை யாதிய
கிறிபடாப் பருவங் கிளர்சிலர்க் கருதினுங்
நல்குவ ரன்றே நான்மறைத் திரளும்
பல்குர வோரும் பகர்வதிப் பரிசே. 40

பரியை நரியினைச்செய் பான்மைநச்சி லேன்காண்
கிரியை வளைத்திடவுங் கேளேன் - பெரிய
புகலூர்ப் பெருமானே பொன்விருப்பா லென்னை
நகலூர்செய் யாமைநட்டே னான். 41

நானிலத் திற்றினந் தென்புக லூரன்ன நற்றலந்தோ
றானியின் மெய்யடி யாருடன் போற்று மவரளித்த
பானிறக் கள்வன் முடிப்பான்கொ லோவன்றிப் பாழும்பிணமா
மேனிவிட் டேகிப் பிறக்கச் செய்வான் கொல்சொல் வெண்திருவே. 42

வெண்டிரு நீறணி யாதார் விரும்புமொரு குரவனையும்
பண்டி ழுத்துப் பணிகொண்டு பருகியருள் புகலூரா
வண்டினரு முழுநீற்றோ ராவது செய்வேன் றுயரங்
கண்டிருக்கத் தகுங்கொல்லோ கருணை யினுக்கழ கன்றே. 43

அழகிய மங்கையர் கொங்கையின் மாலா
லடிமைப டுந்துயர் கண்டிலை யோவேன்
மழகளி றென்றொளிர் கந்தனை நேர்சீர்
வரவரு ளென்றுது ணிந்துசொ றீயேன்
விழலென வம்புப டும்படி பாரேன்
விதுவணி யுஞ்சடை யும்பலர் சேர்நீர்
பழமைய தன்றுகொ றென்புக லூரா
பரவெளி யெங்கும் நிறைந்தொளிர் வானே. 44

வானிலிந் திரனா வதிதரும் மாண்பும்
பானிறத் தினள்மென் பணைமுலைப் புணர்ப்புஞ்
செந்தா மரையாள் சேர்க்கையும் பிறவுங்
கந்தா நெடுநாட் கனவென லறிந்தே
னெவ்வுல கமுநின் னிடமெனத் தெளிந்தே
னிவ்வுல கத்தே யெய்துமிவ் வுடலோ

Koviloor Digital Library

டெப்பயன் களுந்துய்த் தினிப்பிறப் பெய்தா
மெய்ப்பர வெளியில் விரவுமா றருளாய்
தொண்டர்தந் நிமித்தந் துகளிலோ ருருக்கொண்
டண்டர்சூழ் புகலூ ரமர்ந்தவா ரமுதே. 45

ஆரமுதே கண்ணே யரசேயென் றேத்துமன்பர்
சீரனந்தங் கேட்டுந் திருந்தாமற் - போனெந்தை
யன்னமனம் நாணுகில்லேற் கியாதுபய னீவாயோ
வன்னவயற் றென்புகலூ ரா. 46

ஊரா ரிகழ்வுறவோர் வருந்த வுழலு மென்னைப்
பாரா திருக்கத் தகுமோவந் நாள்பல பத்தருக்குந்
தாராள மாகக் கருணைசெய் தாயெனைத் தள்ளிவிடேல்
பாராய தேருகந் தாய்புக லூரிற் பரம்பரனே. 47

பரவுபெரு வாக்க ளித்தாய் பலநூலின் முடிவாய்
வுரமிதெனத் தெளிவித்தா யுவகை யின்றி யுழல்கின்றே
னிரவொழியக் கடல்போலு மிகலொ ழியவென் றருள்வா
யரவணி செஞ்சடைக் குன்றே யணிப்புகலூ ரகலானே. 48

அகள மென்றநிலை யறிகில னொருவா
றறியி னுங்கருதும் வலியில னதனா
லிகலு றுந்தவள விடைமிசை யுமையா
ளிடமி லங்கநடு வெனதுயி ருயிர்நேர்
குகனி ருந்திடநன் னவினில் விழிநேர்
குலவி நெஞ்சில்விழை வனமுழு தருள்வாய்
சகல மந்திரமும் வழிபடு புகலூர்
தனிலி லிங்கவடி வொடுதிகழ் சிவமே. 49

சிவன்றிரு வுருவே சிந்தைசெய் மனமு
மவன்புகழ் வினவற் கயராச் செவியும்
நிகரின்மெய் யடியார் நெட்டிதழ் மலர்த்தாண்
முகர்வதே நாளு முயலுநன் மூக்கும்
பைந்தமிழ் நால்வர் பழிச்சிய புகலூர்
செந்தகை யாதிய சேவைசெய் கண்ணும்
போற்றும் மாண்பே பொலிதரு நாவும்
நீற்று மலைபோ னிலவுநல் லுடலும்

Koviloor Digital Library

விருப்பொடு னயில்வார் வீறடு பகையுங்
கருப்பையிற் புகுதாக் கதியி னாசையு
மிடம்படு ஞாலத் தெய்தா வெரிதீப்
புடம்புகா வடியாப் பொடியாப் பொன்னே. 50

நூற்பயன்

செஞ்சரத்தி னக்கோவை தேவரொல்க வாய்திறந்த
வஞ்சரத்தி னக்கோவை வாசியினார் வான்புகலூர்த்
தஞ்சரத்தி நக்கோவைச் சாற்றுநனோ டீன்றகண்ணார்
பஞ்சரத்தி னக்கோவை பத்திதருஞ் சத்தியமே.

முற்றிற்று

Koviloor Digital Library

Koviloor Digital Library

3

குமாரபுரி குகன் மும்மணிக் கோவை

Koviloor Digital Library

Koviloor Digital Library

3

குமாரபுரி குகன் மும்மணிக் கோவை

காப்பு

வெண்பா

செம்மணிக் குன்றன்ன குகன்சேருங் குமாரபுரி
மும்மணிக் கோவை மொழிவதற்குக் - கைம்மணியொப்
பானமுலைப் பார்ப்பதியா மங்கை வடிவேலுமன்ன
கானமயில் வாகனமுங் காப்பு.

நூல்

அகவல்

கார்முகில் பொதிந்து கரியமா லென்னச்
சீர்மிகத் தருபல சிகரி தோறுங்
கொடிநடம் பயின்று குமார புரியி
னடிய வர்வாழ் வானவை முழுதொல்க
வந்தினி தமர்ந்தென் மனங்கவர்ந் தொருமை
தந்தியற் பனுவற் றருகென விரந்து
மிசைவுறா மாற்ற மியம்பச் செய்து
நசைமிகை படவே நவிலுமா றசைத்து
முலகினர்க் குரைக்கி லொய்யென நகர்க்காம்
பலவிளை யாடற் பயின்றும்வாழ் குகனே
யெவ்வகைத் துயரீண் டெய்தச் செயினும்
பௌவநீர்ப் புவியோர் பைம்பொன் வேட்கை
யொன்றும் வந்தென்னிடத் தொன்றா
தின்றுதொட் டின்னே யியற்றுதி யினிதே. 1

வெண்பா

இனியகட லைபய றெள்ளுண்டை பற்பல
கனியனைய கொள்ளுங் களிறு - நலிவிரும்புங்
கோலத் துணைவா குமாரபுரிக் கோமானே
காலத்துக் கஞ்சாமற் கா. 2

Koviloor Digital Library

கட்டளைக் கலித்துறை

காகாவென் றெத்தனை நாளிரந் தேனெனைக் காண்கிலைகொல்
போகாந்த காரத்தை நாடாத வண்ணம் புரந்திலையே
யாகாத பிள்ளையென் றாலந்த ஞாய மறைகுவையோ
வாகார் குமாரபுரிக் கோயிலு டென்றும் வாழ்கந்தனே. 3

அகவல்

கந்தனென் றொருவன் கைவே லேந்திக்
கொந்தலர் சோலைக் குமார புரியிற்
றன்னடி யவர்பாற் றறுகண் செய்வார்க்
கின்னலு மேனையர்க் கின்பமு நல்கி
வாழ்ந்துளா னென்னு மாற்றம் வினவித்
தாழ்ந்துபோற் றிசைத்துச் சண்முக மலரும்
பவளவெற் பின்நிகர் பன்னிரு தோளுந்
தவளநீ றணிவார் தலைமணங் கமழும்
பங்கயத் துணைப்பூம் பதங்களுங் கருதிச்
சங்கரன் றிருமால் சதுமுகன் முதலோர்
தமையெலா மிகழ்ந்து சாற்றரும் பேத
மமைதரு சமயத் தவரொடும் பிணங்கி
யிருந்தவென் பாலவ னெய்தி யெய்தித்
திருந்துபே ரறிவாத் திகழ்தரு தன்னை
யன்றிமற் றின்றென வதட்டி
யென்றிறன் றனையு மேற்றிலங் கினனே. 4

வெண்பா

ஏற்றுப் பரியாற் கிசைத்ததனை யென்செவியிற்
சாற்றுகெனக் கேட்கை தகாததோ - கூற்றுமட்டும்
வாராக் குமாரபுரி வாழ்குகனே வண்டமிழ்க்கொண்
டேராகி ளிக்குரைத்தா யே. 5

கட்டளைக் கலித்துறை

தாயார் முதற்பகர் நால்வகைச் சார்புந் தமிழ்விரும்போர்
சேயாய்த் திகழ்ந்த தன்சீ ருரைக்கிற் செழுங்கமல
மேயானைக் குட்டித் திருமாலைக் காத்தான் வேண்டுபொருள்
வாயாரச் சொல்லிக் குமார புரியின் வயினுற்றதே. 6

அகவல்

உற்றவ ரென்ன வுலகினர்க் கருகிப்
பற்றகல் பெரியோர் படிவங் காட்டிப்

Koviloor Digital Library

பொன்மயல் பெருக்கிப் புலருந்த மியேன்
நன்மனத் தொண்டர் நனந்தலை வைகி
யெவ்வகைப் பேறு மினிதுபெற் றமைந்து
பௌவநீர் புரையும் பகைப்பெருக் கொழித்துன்
றண்டையங் கமலத் தாளிடை புகற்காம்
பண்டை மாதவப் பயனிலே னெனினுங்
காப்பதுன் கடனிற் கான்முளை யென்ன
மோப்பவ ளிளமென் முலைநலம் புணர்வான்
கடம்பமால் வனத்தோர் கானவ னாகித்
திடம்பெறப் புரந்த தீயனிற் கடையே
னல்லனியா னறிதிய தன்பயன் சிறிதுள
கொல்லலின் முயலார் குமார புரியில்
வன்னமா யிரம்பெறு மயின்மேன்
மின்னகும் வேலொடு விளங்குதே சிகனே. 7

வெண்பா

தேசிகனை வேலெடுத்த சேவகனைச் செம்பவளப்
பாசியணி வாட்கினிய பான்மையனை - யாசில்
குமாரபுரி கோயிற் குகவேளை யன்றி
யெமாதுளத் தின்மற்றொன் றிலை. 8

கட்டளைக் கலித்துறை

இலையார்ந்த வெண்பொடி நல்கியன் றென்னோ டியம்பியசொன்
னிலையாமென் றெண்ணி யிறுமாந் துளேனை நிலத்தினரும்
விலையாடும் புன்பொருள் வேண்டவிட் டாயிதொர் வேடிக்கையோ
தலையாய செல்வக் குமார புரியிற் சரவணனே. 9

அகவல்

சரவுயிர்க் கொலைக்குஞ் சற்று மஞ்சா
வரவுறழ் பொல்லா ரளவில் பல்லோர்
வாழ்வுறு மிந்நாண் மகிதலத் தென்னைத்
தாழ்வுறப் படுத்த றருமந் தானோ
வென்னகங் கரியா வினிது தோன்றி
முன்னவின் றுளவா முடித்தருள் புரிவாய்
கோதகல் வளந்தோய் குமார புரியிற்
சீதரன் முதலோர் தெண்டனிட் டேத்தச்
செந்துவர்க் கிரியெனத் திகழ்ந்து
முந்துமெஞ் ஞான மொழிபகர் குகனே . 10

Koviloor Digital Library

வெண்பா

குகனைக் குமாரபுரிக் கொற்றவனை யீசன்
மகனைத் தினங்கருதி வாழ்வோர் - புகழு
மிருநாலு சித்தியுமுற் றெய்துமுத்தி வேண்டித்
தருநாட்டை யெள்ளுமவர் தாம். 11

கட்டளைக் கலித்துறை

தாமக் கருங்குழலார் மையனோயிற் றவிக்கு மென்னைச்
சேமப்படச் செய்யவல்லா யன்றோவென் றன்சிந்தை யுட்ப
லியாமதத்துஞ் சொன்னசொல் லெல்லாம் பொய்யோசெந் திலேயனைய
காமர்க் குமாரபுரி யாளும் வேற்படைக் கைத்தெய்வமே. 12

அகவல்

தெய்வத் திருமொழிச் செழுந்தமிழ்ப் புலவோர்
செய்வகை யாவுந் திரைநீர்ப் புவியோர்
பற்பல வாறு பகரக் கேட்டேன்
னற்ப நெஞ்சக மலமரல றிந்து
மத்திற் லொருசற் றருளிலை யந்தோ
சத்திவேற் படையொடு தமியே னிடைவந்
தென்னைநின் கிளியென் றிசைத்த மாற்றந்
தன்னையிவ் வுலகோர் தாமு மறியச்
செய்யுநா னினைத்துத் தியங்கவுங் கண்டாய்
பெய்யும்வால் வளையார் பிரமையு மோர்பால்
வந்துறச் செய்தாய் மறுதுணை யறியேன்
சிந்துர முலவுந் தெருநலங் குலவும்
பொற்புறு குமார புரியிற்
சிற்பர மாகித் திகழ்ந்தசண் முகனே. 13

வெண்பா

முகமனன் றென்வார்த்தை யென்னைமுற்றுங் கவர்ந்தாய்
சகலமுநீ யென்றுணரத் தாரா - யிகதலமும்
வானும் பரவும் வளஞ்சேர் குமாரபுரி
மானும் புகழ்வேல வா. 14

கட்டளைக் கலித்துறை

வேலாயுதப் பெரும்பூசையி னாசை மிகுக்கு மென்னை
மாலா தியோர்புக ழத்தகு நாளும் வருவித்திடாய்
சேலார் கட்குஞ் சரிபாகா புனத்துச் சிறுமிகொண்கா
கோலாகலா நங்குமார புரியிற் குருபரனே. 15

Koviloor Digital Library

அகவல்

குருவென வுலகிற் குலவ லெலாநின்
றிருவுரு வென்னத் தெளிதரப் பெற்றும்
புலைநெறிக் கொடியோர் புன்மைநாடி
மலைவுறுங் கொடுமை மாற்றி யருளாய்
தண்புனற் பணையிற் றயங்கும் வாளை
விண்புகி னுரிஞ்சி விரிபூ வுதிர்தரு
கொன்பொழி லுடுக்குங் குமார புரியி
னம்புநர் வேண்டுவ நல்கி
யம்புவி புரக்கு மயிற்கைவா னவனே. 16

வெண்பா

வானவர்தம் வாழ்க்கையை யுவம்பென் றருவருக்கு
ஞானமுறப் பெற்றபின்னு நானிலத்து - மானனையார்
பார்வைக் குருகப் படுமோ குமாரபுரி
யூர்வைகும் வேலா வுரை. 17

கட்டளைக் கலித்துறை

உரையிறந் துற்றமெஞ் ஞானானு பூதி யுடை வர்தாந்
தரையினிற் கூடுநன் னாள்வர வேண்டித் தவிக்குமென்னைக்
கரைதவிர் மாயைக் கடலூ டமிழ்ந்து கலங்கவிடேல்
புரையில் வல்லோர்மிகப் போற்றுங் குமாரபுரிக் குகனே. 18

அகவல்

புரிமருப் பாட்டின் புறத்தி லேறி
யெரிவளர்த் தோம்பு மிகத்து மாதவரும்
வானகத் திமையா வாழ்க்கை யோரு
மானமற் றழியா வண்ணங் காத்த
பெரும்புகழ் கருதிப் பிறங்கொளி மதுரம்
விரும்புமெய் புணர்ந்த வியன்றமிழ்க் கவியாற்
போற்று மென்னைப்பு றம்பெனத் தள்ளா
தேற்று வாகனத் திறைவ னாதியர்க்
கன்றளித் தருள்பே றமைக்க வேண்டுங்
குன்றலில் வளமைக் குமார புரியி
லெவ்வெவ ரெவ்வா றெண்ணினு மிகழா
தவ்வவர்க் கவ்வா றவிர்தரு மருள்கொண்
டிருமயி லன்னார்க் கிடையி
லொருமயிற் பரிமீ தொளிருர வோனே. 19

Koviloor Digital Library

வெண்பா

உரங்கொண்ட வேலானை யொண்மழு வான்வேண்டுஞ்
சிரங்கொண் டுதவுமெழிற் சேயைக் - கரங்கொண்டு
கும்பிடுவார்க் கிந்தக் குமாரபுரி போலமுற்று
நம்பிடுமூ ரில்லைசொன்னே னான். 20

கட்டளைக் கலித்துறை

நானென்ற வாணவப் பேய்வந் துறுக்க நலியுமென்னைத்
தானென்ற நன்னிலைக் கென்றமைப் பாயருட் சண்முகத்தோர்
கோனென் றறிகிலர் தம்மையுங் காத்துக் குமாரபுரி
வானென்ற வாழ்வுறச் செய்யுமெந் தாய்மயில் வாகனனே. 21

அகவல்

கனக மாலறக் கழுவி யப்பா
லனகநின் றிருவா யறைந்த வாறு
மூவுல குணர முயல்பெருங் கிணற்றி
லோவுறா நதியொன் றொளிர்தரக் காட்டி
மீனுறழ் கண்ணார் வேட்கை முதலா
யானுளத் தமைக்கு மியாவு நீத்துண்
றிருவடித் துணையிற் சேர்தரக் கொண்டு
வருபிறப் பொன்று மருவா தருள்வாய்
சத்தி வேற்கைச் சரவணன் றானே
முத்தி முதலெனு முனிவோர் குறிக்குஞ்
சமய நெறியின் றலைப்பெயர் வாய்ந்து
கமலை மனையுறழ் கவினொடு பொலிந்து
புகழ்பெருங் குமார புரியி
னிகரில்வேல் பிடித்து நின்றசே வகனே. 22

வெண்பா

சேவேறு வார்க்கினிய தேசிகனைச் செங்கமலப்
பூவேறு வானைப் புடைத்தானைப் - பாவேறுஞ்
செல்வக் குமாரபுரிச் சேந்தனைப்போற் றாப்புலவர்
சொல்வக் கணைநந் துயர். 23

கட்டளைக் கலித்துறை

நந்தமர் செங்கைத் திருமான் மருக னறைக்கடப்பங்
கொந்தலர் மாலை கொடுத்தாலென் பேதையைக் கோரமதன்

Koviloor Digital Library

வந்தனஞ் செய்குவ னிந்தைவிட் டேத்தி வணங்குமர
பொந்தமர் கிள்ளை பயிலுங் குமாரபுரி முற்றுமே. 24

அகவல்

முற்றுநின் செயலென் மொழிதரு மென்னை
யெற்றுறுந் தொழிலு மென்வாய்ச் சொற்கள்
காமுறு நலமுங் கருதிநன் குணரின்
மாமுத றடிந்து மகபதி முதலோர்
தம்மைமுன் புரந்த தனிப்புகழ் மறந்து
வெம்மையார் காட்டில் வியனுருப் பொலிபேய்க்
கணத்தொடு நடித்துக் கராமக வுமிழப்
பணத்தகு புலவன் பகர்தரு முதற்பேர்
மெய்ப்படப் பெற்றோன் விதுவரா நாளி
லுய்ப்பது பெற்றா னுஞற்றும் பூசை
கொண்டவ ளருளாற் கொடுத்த மகவெண்
விண்டயர் கின்றேன் வெறுத்தெனை விலக்கேல்
செந்தி லோகந் திருமலை முதலா
முந்தியற் கோயின் முழுமையு மழுக்கா
றெய்தத் தகும்பே ரியற்கையொன் றெய்திய
புண்ணியக் குமார புரியிற்
றிண்ணிய வேல்கொடு திகழ்கிழ வோனே. 25

வெண்பா

கிழவனுருக் கொண்டுகுறக் கிள்ளையிடஞ் சென்றாய்
மழலைமொழிச் சேயுருவா வந்தா - ளழகியபொற்
றோகைமயில் வீரா துகடீர் குமாரபுரி
வாகைவடி வேற்கையிறை வா. 26

கட்டளைக் கலித்துறை

இறையள வேனுநின் மெய்யன்பி லேனெனை யேற்றுமனக்
குறைதவிர்த் தாளவும் வல்லாய் கொல்லோதென் குமாரபுரி
நிறைதருஞ் சீரெய்த வந்தாய் தினமு நினைப்பவரைப்
பிறைமுடிக் கும்படி செய்வா யெவர்க்கும் பெரியவனே. 27

அகவல்

பெரியவர் நால்வர் பேணி யேத்த
வரிய கல்லாற் கீழமருங் குரவன்
பரவுநிற் பழிச்சும் பான்மை யேனை
விரவுமா ணவநோய் வேரற முருக்கி

Koviloor Digital Library

வடவரைப் புடைத்த வழுதி வலியுங்
கடல்குடித் தான்றோன் கல்விப் பேறுஞ்
சண்பையூர்ப் புலவன் றனது மாண்பும்
விண்புரைந் துருப்போன் விளங்குங் கவினும்
பெறக்கொடுத்த தாண்டுன் பெய்கழற் றுணைத்தா
ளுறக்கொள் வானொருசற் றுளமினி திரங்காய்
வால்வளை மூரலு மலர்ப்பெரு வாவி
சால்வளம் பொலிந்து தமநிய நகரி
புரைதருகு மாரபு ரியிற்
றரைமுழு துய்யத் தழைத்தகாங் கேயனே. 28

வெண்பா

காங்கார் நிறத்தொருத்தி காதல்விஞ்சிக் கானவர்தம்
மாங்காரங் கொன்றுறச்செற் றாண்டானைத் - தீங்காளர்
போற்றாக் குமாரபுரி யிற்பணிய வல்லா
ரேற்றாளன் சீர்பெறுவா ரே. 29

கட்டளைக் கலித்துறை

பெறுவாருக் குண்மைப் பொருளோது ஞானப் பிரான்பிறங்கு
மறுமாமுகத் தெந்தை யைங்கரத் தான்றுணை யான்றபுகழ்க்
குறுமா முனிக்கருள் கோமானென் பார்கள் கோடியவரைக்
கறுவாண்மை யோங்குங் குமாரபுரி யன்ன காரணரே. 30

வெண்பா

கொய்ம்மலர்த் தண்சோலைக் குமாரபுரிக் கோன்புனையு
மும்முணிக் கோவை மொழிவார்க்கு - மைம்மருவு
வானகத்துத் தேவர் மருவாப் பெருவாழ்வு
மீனமற்ற வீடுமெய்து மே.

முற்றிற்று

Koviloor Digital Library

4

புதுவை சித்திவிநாயகர் மும்மணிக் கோவை

Koviloor Digital Library

Koviloor Digital Library

4

புதுவை சித்திவிநாயகர் மும்மணிக் கோவை

காப்பு

வெண்பா

சீரார் தமிழ்ப்புதுவைச் சித்தி விநாயகனே
யாராதிப் பார்க்கருளு மையனே - நாரார்ந்த
மும்மணிக்கோ வைமொழிகின் றேனீ யென்முன்னோர்
செம்மணிக்கோ டென்னத் திகழ்.

நூல்

ஆசிரியர் – ஆசிரியப்பா

திருவருள் வளத்தாற் சீரிய சிவன்றா
னொருபெருங் களிறா யுமையொரு பிடியாய்ப்
புணரு நாளிற் பொன்னுல கினருந்
தணவரு மகிமைத் தவத்தினர் தாமு
மேனைமா னிடரு மின்புறற் பொருட்டோ
ரானைமா முகமு மைந்துகைம் மலரு
மிகழ்வரும் பொருளா மிணைமலர்த் தாளுந்
திகழ்தரத் தோன்றுஞ் சித்தி விநாயக
நின்புது வைக்கண் ணெடுநா ளிருந்து
மன்பு றீஇய வருந்தமிழ் தொடுத்தில
னென்னற் பொழுதோர் நிமித்தத் தியைந்தே
னென்னகத் துடனோ ரின்கன வருளினை
யந்த யுண்மை யவிர்தர வடியேன்
சிந்தனை செய்யுஞ் சிறப்பளித் தருளே. 1

வெண்பா

அருவபர வாதிகளுக் கஞ்சா தடியே
னுருவபரஞ் சொன்மாண் புதவாய் - திருவருட்சீர்ச்
சித்தி விநாயகனே தென்புதுவைச் சிந்துரமே
பத்திசெய்வா ரார்க்கும் படி. 2

Koviloor Digital Library

கட்டளைக் கலித்துறை

படிமிகப் போற்றும் புதுவா புரியிற் பரவுமன்பர்
மிடியறத் தீர்த்து விளையாடுஞ் சித்தி விநாயகனே
கொடியணி மூடிகத் தெந்தாய் நின்வாயன்று கூறுமுண்மை
யடியரெல் லாமறிந் தேத்தவின் றாடலொன் றாற்றுதியே. 3

ஆசிரியப்பா

ஆற்றுப் புனலு மவிரிள மதிவெண்
கீற்றுங் கொன்றையுங் கிளர்மணி யரவுஞ்
செஞ்சடைக் காட்டிற் சிவனெனப் புனைந்து
குஞ்சர முகத்தொடு குலவு கின்றா
யன்புளார் நால்வர்க் கவனரு ளியவா
றின்புறக் கொடுத்தெ னியற்றமிழ் புனைவா
யென்ன நம்பி யீண்டடுத் திரந்தே
னின்ன தார்வ நிகழ்ச்சியெத் தகைத்தோ
பூவின முகுபைம் பொழின் மலிபுதுவை
மேவிய சித்தி விநாயகச் சுடரே. 4

வெண்பா

சுடர்மூன்றுங் கண்ணாகத் தோற்றுமுனை விட்டோர்
கடவுளெங்கு போயடியேன் காண்பே - னிடர்தவிர்த்தாள்
செல்வப் புதுவைநகர்ச் சித்தி விநாயகனே
யெல்வைத்த தொந்தியெம்மா னே. 5

கட்டளைக் கலித்துறை

மானேருங் கண்ணியர் மோகாந் தகார வலையினிடை
தானே விழுந்து பரதவித் தேன்மெய்த் தவந்தருவாய்
பானேர்சொல் வல்லவை பாகா புதுவைப் பதிபுரக்குங்
கோனேமெய்ச் சித்தி விநாயக னேநங் குலதெய்வமே. 6

ஆசிரியப்பா

தெய்வ மாயிரஞ் சேணிடை திகழினு
மெய்வழி பாடுறு மேலவர் விரும்புந்
தொழிலிடை யூறு தொலைத்தருள் புரிவான்
கழிமதக் கலுழிக் களிற்றுமா முகத்துச்
சித்தி விநாயகத் திருப்பெயர் புனைந்து
பத்திமை யுடையார் பலர்புகழ் புதுவை

Koviloor Digital Library

நன்னகர் வாழு னாதனென் றறியா
ரென்ன மாதவ மியற்றினு மவமே. 7

வெண்பா

அவமுயன்று யல்வா றயருந் தமியேன்
றவமுயன்று வாழுநலந் தந்தாட் - சிவன்விரும்பும்
வேதபுரிச் சித்தி விநாயகனே யென்மனப்பூ
மீதமர்ந்தி லாயோ விளம்பு. 8

கட்டளைக் கலித்துறை

விளங்குந் துதிக்கைப் புனலாட்டி நீறும் விரைந்தெனது
குளந்தனிற் பூசிய தின்றுகொ லோவுண்மை குன்றிடுமோ
களங்கநெஞ் சாளரிகழாத வாறருட் காட்சி நல்காய்
வளங்குல வும்புது வைச்சித்தி யானையென் வானவனே. 9

ஆசிரியப்பா

வான நாட்டினர் வாழ்வையு மதியா
யானடி யவர்பே ரின்ப மெய்தா
திகத்தினர் சுழலு மேடணைப் பெருக்கி
னகத்துறத் தகுமோ வருணை யூரி
னுவலிய மொழிப்பய னுடங்கா தருளிக்
கவலைமுற் றொழித்துக் களிக்கடல் வருத்தாய்
விளநக ரதனில் விளம்பிய விதமென்
னுளமலர் நடுமிக் கொளிர்ந்துள தறிவா
யத்தகை நலந்தந் திடநாட் செலினு
மைத்தகைக் கயமை மலிதரு மனத்தார்
பாலிரந் திளைக்கும் பருவர லுறுமா
வேலினான் விளைத்த வினையினே களைவா
யன்னா னேங்குற வாடகச் சிலையார்
முன்னாங் கியற்றுபு முதன்மைபெற் றுயர்ந்தா
யெளவை பாடு மருந்தமிழ் புனைந்துஞ்
செவ்வையில் சிறியேன் செய்சொலும் விழைந்தாய்
சித்தி விநாயக சிறுவர்போற் றிடினும்
புத்திமிக் குறச்செயும் புதுவை வாரணமே. 10

வெண்பா

வாரணத்தைக் கொன்றாகு வாகனமாச் செய்தேறுங்
காரணத்தை யானறியக் கற்பிப்பாய் - தேரணவும்

Koviloor Digital Library

வீதி மலிபுதுவை மேயசித்தி வேழமே
யேதி லர்க்கியான் சொல்லிவெல்ல வே. 11

கட்டளைக் கலித்துறை

வெல்லங் கலந்தவெள் ளுண்டையும் பற்பல் வியன்கனியு
னல்லன்ன மாதியு னான்படைத் தேத்து நலந்தருவாய்
மல்லலஞ் சோலைப் புதுவா புரிச்சித்தி வாரணமே
யல்லன் முந்நீர் வற்றி யானந்த வாரி யதுபொங்கவே. 12

ஆசிரியப்பா

பொங்குமும் மதத்துப் புகர்முகக் குன்றே
சங்குறு செவியான் றவப்பெறும் பேறே
மலைமகள் வயிற்றில் வருமுதன் மகவே
யிலைமலி வேலா னின்னுயிர்த் துணையே
மால்பெருங் கூத்தின் மகிழ்வுறு மமுதே
சால்பொருங் குதவுந் தடங்கையைந் துடையாய்
சித்தி விநாயகத் தேசிக மணியே
யித்திருப் புதுவை யிடத்தெனைத் தொடர்ந்தாண்
டருந்தமிழ்ப் பனுவ லறைகெனப் புகன்றாய்
வருந்துறு மிடிபோய் மகிழ்வுறச் செய்வான்
கிளர்தரு கவியாற் கேட்டவர் வியப்ப
வளமைமா நகரின் மாழைவெற் பிடையோ
ருண்டைபேர்த் தடியேற் குதவென விரந்த
பண்டைநாட் கடமைப் பரிசளித் தருளே. 13

வெண்பா

அளிமுரல்வெண் டாமரையா ளன்ன புலவோர்க்
கிளிவகுப்பா ரீடழிவ தென்றோ - களிறுமலி
வேதபுரிச் சித்தி விநாயகனே வேலைசுற்றும்
பூதலமுற் றுய்யும் பொருட்டு. 14

கட்டளைக் கலித்துறை

பொருட்பே யொன்றென்னை வருத்தாம லின்று புரந்தருளி
லருட்பேறு பெற்றுய்கு வேனல்ல வோவெண்ணி லார்வமயத்
தெருட்போதத் தாருணர் சித்திவி நாயக தேசிகனே
மருட்போர் செய்யார்வளர் தென்புது வாபுரி வாழ்களிறே. 15

Koviloor Digital Library

ஆசிரியப்பா

வாழு னான்மறை வகுத்தபஃ றேவரு
மாழுமெய் யுணர்வின ரனைவரும் விரும்பு
நின்பிர ணவமல தின்றெனத் தெரிந்து
மென்பிழை தீர்ப்பார் யார்கொலென் றையுற்
றெண்ணரும் பலவா றியற்றமிழ் பாடிப்
புண்ணடைந் திற்றைப் பொழுதுன் னருளா
லற்றிரள் கடுக்கு மாகுவா கனத்தைப்
பற்றிலார் புனையும் பதத்துணை மலரை
வல்லவைச் சத்தி மருவெழிற் கவானைச்
சொல்லரும் பெருமைத் துதிக்கையைக் கனியும்
வல்லதோர் வேதம் வரைதரு கோடுங்
கொல்லலுங் காத்தலுங் குலவிரு தகைய
கயிறுந் தோட்டியுங் கவின்றநாற் றோளை
யயில்வன வன்றி யழலுடற் றகுவன்
றன்னையுஞ் சேர்த்தலிற் றாழ்வில்பே ரகட்டை
யன்னைதன் முலைபோன் றவிர்தரு களிற்று
மாமுகந் தன்னை மணிமுடி முதற்பகர்
தோமுறா மணிப்பணித் தொகுதியைப் பாந்தட்
கச்சை கொன்றை கரந்தை யாதியை
யிச்சை யிடைக்கொண் டெண்ணுறப் பெற்றே
னினிதென திசையு மிழிவுனின் றனவே
பனிவரைக் குயிலொடு பரசுடைப் பகவனு
மாவியிற் பெரிதென் றன்புறப் புதுவை
மேவிய சித்தி வினாயகத் தேவே. 16

வெண்பா

தேவர் குலம்வா ழுத்திறலார் பெருந்தகுவ
ரியாவர்களுந் தாழவென வெண்ணியே - சேவணியுங்
கேதனத்தார் நல்கக் கிளர்சித்தி யானைவைகூ
ரேதமில்சீர்த் தென்புதுவை யே. 17

கட்டளைக் கலித்துறை

ஏவற் றொழிற்புரி கின்றத னாற்சில ரீட்டுபெரும்
பாவத் தனமும் விழைந்தலை வேற்கருள் பாலிப்பையோ
நாவற்பொன் பூத்த துவர்போலுஞ் சித்திவி நாயகனே
பூவத் திரம்பொரு சீர்ப்புது வாபுரிப் போதகனே. 18

Koviloor Digital Library

ஆசிரியப்பா

போதகத் திருந்து புனித நான்மறை
யோத வல்லா னோரெண் கரமுஞ்
சீத நாண்மலர்ச் சிலீமுக மேந்தி
மாத ரார்நடு வருவான் வில்லு
மகமதிற் சற்று மருளில்பா தகரைப்
பகடிவர்ந் தடுவான் பற்றிய தண்டுந்
தமியனேன் பனுவற் சாற்றினர் தமையு
மிமிழ்திரப் பாரி லிடர்செயா வண்ணஞ்
செய்யற் பொருட்டுன் றிருவருள் விழைந்தே
னையமுந் துயரு மளவறப் பெருக்கினை
யோருமுப் புடைக்கா யுன்றிரு முன்னர்
தருதுமென் றொப்பித் தாழ்குநர் சிந்தை
வேண்டுவ தாமும் விரைந்தரு ளிடுநீ
யீண்டுநான் றொடுக்கு மியற்றொடை நிமித்த
மொருசிறி திரங்கா துறத்தகுங் கொல்லோ
கருதுமா றின்னே கடைக்கணித் தருள்வாய்
மதுரை போலும் வான்புக ழிந்தப்
புதுவை யெய்துறப் புரிவா னாண்கு
நத்திய நாம நயந்துவீற் றிருக்குஞ்
சித்தி விநாயகச் செந்துவர்க் குன்றே. 19

வெண்பா

குன்றிலொரு கதைமுன் கோட்டியகைத் தாட்டிகத்தால்
வென்றிமலி சித்தி விநாயகன்றா - னின்றிப்
புதுவையினிற் போற்றெனக்குப் பூரியர்பாற் போகா
ததுபுரிந்தாற் போதுமம்மம் மா. 20

கட்டளைக் கலித்துறை

மானீன்ற பெண்முன் மறுகிய சேந்தன் மகிழவன்று
வேனீரங் கவுட்களி றாச்சென்ற சித்தி விநாயகனார்
தேனீந்தபூம் பொழில்சூழ்புது வாபுரிச்செம் பொன்வெஃகி
நானீண் டிறைஞ்சற் கிரங்கார்கொ லோவெள்ளை நாமகளே. 21

ஆசிரியப்பா

நாமகட் போல்வார் நன்குணர் தரும்புகழ்க்
காமர்வான் களிற்றைக் கற்பகத் தொகைநேர்

Koviloor Digital Library

கையுடைத் தாய கடவுண்மா மணியைப்
பொய்யுளார் மனத்துட் புகுதாப் பொருப்பை
வேண்டுநர் பலர்க்கும் விக்கின மகற்றி
மாண்டுபின் பிறவா வரமருள் வானை
யாவரு முதற்போற் றிசைத்தினி திறைஞ்சுந்
தேவ தேவனைச் சித்தி விநாயகப்
பெயர்புனை யொருவனைப் பிரச நாண்மலர்ச்
சயமகள கலாத் தனித்திருப் புதுவையிற்
கைகுவித் தியற்சொற் கவித்தொடை சாத்தச்
செய்குண மமைதரு சீரு முடையே
னிரட்டைப் புலவோ ரின்புறச் செம்பொன்
றரத்தகு துதிக்கைத் தன்மைகண் டுவக்கும்
பேறடை வேன்கொ லின்னமும் பிறர்பாற்
சேறல்வேட் டொல்கித் தியங்குவன் கொல்லிதன்
றெளிவுளா ராகிச் சேணகத் திரதக்
குளிகை யிட்டுக் குலாவுநர் பலரே. 22

வெண்பா

பலாவும்பனை யும்வெட்டுப் பட்டவைமுன் போலக்
குலாவுநலஞ் செய்ததனைக் கூறி - னிலாவுமணித்
துத்தியர வும்புனலுந் தோய்ந்தசடைத் தாம்புதுவைச்
சித்திமத வேழச் செயல். 23

கட்டளைக் கலித்துறை

செயங்கொண்ட வேன்மன்னர் தாமும் புகழ்ந்து தினம்வணங்கும்
வியங்கொண் டவாக்கௌ வையார்க் கீந்தசித்தி விநாயகனைப்
பயங்கொண்ட நெஞ்சுடை யேன்வாழ்த்தற் கியாதுபய னெய்துமோ
நயங்கொண்ட வாய்மயிற் கூவும் புதுவை நகரத்திலே. 24

ஆசிரியப்பா

நகமகள் பயந்த நால்வாய் முக்கட்
புகர்முகக் களிற்றைப் புதுவையின் மேய
சித்தி விநாயகத் திருவருட் கடலைப்
பத்திமிக் குறுமோர் பார்ப்பனச் சேய்முன்
போற்றுபு தெரித்த புதுமை யாவுந்
தோற்று பாருலகிற் சொல்வார் சொல்லினு
மின்னு மகவா யியலுணர்த்து நன்கை
துன்னுறு பிரம்பாற் றுயருறு புலவோர்

Koviloor Digital Library

நம்பார் நம்பி நாத்தழும் பேறச்
செம்பா கக்கவி கொடுமிகச் செப்பார்
முண்மலி வேலி முயலடு வளைதடி
கொண்மறக் குணத்துக் குறுவேந் தாதியர்க்
காக்கு மாயன் காமன் காங்கெய
னாக்கு மென்னு மவைமிகப் பாடி
வாயில் காப்ப வரெதிர் மறுகி
நாயிற் கடையாய் நலமழி வாரே. 25

வெண்பா

அழிவில்பர மானந்த மன்பர்பெறச் செய்வான்
பொழிமதநீர் மூன்றார் பொருப்பே - யெழிலிவளஞ்
சேரும் புதுவைநகர்ச் சித்தி விநாயகனே
பாருனது கண்ணாற் பரிந்து. 26

கட்டளைக் கலித்துறை

பரிக்குங் கரிக்குமுன் சென்றெளவை வெள்ளிப் பருப்பதத்திற்
சரிக்கும் படிசெய்நின் கைக்கே யடைக்கலந் தாரணியுஞ்
சிரிக்கும் பழவினைப் புன்பயன் றீர்த்தருட் சீர்ப்புதுவா
புரிக்குஞ் சரத்தலைச் சித்தி விநாயகப் புண்ணியனே. 27

ஆசிரியப்பா

புண்பொலி நெஞ்சப் புழுக்கந் தவிர்ந்தருட்
கண்பெறு மாறு கருணை புரிவாய்
நின்றுணைக் குகன்சொன் னெறிவழி போஒய்
வன்றுய ருழந்த மறுக்கமுற் றறிவாய்
செங்குன் றூர்முதற் சிஃறலத் தென்பாற்
கங்கு லேய்க்குங் களத்தான் கழறலு
மயில்பொரு சாயன் மலைமக ளன்பிற்
பயிலிய வாய பற்பல மொழியுங்
கிளர்வளத் தல்லிக் கேணி யாதியிற்
றுளவ மாயவன் சொல்பல சொல்லும்
பயன்றா ராமையிற் பரதவிக் கின்றே
னயர்ந்தேங் குறுமா றவைபொரு மாற்றம்
பகரே லென்னுட் பலவிசை வந்து
மகநோ வுறப்பிழை யறைந்திலை யாதலி

Koviloor Digital Library

னீயோர் மாற்ற நிகழ்த்திடி னிசமாந்
தீயோர் வெருளுந் திறலொடு திகழ்வே
னென்ன நம்புறு மெனைப்புறத் திகழேல்
பன்னகக் கோமான் பருவர லொழித்தாய்
நாரதன் வேண்டலி னற்புகழ்ச் சனக
னூரகத் தேகி யொருவா றாடினை
கமல னாதிய காய்சினத் தகுவர்
தமரொடு மாயச் சமர்மிகப் புரிந்தனை
நன்றொடு தீதினு நடுவிருந் தருளினை
பொன்றொகு பணியும் புயங்கமும் பூண்டனை
தென்புது வைக்கட் சித்திவி நாயக
னென்புகழ்ப் பெயர்கொண் டிலங்கு மெம்மானே. 28

வெண்பா

எம்மானே வேதபுரி யீசன் றருமகனே
மெய்ம்மாறாச் சித்தி விநாயகனே - சும்மா
விருக்குநிலை யின்றுதவே லீனரஞ்சச் செய்வான்
றிருக்கடைக்கண் ணாலருளெண் சித்து. 29

கட்டளைக் கலித்துறை

சித்திவி நாயகனேற்றமுள் ளான்மகிழ் சீர்செய்பிர
சித்திவி நாயக னேமியுய் வான்றொழு தேனெனுள்வ
சித்திவி நாயகனே நானெள்ளேல் வளஞ்சேர் புதுவைச்
சித்திவி நாயகனே தருவாய் நின்றிரு வருளே. 30

நூற்பயன்

வெண்பா

புத்தியுளார் வாழும் புதுவா புரியில்வளர்
சித்திவி நாயகன்பொற் சேவடிக்காம் - பத்திமலி
மும்மணிக் கோவை மொழிவா ரெவரெனினு
மம்மணிக்கோ வையனொப்பா வார்.

முற்றிற்று

Koviloor Digital Library

Koviloor Digital Library

5

திருவரங்க மும்மணிக் கோவை

Koviloor Digital Library

Koviloor Digital Library

5

திருவரங்க மும்மணிக் கோவை

ஆசிரியப்பா

யானைக் கோவொன் றின்னுயிர் வேட்டுக்
கானைத் தொனியாற் கலக்கலு மதற்குச்
சுருதி யீற்றின றொல்பொரு ளமையக்
கருதி யாண்ட கதைமுதற் சிலவே
மாறி மாறி வண்டமிழ்க் கவியாற்
கூறிக் கூறிக் குளிர்பொழி லரங்கத்
தம்மான் றிருவரு ளாசித் துள்ளேன்
பொய்ம்மால் விளைக்கும் புணர்முலை மகளி
ராசைப் பயனா மகப்பொருள் விரிவு
மோசைக் கடல்சூ ழுலகி லுள்ள
புறப்பொருட் பெருக்கும் பொலிவுறப் புகழ்ந்து
சிறப்ப வென்று திண்டிறல் வேந்தர்
முடித்தலை குலுங்க மோகித் தலையேன்
படித்தகம் வளர்க்கும் பாவலர் மகிழார்
தாய்முலைப் பாலுந் தணந்தருந் தவத்தாற்
பேய்முலைப் பால்கொள் பிரானடி சேர்ந்த
காரி மாறன் கருணைச்
சீரி யோர்கள் செவிமடுப் பாரே. 1

வெண்பா

பாரளந்து வானளந்த பாதாம் புயத்தொருவன்
சீரரங்கக் கோயிற் றிருநெடுமால் - வாரமென்மேல்
வைத்த தறிந்து மறலியூர்த் தூதர்மன்
மெய்த்த தறிந்துகொண்டேன் யான். 2

கட்டளைக் கலித்துறை

யான்சொன்ன பாடல் பலவா
மவற்றிடை யாதுமத்திக்
கோன்சொன்ன பேரொன்றை யொவ்வரத்தோ
நிரைக்கோல் வளைக்கை

Koviloor Digital Library

மான்சொன்ன சொற்கொண் டொருமாய
மான்பின் மகிழ்ந்து சென்றாய்
வான்சொன்ன கீர்த்தி யரங்காவென்
மேற்றயை வைத்தருளே. 3

ஆசிரியப்பா

வைத்தமு ளெயிற்று மாசுணக் கொடியோன்
பொய்த்த வஞ்சகப் பொறாமையிற் பிழைத்துக்
குந்தி மக்கள் குவலயம் புரப்பத்
தந்திரம் பயின்ற தாமோ தரனைக்
காவிரி யாற்றிடைக் கவின்றரு கனகக்
கோவி னாப்பட குறுகிக் கண்டு
போற்றிசைக் கின்ற புனிதர்க் கெல்லா
நாற்றிசை யோரு நவில்பெரும் புகழு
மான்ற சித்தியு மமரர்தம் வாழ்வைக்
கான்ற சோற்றிற் காண்டரு களிப்பும்
பிறப்பிறப் பின்றிய பேறா
மறப்பறு ஞானமும் வருமென் றுணிவே. 4

துணிவேண்டும் பொன்வேண்டுஞ் சோறுநெய்பால் வேண்டும்
பணிவேண்டு மென்றுபுல்லர்ப் பாடேன் - றிணிவேண்டும்
வீரர் பலர்போற்றும் வியனரங்கத் தம்மானின்
சீரணங்கு பார்த்தருளச் செய். 5

கட்டளைக் கலித்துறை

செய்யுந் தனமும் மடவாரு
மக்களுஞ் சேரப்பெற்றோர்
வையுந் துறவறத் துற்றேற்கு
மேன்ம்மயக் களித்தாய்
பையுந்து பாம்பணைத் தென்னரங்கத்திற்
படுத்தி ருந்தே
யுய்யும்பல் கோடி யுயிர்க்கூ
ணளிக்கு முரத்தண்ணலே. 6

ஆசிரியப்பா

அண்ண லந்தகையோ ரனைவரும் வழுத்தும்
பண்ணவன் செங்கட் பசுங்கார் போல்வான்
வாழ்வன வாய மாளிகைப் பெருக்கு
ளேழ்வகைப் புவியு மேத்துசீர்த் தலைமை

Koviloor Digital Library

வாய்ந்த பைம்பொன் மணிமதி ளரங்கந்
தோய்ந்த மாண்சில சொலத்தகு புலவீ
ரும்மிடை யானு மொருவ னாகி
விம்மித மெய்தி வீடும் பெறினே
யவன்புக ழனைத்துமெய் யாகுஞ்
சிவன்பிர மாமுதற் றேவர்சான் றிதற்கே. 7

வெண்பா

இதம்பகரு நல்லுணர்வு மில்லாத வீணர்
பதம்பணிந்தும் பொன்றேடும் பண்போர் - மதம்பொலியு
மிந்நிலத்திந் நாளெனைநீ யேன்படைத்து விட்டாயோ
பொன்னியரங் கேசா புகல். 8.

கட்டளைக் கலித்துறை

புகலரு மந்திர மட்டாக்
கரமென்றும் போற்றுகில்லேன்
சகலரும் பேசிடு மெய்ப்புகழ்
வேட்டுந் தவித்துளன்காண்
பகலவன் றன்னைப் படையான்
மறைத்துமுன் பாண்டவர்த
மிகலறுத் தாளரங் கேசாசற்
றுன்னெஞ் சிரங்கினன்றே. 9

ஆசிரியப்பா

இரவினுங் கரியா னிரவியிற் செய்ய
வரனையோர் பாகத் தடக்கிய வண்ண
னான்முகத் தொருசேய் நளின வுந்தி
மேன்முளைத் தியாவும் விதிக்கக் கண்டோ
னெண்சீர்ச் செய்யா ளிலங்கெழி லுரத்தான்
றண்சீர் மலராற் சரந்தொடு தனையற்
பெற்றா னென்னப் பேசலொன் றொழியக்
கற்றார் தம்மைக் கனவினும் விழையா
னென்றூ ழொல்கு மிகற்பே ராழி
நன்றூர் மதிய நாணுறு சங்க
மெண்பொலி கதைகூ ரேதி யிறாஅ
நாண்படு சாரங்க நகுதோ ணாலினன்
காசைப் பூந்துணர் கடுத்த காட்சி
யாசைப் பெருக்கி லகத்திடை யளித்து

Koviloor Digital Library

நெடுநாட் டாழ்த்து நிறைபுனற் பொன்னி
நடுவாழ் கோயி னலஞ்சொல விசைத்தா
னவன்மக னாவக மகலாத்
தவள மாதித் தகையறி வாளே. 10

வெண்பா

வாளுடைய திண்கை மறவீரர் வாழ்த்து மவைவேல்
வேளுறழ்சீர் வேட்டேன் வெகுளாதே - நாளுந்
திருக்கா விரிநடுவாஞ் சீரங்கந் தன்னி
லிருக்காதி யேத்தநின்றோ னே. 11

கட்டளைக் கலித்துறை

நின்றாய் மறைச்சென்னி மேனடித்
தாயொரு நெட்டரவிற்
சென்றாய் மெய்யன்பர் மனந்தோறுந்
தானவர் சீரழித்தா
யென்றா யிருவர்க் கிடையே
யரங்கத் தினிற்கிடந்தா
யொன்றாய் கொலோவென் மனத்தேமெஞ்
ஞான முதித்திடவே. 12

ஆசிரியப்பா

உதிரம் பருகி யொண்டிறற் கனகன்
சதிரழித் தன்னோன் றனையற் காத்த
நார சிங்க னாவெதிர நணுகிற்
கோரமஞ் சிக்குலை குலைந்த யர்வே
னாதலிற் றொன்னா ளாயர் பாடி
மாத ராரு மகிழ்வுறு கோலங்
காட்டி யாண்டருளிக் கால கேயரை
வீட்டினற் குரைத்த மெய்ந்நிலை தெரித்தி
யன்றெனிற் பழிதீ ரயோத்தி மூதூர்
சென்றெலா நலமுஞ் சீர்பெறு நிமித்த
மிருபது வாகுடை யிகலவற் செற்ற
சொருபங் காட்டித் தோமறப் புரத்தி
யாசறு சீர்த்திரு வரங்க
வாச நீங்கா மரகத மலையே. 13

வெண்பா

மரகத வெற்பாம ரங்கமால்வ யின்தேயக்
குரகதத்தி லேறுமணிக் கொண்டல் - கரகக்

Koviloor Digital Library

கரத்தானை முன்பயந்த காகுத்தன் பொற்றாள்
சிரத்தாரக் கொள்ளல்பெருஞ் சீர். 14

கட்டளைக் கலித்துறை

சீரங்கக் கோயிற் றிருநெடு
மால்கழைச் செஞ்சிலைக்கை
மாரன் றனைப்பயந் தாளக
லாத மருமத்தினான்
வாரம் பெருத்தவன் போற்சில
மாற்றம் வழங்கி யப்பா
லோரஞ்செய் வானையொத் தானென்செய்
வேன்கலை யொண்டொடியே. 15

ஆசிரியப்பா

ஒண்டொடித் தொனிக்கை யுமையவள் கொழுநன்
மண்டையோட் டிரக்கும் வறுமையும் வளைபற்
செடித்தலைப் பல்பேய்த் திரளொடீ மத்தி
னடிக்கச் செயுநடு நாடிக் குணமு
மொருவி வெள்ளி யொள்வரைத் தலைபோய்
மருவி வாழ வைத்தனை யந்நா
ளிந்நா ளென்பா லியற்கவி பலநின்
செந்நா வாரச் செப்பென விசைத்தே
கொண்டுமெ னுள்ளங் குலைவுற வுறுக்கி
மண்டு தீக்கலி வாதனை தீர்க்கிலை
யனந்தை யூரி லல்லிக் கேணியிற்
றனந்தரு குதுமெனச் சாற்றியு மெழுத்துத்
தந்தும் பிழைத்தனை சரதம்நன் கறியு
மிந்து நாமத் தெழிற்பெரும் பொய்கை
மருவுதென் னரங்கமா சுணத்திற்
கருமுகி லென்னக் கவின்றரு வானே. 16

வெண்பா

வானவர்தாங் கன்ம மகத்தூ டிடுமவியா
மூனருந்தக் கண்டு முதவினா - யானதனை
யெத்தா ரணிவரினு மெள்ளளவு முள்ளேன்காண்
சத்தாதி யாமாங்கே சா. 17

கட்டளைக் கலித்துறை

ஏசாரும் பொய்ப்பொருள் வாஞ்சையுற்
றேனை யிருங்கயமை

Koviloor Digital Library

மாசார் குபேரனுமே மாற்றிப்
பாடல்கள் வாங்கிக்கொண்டான்
றேசார்செஞ் சக்கர மேந்திய
நீயென்ன செய்குதியோ
கூசா தரங்கத்தி லேநெடு
நாட்டுயில் கொண்டவனே. 18

ஆசிரியப்பா

கொண்ட லேழுங் குத்திரத் திகலாம்
வெண்டகை வயிர வேலுடை விறல்வேந்
தாணை யாலிகன் றறல்பொழிந் திடுநாண
மாணறா தெழுமொரு மலைக்குடை பிடித்துங்
கோகுலம் புரந்தாய் கும்பிட் டேத்துமெ
னாகுலந் தீர்த்தற் கறியாய் போலு
மிந்நா ணந்தமர்க் கிகலவ ராயத்தம்
வெந்நா வின்புற வள்ளுர மிசைவார்
தம்பா னின்னருள் சார்ந்த தென்ன
வம்பா மதிக்கு மாறுசெய் கின்றா
யங்ஙன மாயி னருமறை நான்கு
மெங்ஙன மெய்யா மிவைபிழைப் படினும்
பந்தமும் முத்திப் பதமுமெய்ப் படுமோ
செந்தமிழ் வேட்குஞ் செயலொன் றுன்பாற்
குன்றா தோங்குங் குறிப்பறிந் துள்ளே
னன்றா மாற்ற நவிலற பொருட்டுன்
மாமலர் புரையும் வாய்திறந் தருள்வாய்
பாமலர்ப் புலவர் பல்லோ ரேத்தக்
காவிரி யாற்றிடைக் கவினுங்
கோவிலின் னாளுங் குலவு கொற்றவனே. 19

வெண்பா

கொற்றவருந் தேவர் குழுவுமிகக் கொண்டாடப்
பற்றடற்பே ராழியுடைப் பண்ணவா - முற்றடுத்தாண்
டித்தனைநாட் சென்றுனெழி லரங்கம் போற்றவிட்டாய்
பத்தருடன் சேரவைத்துப் பார். 20

கட்டளைக் கலித்துறை

பார்கொண்ட நாவலர் பல்லோ ருளார்கள்
பழுதில் பொன்னி

Koviloor Digital Library

நீர்கொண்ட பாங்கர்த் திருவரங் கேசனை
நெஞ்சி லுன்னிச்
சீர்கொண்ட பாடல் பலபாடி யிந்திரன்
சிட்டி செய்வோன்
கார்கொண்ட கண்டத் தினான்முத லோர்பதங்
காத லித்தே. 21

ஆசிரியப்பா

காதன் மங்கையர் கருத்துவப் பதுவே
மாதவப் பயனா மெனமுயன் மடமைப்
புல்லர் தம்மிசை புனிதத் தமிழா
னல்ல பாட னவில்பல நாவலர்
சீய முகப்புச் சிவிகையுங் கவிகையு
மேயபற் பணியோ டியாவுங் கருதி
யொல்கா வண்ண முன்றிருப் பெயரே
பல்கா லோதிப் பழிச்சு கின்றே
னிந்திரன் முதலோ ரெண்ணத் தக்க
மந்திர சித்தி வழங்கியாண் டருள்வாய்
தோலா வளமைத் தொல்சோ ணாட்டுட்
சேலார் தண்புனற் றிருக்கா விரியிடை
பண்மறை யாதிநூல் பரவுங்
கண்மலர் குவியாக் கனதுயி லோனே. 22

வெண்பா

துயின்மறந்து சோர்வுமற்றுத் துய்ப்பனவுங் கைத்துப்
பயிலுமிசைத் தென்னரங்கம் பாடி - மயிலிறகுச்
சென்னி யுடையானே தேசிகனென் றெப்பொழுது
முன்னிடுவார்க் குண்டா முரம். 23

கட்டளைக் கலித்துறை

உரத்தே திருமக ளோவா
திருந்துமென் னுள்ளத்திச்சை
தரத்தா மதஞ்செய லாகுங்
கொலோபெருஞ் சக்கரத்திண்
கரத்தாதி நாயக னேசைய
மீதொர் கலச நல்கும்
வரத்தாற் றிடைகிடந் தாய்தமிழ்
வேட்டென்னை வாழ்வித்திடே. 24

Koviloor Digital Library

ஆசிரியப்பா

வித்தா யதனுண் மிளிர்சிறு முளையாய்ப்
பைத்தார்த் தசைதரு பாதய மாகித்
தளிரிலை மலர்காய் பிறவுந் தானா
மிளிர்தலி னீண்ட விழுப்பொரு ளொன்றுள
தெழிலிச் சூல்புரை யெழின்மணி வண்ணத்
தழிவில் லாற்ற லரங்கக் கோயிலி
லதனை யோர்ந்தோர்ந் தட்டாக் கரஞ்சொற்
றுதக வான்கலை யுத்தமி யருளுஞ்
செந்திரு மடந்தை சீர்விழி நோக்கும்
வந்தியை தரப்பெறு மாக்கள் பலரலர்
தங்குல குருவுந் தன்பெயர் செப்புங்
கங்கு னீதிக் கனகனைக் கடிவா
னவன்மனை வயிற்றன் றவதரித் தானுந்
தவலரு மறைநூற் றமிழ்செயற் பொருட்டான்
மூன்றா முகத்தின் முகுளக் குவளை
வான்றார் வேந்தின் மனைவயிற் றெய்தி
மற்றோ ருகத்தின் மாநிலத் துதித்துக்
கற்றோர் விழியே கடுக்கு மாறனு
மனையசிற் சிலர்களே யாவா
ரினையவா றுணர்வா ரெமதுற வினரே. 25

வெண்பா

துறவினரு மில்லறத்திற் றோய்வாரு மென்னை
யுறவின்னென் றுன்னவைத்தா யோகோ - மறவியற்ற
ஞானமொடு சித்திகளு நல்காதி ருக்கைநன்றோ
வீனமில்சீர்ப் பொன்னரங்க னே. 26

கட்டளைக் கலித்துறை

அரங்கன்ன றிப்பொரு ளொன்றுமின்
றென்ன வறிந்தடங்காக்
குரங்கறி வாண்மை யுறுநாளி
லெண்பொறிக் கூட்டுண்முதல்
வரங்களெல் லாந்தரு மென்போர்தம்
போரினும் வாயலுத்துச்
சிரங்களிற் றொண்டர்தந் தாட்டுக
ளின்றித் திரிந்தனமே. 27

Koviloor Digital Library

ஆசிரியப்பா

திரிமூர்த் திகளுட் சீரியன் றிண்டோ
ளரியே யென்னு மறிவுறு நமர்காள்
பறிதலைச் சமணப் பதிதர் பல்லோ
ருறிவிடுத் திறங்கி யுலகமுற் றுய்வான்
கற்கா ணத்திற் காரெளொத் தரைபடச்
சொற்கா ரென்னச் சொரிதரு குரவன்
விதிவழி பழகும் வீர மில்லே
னதிர்தொனிக் கடலு மசலத் திரளுங்
காலும் வெளியுங் கனல்புனன் மண்ணும்
போலும் பிறவும் புருடோத் தமனே
யென்னச் சொல்லி யெழிற்புளி யிடைவாழ்
சின்னக் குழந்தைத் திருவுருப் பெருமான்
சொன்மறை கருதித் தூணினுந் துரும்பினு
மொன்மக னொருவ னுளனெனப் புகல்வர்
ரெம்மதத் தினரே யென்னினு மவர்சொற்
சம்மத மென்னத் தலையசைக் கின்றேன்
கோறலும் புலையுங் கொடியவென் றிகழ்வே
னாறணை யரங்கத் தாவன்மிக் குடையே
னென்னைப் பிறனென விகழா
தன்னைத் திரள்போன் றாதரிப் பீரே. 28

வெண்பா

ஆதரிக்கக் குன்றெடுத்த வங்கைமல ராயனுக்கு
மூதரங்கக் கோயின் முகுந்தனுக்கும் - பேத
நினைத்துந் தளரேலென் னெஞ்சே நிகழ்வ
வனைத்து மவன்றானென் றறி. 29

கட்டளைக் கலித்துறை

அறிவோ மெனத்துணி வார்த
முணர்வி லமைவரியான்
குறிபோலுங் கோலமுங் கொள்வான்றென்
சீரங்கக் கோயி லம்மான்
பொறிநாணச் செஞ்சிறைப் புண்ணாணத்
தான்றனி போய்ப்பு ரந்தா
னெறிநீர்த் தடாகத்தின் மூலமென்
றோலிட்ட யானை யையே. 30

முற்றிற்று

Koviloor Digital Library

திருச்செந்தூர் அகப்பொருட் கோவை

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

அங்காரகன் - 47
அங்கிக்கணை - 58
அங்கைவை வேலுடை - 36
அங்கைவை வேற்குகன் - 39
அசையாப் பெரும் - 71
அஞ்சனந் தீட்டிய - 65
அஞ்சியலக் கரத்தார் - 101
அடலவு ணேசனை - 87
அடையலர் - 89
அண்டருக் காகு - 61
அந்தரத் தோரு - 82
அந்தரர் போற்று - 57
அமரர்க்கதிப - 91
அரவக்குலம் - 92
அருகன் சமயமற - 43
அழலைப் புனைந்த - 63
அன்பழியார் - 70
அன்பே வடிவ - 97
அன்போர் - 87
அன்போர் மிகு - 62
அனவரதந் தன்னை - 61
அன்னந் துயிலும் - 73
அன்னை யொத்தும் - 71
அன்னைச் சிவையை - 83
அன்னையிலெண் - 89
ஆசு வல்லார் - 90
ஆசுமுற் பாடுங்கவி - 55
ஆடானை மஞ்ஞை - 72
ஆணாதி யாமொரு - 37
ஆணைக்குக் கட்டு - 64
ஆதியு மந்தமு - 67
ஆயம்புகழ்த் - 57
ஆயுந் தமிழ்த்திரு - 44
ஆரியர் போற்றிசை - 48
ஆரேய்ந்த சென்னி - 40
ஆழாழி சூழ் - 45
ஆழாழித் - 68
ஆழியிற் றெண்டி - 80
ஆறா னனத்தவன - 36
ஆறு முகத்தொரு - 90
ஆனேறு கைத்தவன் - 93
இத்தனை தூரந் - 98
இரவினும் வாட்ட - 59
இலக்கண சாரம் - 95
இறலருஞ் சீர்திகழ் - 95
இன்பக் கடலின்றுறை - 33
ஈராறு நான்கும் - 73
உம்மை யல்லான் - 75
உன்றன் பிராட்டி - 88
உன்றனக் கென்றனை - 77
ஊன்செய்த வேலுடை - 64
ஊனை வழிய - 80
எக்கியத்திற் - 86
எங்கள் பிராட்டி - 100

Koviloor Digital Library

எத்திரத் தோரும் - 93
எயிறுக வெய்யவன் - 95
என்றலைவிக் கெதிரா - 100
என்றுகண் டாங்கு - 45
என்னது கொங்கை - 56
ஏக்கலையுந் - 95
ஏனற் புனத்து - 77
ஐம்புலன் றீர்ந்த - 45
ஒருவாய் கொண்டு - 87
ஒள்ளிய வேற்படை - 49
ககத்துயர் தோகை - 68
கச்சைத் திருவரை - 97
கஞ்சமுங் காவியும் - 59
கஞ்சமுங் காவியும் - 67
கஞ்சமொன் - 69
கஞ்சனைக் குட்டியுயிர் - 43
கடமா வுலவுந் - 60
கடல்கொதிக் கின்ற - 84
கடவுளர்க் கோரரசர் - 55
கணஞ்செய்த - 52
கண்டோர் கலி - 86
கண்ணி மைக்கின்றன - 34
கதிர்வே லணிந்துயர் - 44
கந்தா வென - 36
கயமூர் வலாரி - 37
கயிலாய வாணர் - 57
கயிலைக் கடவுள் - 38
கரும்பாலை வாசங் - 60
கலியனஞ் - 68
கலியினு மாடல் - 50
களவிடை வள்ளியை - 44
கற்கும் புலவர் - 39
கற்பனை தீர்ந்த - 54
கற்றுணர்ந்தோர் - 93
கற்றையஞ் - 91
கற்றோர் பரவு - 91
கனக்கும் புகழுடை - 80
கனங்கண்ட சந்தன - 50
கன்மீது லாவுங்கழற் - 53
கன்மேற்புரியு - 92
கன்மோக மங்கை - 99
கன்றைக் கனிக்கெறிந்தான் - 50
கன்னலம் பாகுறழ் - 100
கன்னல்வில் - 61
கன்னல்வில் - 93
கன்னன் பொருவு - 71
காங்கை யனைய - 72
காதார் விழி - 73
காம தகனம் - 82
காமனைச் சுட்ட - 66
காமனைச் செங்கனற் - 37
காயிரும் புங்க - 96
காயுங் கதிர்நிகர் - 65
காயுங் கதிரயிற் - 100
கார்மேலு லாம் - 62
காராழித் தெண்டிரை - 92
காரொன்று - 78
காலபயந் தவிர்த்தோர் - 99
காவாரும் பொன்னகர் - 98
காவுல கத்தினர் - 94

Koviloor Digital Library

காவை நற்றேனுவை - 47
காழரைப் பாதபஞ் - 41
காழியிற் பாவலற் - 54
கானகத்தோர் - 79
கானிற் குறத்தி - 75
கிளைக்கும் - 56
கீரன் சொலென்ன - 73
குகப்பெருமான் - 61
கும்மாளி - 82
குவிந்த கையார்க்கருள் - 49
குன்றங்க டோறு - 67
குன்றந் தொறு - 93
குன்றினந் தோறு - 57
குன்றுக டோறு - 83
குன்றைத் துளைத்து - 74
குன்றோடுறழ் - 88
குன்றோடுறழ்வன - 70
கூடையுங் கையிற் - 60
கூதாள மாலை - 55
கூம்பிய கையினர் - 57
கூரயிற் கையுடை - 43
கூராரும் - 34
கூற்றுவன் - 76
கேடற்ற தென் - 97
கொக்கன்று - 97
கொண்டாடு மிந்த - 61
கொம்பானை - 72
கொம்புறழ் கொங்கை - 34
கொல்லாமற் - 98
கொல்லுந் தொழிலுடை - 42
கொள்ளை வண்டு - 83
கொன்றை - 99
கொன்றைச் சடை - 38
கோகனக - 76
கோங்கா ரிளமுலை - 75
கோடாத செந்தமிழ் - 79
கோலாகலத் - 42
கோலாகலமயில் - 101
கோழி யெழுது - 55
கோனுங் குரவனு - 48
சங்கர தேசிக - 37
சங்கரற்குங் - 70
சஞ்சலந் தீர்க்க - 55
சட்டியிற் சூரனை - 75
சந்தன மால்வரை - 63
சந்தனக் குன்றொளிர் - 79
சந்தாசலந் திகழ் - 94
சயிலங்க டோறு - 91
சற்குரு வாய்வருஞ் - 35
சித்தர் குழாம் - 36
சிவகுரு வாகி - 69
சிறப்பாயிரம் - 86
சீதையின் - 74
சீய வடிவங் கொள்வான் - 79
சீர்த்தியின் - 76
சீர்பூத்த செந்திற் - 33
சீர்வந்த செந்தி - 58
சீரிய மேலவர் - 83

Koviloor Digital Library

சீரேய்ந்த - 76
சீரேறுஞ் செந்தி னகராளும் - 40
சீலத்த வத்தர் - 76
சுதந்தர யூகப் புலவோர் - 33
சூர்மேனி சாய்த்த - 59
சூரனந் நாளுனை - 72
செக்கச் சிவந்த - 36
செங்கதிர் வேற்படை - 39
செங்குருதி - 78
செங்கையில் - 81
செஞ்சிகி யூரு - 49
செஞ்சிகி யூருந் - 35
செப்போடுறழு - 79
செல்லார்க்குஞ் சோலை - 64
செவ்வானை - 75
சென்முழங்கும் - 80
சேணள வோங்கிய - 64
சேய்துவர்க் குன்றன்ன - 42
சேயெனச் சற்குரு - 39
சேல்கொண்ட - 56
சேலாரும் வாவி - 69
ஞாலத்தில் - 82
ஞான வித்தாகிய - 49
தங்கமும் வெள்ளியு - 62
தட்டூ டுருவி - 77
தடையற்ற வின்ப - 47
தண்செய்த - 90
தண்படு தாமரை - 58
தண்மலர் வாவி - 85
தந்தி யுலாம் - 85
தவமுதிர்ந் தோர்புகழ் - 54
தன்னந் தனி - 62
தன்னாண்மை காட்டி - 86
தன்னெண்ண - 88
தனிவேலன் - 38
தாகித்தவர் - 92
தாமக் கடம்பணி - 43
தாமக் கடம்பணி - 101
தாமரை வாவி - 96
தாயினை - 87
தாயொரு வேற்படை - 71
தானவர் கோனை - 47
திகழ்வேலணி - 83
திண்கழற் காலு - 101
திண்ணிய சீர்திகழ் - 52
திருகுற்ற கோட்டத் - 53
தினகர னாணயிற் - 46
தீயொரு கையில் - 100
தூதளங் காய் - 67
தெரியற் கடம்பு - 75
தெருள் பாண்டரங்கன் - 40
தென்பாண்டி - 45
தென்றமிழ்க் குன்று - 99
தென்னவர் போற்று - 59
தென்னாட்டின் - 87
தென்னைப் பொழின் - 78
தென்னையு - 69
தென்னையைப் போலு - 86

Koviloor Digital Library

தேங்கமழ் செச்சை - 51
தேராரும் வீதி - 65
தேவினத் தூடுயர் - 36
தேளிற் கொடிய - 78
தேனாருஞ் செச்சை - 92
தேனைப் பொழி - 78
தொண்டுண்ட - 43
தோலுடையார் - 46
நஞ்ச யின்றாரழற் - 96
நலங்கிளர் செந்தி - 51
நறவாருஞ் செச்சையந் - 43
நற்றேரு லாவு - 38
நற்றேவர்கோன் - 101
நன்மோக்க நல்கு - 54
நன்னலஞ் சேர - 84
நன்னெஞ்சர் - 38
நாடச்செய் தாண்டருள் - 54
நாலு மறையு - 61
நாவலந் தீவின் - 67
நானுனை - 89
நிசங்கண்ட - 91
நித்தியப் பித்தன் - 73
நிலைப்பான சந்த - 53
நின்னது சீடன் - 72
நின்னுருக் காண்டலு - 79
நீடிய செங்கரும்பு - 97
நீடும் புனல் - 42
நீர்த்தையல் - 94
நீலத்தினை - 84
நூன்மணக்கும் - 95
நெல்விளைக்கும் - 46
பகைக்கும் வெஞ்சூரனை - 66
பச்சைத் தினை - 85
பஞ்ச வன்னக்கிளி - 94
படங்கொண்ட - 35
படைவேல் - 53
பண்டே மயல் - 59
பண்மறை யார்க்கும் - 55
பத்தருக் கரதானா - 65
பரைதரு மைந்தரை - 64
பல்வரை யாடல் - 45
பற்றலர் தம்மை - 99
பற்றார் குலமழிக்குஞ் - 48
பனகத் தரசும் - 87
பனகமுண்டார் - 71
பனவர்க் கொராதர - 71
பன்னகத் தோகை - 50
பன்னருஞ் - 77
பன்னிரு கையுடைச் - 46
பன்னிரு கையுடைச் - 56
பனியாய கொங்கை - 68
பனிவேய் மலியும் - 81
பாகநயத்தமிழ் - 65
பாடிக் கொண்டாடுநர் - 41
பாதியுடம் - 68
பாம்பணி வார்தரு - 51
பாரணங் கின் - 41
பாவலர்க் காதாரமா - 57

Koviloor Digital Library

பாவியர் காணருஞ் - 42
பானற்கருங் - 72
பின்னாசை யற்ற - 42
புல்லுண் பவற்றை - 66
புழைகரத் தான்றுணை - 65
புள்ளி மயூரப் - 36
புள்ளிப் புலியுரி - 85
புள்ளுகைக்குந் திறற் - 46
புன்னைப் பொழின் - 34
புன்னையிற் - 70
பூட்கைப் புகர்முக - 74
பூணார மென்ன - 66
பூதல மாதிய - 90
பூமி யெங்கும் - 74
பூரண கும்பக்குட - 41
பெண்ணாளை - 70
பெருங்கோர - 85
பைந்தோகையூர் - 39
பைந்நாக - 81
பொங்கடமார் - 96
பொங்குள்ள வானந்த - 60
பொருந்தலர் வேரற - 47
பொருப்பன்ன - 63
பொன்சேர்ந்த செந்திற் - 48
பொன்மழு வேந்து - 97
பொன்னம் பொருப்புறழ் - 52
பொன்னாடர் - 77
பொன்னின் - 74
பொன்னு லகும் - 83
பொன்னுடையார் - 88
பொன்னூர் - 40
பொன்னைப் பெருக்கெழிற் - 54
பொன்னோங் - 68
போதுவந்தானை - 90
போற்று கின்றார் - 52
மங்குலுஞ் சோலை - 96
மங்கைய ராடன் - 52
மஞ்சவிர் சோலை - 89
மட்டாருஞ் சோலை - 89
மட்டின்மெய்க்கீர்த்தி - 85
மடற்றாழை - 62
மண்டல மெங்கும் - 44
மத்தன் மகன் - 90
மதனனு நாணெழிற் - 35
மந்தரக் கொங்கை மயிலே - 40
மந்தரக் கொங்கை - 91
மருமலர்ச் சோலை - 54
மலயக் கிரியில் - 37
மல்லாருந் திண் - 81
மலையுங் கடலு - 50
மற்சம ணாதிய - 60
மறுத்தவிர் சீர்திகழ் - 41
மன்றந் தொறும் - 40
மன்றுடையார் - 51
மன்றுவந்தாடும் - 99
மன்னருந் தேவரு - 88
மன்னுமெய்ச் சீர் - 60
மாகத்து மங்கையு - 65

Koviloor Digital Library

மாகாதங் - 68
மாங்கனி யொன்ற - 48
மாசொன்ன - 86
மாடிவர் - 63
மாடேறு மீசன் - 100
மாண்மக - 63
மாதுநல் லாரிட - 64
மாப்பட்ட வேலுடை - 48
மாயம் பெருத்த - 69
மாயிரு ஞாலம் - 56
மாரன் வெட்கும் - 80
மாழைக் குவடுறழ் - 98
மாற்றுரை யற்ற - 58
மான்மகளை - 70
மானும் வெட்கு - 66
மின்போலும் வேல் - 90
மின்போலும் - 34
மின்றயங் குந்தனிவேற் - 50
மின்னை வெல் - 88
மின்னைவிட் டாலென்ன - 63
மின்னோடு - 33
முக்கண்ணர் - 34
முக்கணர்க் குங்குரு - 63
முச்சிலொன் றேந்து - 67
முத்தமிழ்ப் பாவலர் - 95
முத்திரைக் கையினர் - 49
முந்நீரொலி மலியு - 48
முப்பத்து மூன்று - 98
முன்னமென் சொற்படி - 66
முன்னா ளொருவனி - 46
முன்னை விரத - 74
முன்னை வெஞ் - 86
மெய்தேறுவார் - 42
மெய்யாய வீடருளுஞ் - 53
மெய்வசந்தீர் - 93
மேனைதன் - 77
மைக்காலனை - 58
மைகுலவும் - 83
மைத்தகு கண்வள்ளி - 50
மைதொடுங் - 76
மைந்நிற வேட்கு - 89
மைப்படியு - 94
மையென்ன - 73
மொய்யுலவும் - 73
மோக மின்னாரிடம் - 98
வடுத்தாங்கி - 35
வண்கனகத் தனிவேற் - 38
வண்டென்ற கண்ணுடை - 45
வம்பிட்ட கொங்கை - 84
வயிரப்படை - 81
வயிரம் புனைந்த - 37
வலந்தாங்கும் வேலுடை - 39
வல்லாண்மை - 34
வல்விற் கரத்தர் - 40
வள்ளத்தன - 77
வளையுங் கலையு - 71
வன்மனச் சூரனை - 96
வன்ன மயூரப்பரி - 49

Koviloor Digital Library

வன்னியுங் - 69
வாசிக்கும் பூம்பொழில் - 52
வாடையிற் - 82
வாண் மெலிவின்றிய - 62
வாது விண்டார் - 93
வாதுடைச் சூரனை - 59
வாமாங்கனை - 97
வாயார வாழ்த்துநர் - 95
வாரொன்று - 94
வானத்து மங்கை - 80
வான்படுந் துன்ப - 51
வான்மயிலூர் - 59
விடையேறுவார் - 53
விண்டலத்தோர் - 84
விண்ணாடர் - 56
விண்ணூறு தீர்த்தருள் - 44
விரியும் பணாடவி - 58
விரும்ப வல்லார்க்கருள் - 47
வில்லடி யுண்ட - 81
வில்லிசைச்சீர் - 79
வீணை வல்லாரு - 75
வெஞ்சமர் - 82
வெண்பிறை - 84
வெம்மனத் தானவர் - 88
வெயிலேய்ந்த - 81
வெல்லு மருட் - 101
வெள்வனச் சேவலங் கையான் - 41
வென்றிவை வேற்படை - 51
வென்றுவெஞ் சூரனை - 46
வேகம்பெருத்த - 52
வேடிச்சி மைந்தர் - 61
வேண்டுகை - 33
வேணிக் கடுக்கைப்பிரான் - 35
வேதமுமாகம - 92
வேலைப் புனைந்த - 57
வேள்விரும்பு - 78
வையிலங்குங் கதிர்வேற் - 44

Koviloor Digital Library

திருப்புகலூர் பஞ்சரத்தினக் கோவை

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

அகள மென்ற - 114
அடங்காட்டுவார் - 112
அரவினும் - 106
அழகிய மங்கையர் - 113
அறைகழற்றாள் - 110
அன்று சுந்தரன் - 105
ஆரமுதே - 114
இருப்பு நெஞ்ச - 109
இன்றைக்கே - 110
ஊர்தொறு மிரந்துண் - 107
ஊராரிகழ் - 114
எம்மைநீ யடிமை - 110
கழகப் புலவோர் - 107
கிழவனென - 108
கூறொரு - 112
கொடியமதன் - 111
கொற்றவர்கள் - 109
சகிக்கரிய வினை - 108
சங்கணிந்த - 111
சிவன்றிரு வுரு - 114
சிவனே திருப்புகலூர் - 106
சிவனேமுக்கண் - 108
செங்குன்றூர் - 106
செஞ்சரத்தினக்கோவை - 115
சேரனன் னார் - 106
தமையளத்தற் - 105
தீரத்தனாகி - 107
நண்ணார்தம் - 112
நாடி நாடி - 110
நாதங் கடந்து - 111
நாயனைய - 106
நாளத் தனை - 105
நானந்த மங்கை - 112
நானிலத் திற்றின - 113
நேரார்தம் மிகல் - 107
பரவுபெரு - 114
பரியை நரியினை - 113
பிழையிதென்று - 112
புகலிக் கிறைவன் - 109
புங்கரனை வர்க்கும் - 107
புண்ணியந்தெரியு - 111
பொன்போன்ற - 105
மகிழ மாலிகை - 108
மாறாத துன்பம் - 108
மானணிந்த கையா - 109
மேலாயதாய் - 111
யக்கர்பிரான் - 105
யானிந்தவாறு - 109
யானு னக்கினிய - 107
வானிலிந் திரனா - 113
வெண்டிரு - 113
வேதியரிற் பற்பலர் - 110

Koviloor Digital Library

குமாரபுரி குகன் மும்மணிக் கோவை

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

இலையார்ந்த - 121
இறையளவேனு - 125
இனியகடலை - 119
உரங்கொண்ட - 124
உரையிறந் துற்ற - 123
உற்றவ ரென்ன - 120
ஏற்றுப் பரியாற் - 120
கந்தனென்று - 120
கனக மாலற - 124
காகாவென்று - 120
காங்கார் - 126
கார்முகில் - 119
கிழவனுருக் கொண்டு - 125
குகனைக் குமாரபுரி - 122
குருவென வுலகிற் - 123
கொய்ம்மலர் - 126
சரவுயிர் - 121
செம்மணிக் குன்று - 119
சேவேறுவார் - 124
தாமக் கருங்குழலார் - 122
தாயார் முதற்பகர் - 120
தெய்வத் திருமொழி - 122
தேசிகனை - 121
நந்தமர் செங்கை - 124
நானென்ற வாணவ - 124
புரிமருப் பாட்டின் - 123
பெரியவர் - 125
பெறுவாருக்கு - 126
முகமனன் றென் - 122
முற்றுநின் செயலென் - 125
வானவர்தம் - 123
வேலாயுதப்பெரும் - 122

Koviloor Digital Library

புதுவை சித்தி விநாயகர் மும்மணிக் கோவை

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

அருவபரவாதி - 129
அவமுயன்று - 131
அழிவில்பரமானந்த - 136
அளிமுரல்வெண்டாமரை - 132
ஆற்றுப் புனலும் - 130
எம்மானே - 137
ஏவற் றொழிற் - 133
குன்றிலொரு - 134
சித்திவி நாயகனே - 137
சீரார் தமிழ் - 129
சுடர்மூன்றுங் - 130
செயங்கொண்ட - 135
திருவருள் - 129
தெய்வ மாயிர - 130
தேவர்குலம் - 133
நகமகள் பயந்த - 135
நாமகட்போல்வார் - 134
படிமிகப் போற்றும் - 130
பரிக்குங் கரிக்கு - 136
பலாவும் பனையும் - 135
புண்பொலி - 136
புத்தியுளார் - 137
பொங்குமும் - 132
பொருட்பேய் - 132
போதகத் திருந்து - 134
மானீன்ற பெண் - 134
மானேருங் கண்ணியர் - 130
வாரணத்தை - 131
வாழு னான்மறை - 133
வான நாட்டினர் - 131
விளங்குந் துதிக்கை - 131
வெல்லங் கலந்த - 132

Koviloor Digital Library

திருவரங்க மும்மணிக் கோவை

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

அண்ண லந்தகை - 142
அரங்கன்ன - 148
அறிவோமென - 149
ஆதரிக்கக் குன்றெடுத்த - 149
இதம்பகரு - 143
இரவினுங் கரியா - 143
உதிரம் பருகி - 144
உரத்தே திருமகள் - 147
ஏசாரும் பொய் - 145
ஒண்டொடி - 145
காதன் மங்கையர் - 147
கொண்டலேழு - 146
கொற்றவரு - 146
சீரங்கக் கோயிற் - 145
செய்யுந் தனமும் - 142
திரிமூர்த் திகளுட் - 149
துணிவேண்டும் - 142
துயின்மறந்து - 147
துறவினருமில் - 148
நின்றாய் - 144
பார்கொண்ட - 146
பாரளந்து - 141
புகலரு மந்திர - 143
மரகத வெற்பா - 144
யான்சொன்ன - 141
யானைக் கோவொன் - 141
வாளுடைய - 144
வானவர்தாங் - 145
வித்தாயதன் - 148
வைத்தமுளெயிற்று - 142

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 43959

Koviloor Digital Library

KOVILOOR AMBAYA LIBRARY

Koviloor Digital Library

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் அனைத்துப் படைப்புகளையும் திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பாகக் கொண்டு வரும் திட்டம், கடந்த 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் முதல்கட்டமாக, சென்னை தரமணியில் இயங்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், கோவை சிரவணபுரம் கௌமார மடாலயமும் இணைந்து, முதல் இரண்டு தொகுதிகளை வெளியிட்டன.

தொகுதி – 1 – பிள்ளைத்தமிழ்

1. திருச்செந்தூர் வள்ளியம்மன் பிள்ளைக்கவி
2. பழனிப் பிள்ளைக்கவி
3. சென்னை மாநகர்க் கந்தசுவாமி பேரிற் பிள்ளைக்கவி
4. தேவை பிள்ளைக்கவி (தேவகோட்டை)
5. தில்லை பாண்டியநாயகன்மேற் பிள்ளைக்கவி

தொகுதி – 2 – கலம்பகம்

1. குன்றக்குடிக் கலம்பகம்
2. சென்னைக் கலம்பகம்
3. நெல்லைக் கலம்பகம்
4. பழனிக் கலம்பகம்
5. மயிலாசலக் கலம்பகம்
6. வீரைக் கலம்பகம்

இப்போது, 2023ம் ஆண்டில், இத்திட்டத்தின் 2ம் கட்டமாக, தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வாயிலாக, அடுத்தடுத்து நூல்கள் வெளிவருகின்றன. தொகுதி 3ல் 5 கோவை நூல்கள் வெளியிடப்படுகின்றன.

தொகுதி – 3 – கோவை

1. திருச்செந்தூர் அகப்பொருட்கோவை
2. திருப்புகலூர் பஞ்சரத்தினக் கோவை
3. குமாரபுரி குகன் மும்மணிக் கோவை
4. புதுவை சித்தி விநாயகர் மும்மணிக் கோவை
5. திருவரங்க மும்மணிக் கோவை

தாமரை பிரதர்ஸ் மீடியா
பிரைவேட் லிமிடெட்
www.vaasagarvattam.in

₹ 180
ISBN: 978-93-926017-7-4
9 789392 601774